எழுத்துக்களம்
வெளியீட்டகம்

கவிஞர் கவிவளவனின்



# முகநூல் சுவடுகள்

# முகநூல்

# சுவடுகள்

கவிஞர் **கவிவளவன்**

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்

செம்பாக்கம், **சென்னை**–600 073

**www.ezhuththukkalam.co.in**

**www.epublish.co.in**

**உரிமை:** ஆசிரியருக்கே!

முதல் பதிப்பு: பிப்ரவரி 2019

திருத்திய இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 2021

ஒளியச்சுக் கோவை, நூல் வடிவம்


**K P Asokan, M.A., M.Sc., M.B.A., M.C.A., LLB**

Please visit

**- www.thadaakam.co.in -**

a web magazine

**இந்நூல் விற்பனைக்கல்ல!**



இது ஓர்

**எழுத்துக்களம்** வெளியீடு

22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு,

செம்பாக்கம், சென்னை – 73.

அலைபேசி : 99400 61280

**www.ezhuththukkalam.co.in**

**www.epublish.co.in**

# இந்நூல்..........

எனக்கு முன்னவராய்;
என் முன்னோர்களில் ஒருவராய்,
எழுத்துலகில் முயன்று,
முழுவெற்றி காணும் முன்னே;
காலதேவனின் கணைகளுக்கு;
இரையாகிப் போன,
காலஞ்சென்ற என்னுடைய சித்தப்பா
தோழர் **K R பாஷியம்** அவர்களுக்கு!

# சுவடுகளின் தோற்றம்… … !

**படிக்க விழைவோர் அனைவருக்கும் வணக்கம்,**

வெவ்வேறுக் காலக்கட்டங்களில், அவ்வபோது, மக்கள் மன்றில் எழும் குழப்பங்கள், கூப்பாடுகள், வேட்கைகள், தாக்கங்கள் ஆகியவையின் மீதான எனதுப் பார்வையை முக நூலில் பதிவு செய்து வந்தேன். அவை யாவும், இணைந்து, கட்டுரைகள், கவிதைகள் அடங்கிய தொருத் தொகுப்பாக அமையும் நிலைக்கு வளர்ந்துள்ளன.

இடஒதுக்கீடு, நீட் தேர்வு, ஜல்லிக்கட்டு முதலானவை யாவும் இதனுள் அடக்கம். இவை யாவற்றின் மீதும் எனதுப் பொதுப் பார்வையே இங்கே விழுமியுள்ளன. பெரும்பாலான நல்ல விஷயங்கள் கூட, உண்மை யானத் தீர்வுநிலை எய்தாமல் போய் விடுகின்றன. அரசியல் தலையீடு முதலானவையே பெரும்பாலும் காரணமாகிறது. இவை அனைத்திலும் எனது கருத்தோடு, இளய தலமுறை எங்ஙனம் அவற்றை அனுக வேண்டும் எனவும் பதிவிட்டிருந்தேன்.

இப்பதிவுகளுள் சில இன்று **புலனம்** எனப்படும் WhatsApp-ல் அவ்வபோது, செய்யப்பட்ட சில பதிவுகளும் அடங்கும். யாவுமே பொது நிலைப்பாடு, மக்கள் நலன் கருதியவையே ஆகும். முடிவு அவரவர் கையில்! யான் வாழும் காலத்தின் நிகழ்வுகளில் நேற்றைய நிலைப் பாட்டினையும் அங்கங்கே பகிர்ந்துள்ளேன். இதனால், நல்ல தூய சிந்தை இளயரிடத்தில் தோன்றுமாயின் இறும்பூது எய்துவேன்.

இவற்றுடன், தமிழ், ஆங்கிலப்புத்தாண்டு , பொங்கல், தீபாவளி, கிறுஸ்துமஸ், ரம்ஜான், விடுதலைநாள் ஆகிய நாட்களில் எழுதிய வாழ்த்துக்களும் அடங்கும்! இத் தொகுப்பை 2019-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில், கட்டனமில்லா அன்புப் பரிசாக வழங்கினேன். சிலவற்றைச் சேர்த்தும் சிலவற்றை நீக்கியும், பிழை திருத்தியும் தற்போது வெளிவருகிறது. இறுதியாக, எங்களுக்கும் சின்னத் தம்பி ஆகிப் போன என்னுடைய சித்தப்பா அவர்களின் நினைவுகளைச் சுமந்த ஒரு கவிதையும்… !

**சென்னை 73,** — **நன்றியுடன்,**
**05-02-2021.** **கவிவளவன்.**




**“குடியரசு”** ஒவ்வொரு தனி மனிதனையும் இந்நாட்டின் மன்னராக்கிய நாள். 65 ஆண்டுகள் நிறைவெய்திய ஓர் ஆனந்தப் பெருமை நம்முள். நாம் கண்ட அளப்பரிய சாதனைகளும் இதனுள் அடக்கம். விண்வெளித் துணைக்கோள், செவ்வாய்க்குப் பயணம், கால வெள்ளத்தின், அசுர வேகத்திலும் பங்குகொள்ளும் விவேகமுடைய மக்கள்! வெவ்வேறு கலாச்சாரம், மொழி கொண்ட நம் நாடு, ஒரு துணைக்கண்டம். மக்களாட்சியின் மாண்பை முதலில் பறைசாற்றும் உன்னத நாடு. ஆட்சியாளர்களால், சில குறைகள் நிகழ்த்தப்பட்டாலும், மக்களாட்சியை விட உயர்ந்தது ஒன்றும் இல்லை. மக்களால், மக்களுக்காக நிகழ்த்தப் படுவது எனும் ஆப்பிரகாம் லிங்கன் வாக்கு பொய்யன்று. அந்நாட்டின் அதிபர் வந்து, பங்கு கொண்டு நிகழப் போகும், குடியரசு நாள் விழாவில் நாமும் பங்குகொண்டு, வேற்றுமையில் ஒற்றுமை எனும் நமது தனி மாண்பை என்றும் காத்து, மக்களாட்சியின் பெருமையை உலகுக்கு என்றும் காட்டி மகிழ்வோம்! **வாழ்க தமிழ்! வளர்க பாரதம்!! 25-01-2015**

## வீதியின் முடுக்கம்!

\# குப்பை குப்பையாய்க்
கோலங்கள்;
வண்ணங்களை இணைத்தோ,
இணைக்காமலோ!
மன எண்ணங்களின்;
தூரிகையோ!
யார்வீட்டு ஓவியமோ!
எவர் விற்ற மனப் புகையோ!

\# சாரை சாரையாய்,
இங்கும் அங்குமாய்
நடைப்பயணம்!



\# புரிதலோ,
அறிதலோ, தெளிதலோ,
இல்லாத தொடர்ப் பயணம்!

\# மனம் தாக்கும் வரிகள்!
மனித இனம் காக்குமோ!
எட்டு ஊர்களுக்கு முன்னே,
இடம் பிடிக்கும்;
தொடர் வண்டிப் பயணம்!

\# இயலாமையைக் கண்ட பின்பு,
இறுக மூடும் கண்கள்!

\# கானல் நீராய் தோன்றும்
வரிகள்!
மனித நேயம் காண்பது
எங்ஙனம்?
—0—

**தமிழும்; தொன்மையும்!** "**ப:றுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**" என்கிறார் இளங்கோ வடிகள். ஆழ்கடலுக்குள் எம் ஆருயிர் முனோர் என்கிறார் புலம் பெயர்ந்தத் தமிழர் ஒருவர். 'கடல் கொண்ட தென்னாடு' என இந்த வரலாற்றுச் செய்தியை கண்ணதாசன் ஒரு புதினமாகச் செய்தார். பொதுவாக, நம்நாட்டில் இத்தகைய ஆய்வுக்கு அதிகம் முனைப்பை அரசு காண்பிப்பதில்லை. மேநாட்டவர்கள் இன்னும் இந்த லெமுரியா எனப் படும் குமரிக் காண்டத்தை ஆய்வு செய்ய விழைவாயுள்ளனர். தமிழக அசரின் தொகுப்பான நூலுள் (பேராசிரியர் மதிவாணன் தொகுத்தது) முதற்சங்க காலம் கி.மு. 10527 என அறுதியிட்டு வரையறுத்துள்ளது. சமஸ்கிருதம், இந்தியாவில் இந்தி போல், ஒரு வழக்கு மொழியாக, தொடர்பு மொழியாக உருவாக்கப் பட்டது தான். தமிழினின்றும் பல சொற்களை இரவல் வாங்கித் தனதாக்கிக் கொண்டது என்பதனை, ஆய்வுச் செய்து, காட்டுகளுடன் வெளியிட்ட அறிக்கைகளை யெல்லாம், சீரிய ஆய்வுக்குப் பின்னாவது, ஏற்றுக் கொள்ளும் மனம் நமது இந்திய அரசுக்கும் வேண்டும். சொற்றோடர் அமைப்பு தமிழைப் போலத்தான் இந்திய மொழிகள் அனைத்திலும்,(தமிழ் நல்கியதுதான்- வடமொழி எனப் படும் சமஸ்கிருதம் உட்பட) எனும் உண்மையை (Dr. மு.வ. வின் மொழியியல் வரலாறு)அனைத்து 'இந்தி'யர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனித இனம் முதலில் தோன்றிய இடம், மனித நாகரிகத்தின் தொட்டில் இந்த லெமுரியாவைப்பற்றி ஆய்வு மேற்கொண்ட அறிஞர்கள் துணிகின்றனர். என்னுடையச் சின்னஞ்சிறு பிராயத்தில், எந்தையார் என்னிடத்தில் பகர்ந்த செய்திகளில் ஒன்றை இங்கு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். ஞாயிறு, திங்கள், செவ்வாய் என உலகம் முழுவதும், எல்லா மொழி, இன மக்களிடத்தும் வாரத்தின் நாட்கள் ஏழாகவும், அவற்றின் வரிசை கிரமம் ஒரே மாதிரியாகவும் இருப்பதில் இருந்து, அவை ஓரிடத்தில் இருந்தே உலகம் முழுமைக்கும் சென்றிருக்க வேண்டும் என்பார். அடிப்படையில் உயிர்களின் தோற்ற நிலையிலிருந்தே (Genetic) அவற்றிற்குப் பெயரிட்டவன் தமிழன். அவையாவன, வாழைக் கன்று, தென்னம் பிள்ளை, அணிப்பிள்ளை என்றவாறாக. **மாத்தளை 'சோமு'** என்பவர் இதனை ஆய்ந்து, காட்டுகளுடன் விவரித்துள்ளார். இதனைப்போல், எழுதி பெருமைப் பட்டுக் கொண்டிராமல், தமிழையும் ஒரு பாடமாக பயிலவும், ஆங்கிலத்திலிருந்து மொழி மாற்றம் செய்து (காரை ஓட்டு அல்லது விடு எனச்சொல்லாமல், எடு என்பது; லெப்ட் திருப்பு அல்லது ஒடி என்று சொல்லாமல் எடு என்பது ஆகியன) பேசாமல், முறையாகப் பேசும் வழக்கைக் கொள்ளத் தமிழர்கள் முதலில் முயலல் வேண்டும். —0— **வாழ்க தமிழ்**! **வளர்க பாரதம்**!!

## வாழ்த்து(க்)கள்..!



மனிதர்தம் வாழ்வியலைச் செம்மை படுத்தும் பொருட்டு, இம் மண்ணில் பல மாமனிதர்கள் முயன்றிருக்கிறார்கள். அவர்கள் அவதாரப் புருஷர்களாகவும், மகான்களாகவும், யோகிகளாகவும், இறைத் தூதர்களாகவும், வழிகாட்டிகளாகவும், குருமார்களாகவும் மக்களால் அறியப்பட்டு, அவர்தம் நன்நெறிகள், வெவ்வேறு காலக்கட்டங்களில், இனங்காணப்பட்டு, மக்களால், அவர்தம் புரிதலுக்கு ஏற்ப போற்றி பின்பற்றப் பட்டு வருகின்றன. அவருள் சிலரது, கோட்பாடுகளும், நன்நெறிகளும்; மதங்களாக மாற்றம் கண்டு, பெருவாரியான மக்களின், வழிகாட்டுதல் களாக நிலைபெறுகின்றன. அத்தகைய மகான்களில் ஒருவராகிய, இறைத் தூதராகவும், இறைவடிவமாகவும் அறியப்படுகின்ற, கிறிஸ்துவ மதத்தின், தோன்றலாகிய, ஏசு பிரானின், பிறந்த நாளாக கொள்ளப்படும் இந்நன்நாளில், அப்பெருமகனார் புகட்டிய "அன்பு வழியில்" ஒருவரோடு ஒருவர் உறவு பூண்டு மனித நேயம் கொண்டு வாழ்வோமாக!
25-12-2013

## தொல்லைக் காட்சி!



அழையாத விருந்தாளியாக நமது வீட்டினுள் அமர்ந்திருக்கும் தொலைக்காட்சி பெட்டிகள், நிகழ்ச்சி எனும் பெயரில் குப்பைகளைத்தான் குவிக்கின்றன. அவை ஏதோ ஒரு வகையில், நம்மை தம் பக்கம் ஈர்த்துக் கொள்கின்றன. தனியார் வருமுன், நகைச்சுவை எனும் பெயரில் 'காத்தாடி ' ராமமூர்த்திகள், பின்பு ஜூனூன் தமிழ். மொழிமாற்றம் எனும் பெயரில் சிதைக்கப்பட்ட தமிழ் 'ஹிந்திய ' ஆளுமையின் கீழ் இந்தியத் தொலைக்காட்சி (மக்களின் வரிப்பணத்தில்). தனியார் தொல்லைக் காட்சிகள் அப்பப்பா! செவ்விய மூளைச்சலவை. 'சன் 'னில் விகடனின் இரண்டு தொடர்கள் GDP ஏற்றும் முகத்தான் இழுக்கிறார்கள். வாசனின் பெயரன் எனும் போது இன்னும் வருத்தம்தான். நீயா நானா என்ன உருப்படியாக இருந்தது? அப்புறம், சேர்த்தல் என்பதாக, குடும்ப உறவுகளைக் கேவலப் படுத்தியது இன்னொரு நிகழ்ச்சி! செய்திகள் பற்றிக் கேட்கவே தேவையில்லை! 1977ல், முதல்வராயிருந்த அன்றைய முதல்வர், புயலுக்குப்பின் தஞ்சை, நாகைப் பகுதிகளை சுற்றிப் பார்த்தாரா? புடவை வேட்டி கொடுத்து, ஏழைப் பங்காளன் எனும் 'செல்லுலாய்டு ' மாயைக் கொண்டு 'ஆண்டவரானார் '. அவரே இலவசங்களின் பிதாமகன். கல்வியை வியாபாரமாக்கியப் பெருந்தகை! 24-11-2018

**நற்றமிழில் பேசுவோம்!** நற்றமிழில் பேசுதல் என்பது இயலாத காரியமன்று. நற்றமிழில் தான் பேசவேண்டும் எனும் எண்ணமோ அல்லது பேச இயலும் என்னும் நம்மபிக்கையோ நம்மில் பலரிடம் காணப்படுவதில்லை! நன்றாக தாய்மொழியைப் பேச வேண்டும் என்னும் உணர்வு படித்தவர்களுக்கே இல்லாத போது, படிக்காத பாமரனைக் குறை சொல்வதில் என்ன பயன்? இன்றைய இளைய தலமுறையிடமோ தங்கலீஷ் தான் விரவிக் காணப்படுகிறது. ஆங்கிலமாய்த் தமிழில் பேசுவது.

சிந்தையைத் தூண்டி செயல்பட, ஆக்க பூர்வ வெளிப்பாடுகளுக்குத் தாய் மொழியில் நல்லறிவு வேண்டும். ஆங்கிலத்தை அப்படியே மொழிமாற்றும், பேசும் வீட்டுப் பிள்ளைகளைத் திருத்த யாரேனும் முயன்றதுண்டோ! பிறமொழிச் சொற்களோ ஆங்கிலக் கலப்போ இல்லாமல் பேசுதல் என்பது சற்றுக் கடினம். தேவையற்ற இடத்தில் ஆங்கிலத்தின் நேரிட்ட மொழி மாற்றத்தைப் புகுத்தி, அலங்கோலப் படுத்துவதுதான் மிகப் பெரும் கொடுமை! நற்றமிழில் காரை (CAR) விடு எனச் சொல்ல வேண்டாம்; இயற்றமிழில் காரை ஓட்டு என்று சொல்லலாம் அல்லவா? யாவரும் என்ன சொல்கிறார்கள். TAKE என்பதை 'எடு' என மொழி பெயர்ப்பாக மொழிமாற்றம் செய்து பேசுகிறார்கள். காரை எடுப்பார்கள், ஓட்டமாட்டார்கள், விடவும் மாட்டார்கள், மாத்திரையை விழுங்க மாட்டார்கள், எடுத்துக்கொள்வார்கள். Left-ல் காரை திருப்ப மாட்டார்கள், எடுப்பார்கள். அந்த சாலையில் திரும்ப வேண்டுமா எனக் கேட்க மாட்டார்கள், அந்த சாலையை எடுக்க வேண்டுமா எனக் கேட்பார்கள். இந்த Bus, Mount Road எடுத்துட்டுப் போகுமான்னும் கேட்பார்கள். சொல்வளம் இல்லாத நிலையில் ஆங்கிலத்தில், Take என்பது பல நிலையில் செயல்படுவதைத் தமிழிலும் தாங்கும், வீட்டுப் பிள்ளைகளைப் பேரக்குழந்தைகளைத் திருத்துங்கள், எங்கோ படிக்காத, பாமரன், வயிற்றுப் பிழைப்புக்காக செய்யும் தவறைச் சுட்டிக்க்காட்டி பெருமை தேடிக் கொள்ளாதீர்கள் நண்பரே!

இடது, வலது எனச் சொல்ல வேண்டாம்; லெப்டில் திரும்பு, ரைட்டில் திரும்பு எனச் சொல்லுங்கள்; லெப்டில் எடு என்றல்லவா சொல்லுகிறீகள். ஜ, ஷ, ஸ ஆகியவை தமிழில் இல்லை என வருந்து கிறீர்கள்; வங்காளத்தில் 'வ' உண்டோ! எத்துனை இந்திய மொழிகளில், 'ள", 'ற" உள்ளன. உலகில் எம்மொழியில் 'ழ' உள்ளது. 'எ' 'ஒ' ஒலியுடைய சொற்கள் வட இந்திய மொழிகளில் எங்கு காணப்படுகிறது?

குழந்தைகளிடத்தில், வீட்டில் ஆங்கிலத்தில் தான் உரையாட எண்ணுகிறோம். மொட்டு, மலர், பழுப்பு, தளிர், துளிர், சருகு, இலை ஆகிய தனித்த சொற்கள் உலகில் எத்துனை மொழிகளில் காணப்படுகிறது. இதுவரை யாரேனும் படித்திருந்தால், நன்றி

**ஆங்கில மோகம்!** இருவர் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தால் அவர் இருவரும் தமிழர்தாம் என்பதில் ஐயமில்லை. கோலமிடுதல், தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, கோலாட்டம் ஆகியன வாகிய நம்மிடம் பழகி வந்துள்ள நம்முடையக் கலாச்சாரத்தின் அடையாளங்கள் எங்கேப் போயின. அப்பா "டாடி" யானதும் அம்மா "மம்மி" யானதும் தமிழகத்தில் மட்டும் தான். உதடுகளை அழுந்த ஒட்டி, ஓசையுடன் திறந்தால் அம்மாவும், மென்மையாக வளைத்து (உள் அழுந்த) ஒட்டித் திறந்தால் அப்பாவும் வெளிப்படும். வாழ்வியலுக்காக குடியேற்றம் பெற்றுள்ள குஜராத்தியர்கள் அவரது "பாங்ரா" நடனத்தை நவராத்திரி விழாவின் போது ஆடி மகிழத் தவறுவதில்லை. "இந்து மதம்" என்னும் ஆங்கிலேயர் ஏற்படுத்திய மதத்தின் பெருமை மிகு கோட்பாடுகள், தமிழர்தம் வாழ்வியலில் இருந்து வளர்ந்தவை தான். உங்களில் பலரும் இதனைப் படிக்கப் போவதில்லை என்பதும், சிலர் மட்டும் like கொடுப்பார் என அறிந்தும், எனது உள்ளக் கிடக்கை எழுதிவிட்டேன். படித்தோர்க்கு நன்றி!

நீயாகியர் என் கணவனை யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே! - இது பரிபாடலின் வரி. ஒரு பாடல், ஓர் ஓவியக் கண்காட்சிக்கு செல்லும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலானது. பெண்களின் ஓவியத்தை நீ பார்க்காதே!; ஆண்களின் ஓவியத்தை நான் காணமாட்டேன் என்பதாகும். யாரேனும் படித்தாலும் படிக்காவிட்டாலும் சரி, அறிந்ததைப் பகிர்ந்தேன்.



# சேக்கிழார்

இவரது இயற்பெயர், அருண்மொழித்தேவன், இவர் பிறந்த ஊர், போரூரை அடுத்தக், குன்றத்தூர். அவர் கட்டுவித்த சிவாலயத்தை இன்றும் அங்குக் காணலாம். தொண்டை மண்டல முதன்மையார் குலத்தில் தோன்றிய இவருக்கு, இவரது "கோத்திறம்" (குடும்பத் தலைவனுடைய, வழித்தோன்றலுடைய திறத்தைச், சிறப்பைக் குறிப்பது) எனப்படும் குலப்பெயராகிய, "சேக்கிழார்" என்பதே இயற்பெயராக நிலைத்து விட்டது. இரண்டாம் குலோத்துங்கன் அவையில் அமைச்சராக இருந்த இவர், 'உலகெலாம்' என இறைவன் அடியெடுத்துக் கொடுக்க திருத்தொண்டர் புராணம் எனப்படும் "பெரிய புராணத்"தை யாத்தார் என்பது மரபு வழிச் செய்தி. சிவனின் அம்சமாக, இறைவனே 'சுந்தரா வா" என தன்னை அழைக்க வெளிப்பட்டவராக கருதப் படும், சுந்தரராகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறாக தொடங்கப் பட்டு, பின்பு அனைவருக்குமானதே சேக்கிழாரது, பெரியபுராணமாகிய திருத்தொண்டர் புராணம். படித்தோருக்கு நன்றி!

# கற்கக் கசடற..!

எல்லோருமே டாக்டராகவும் இன்ஜினியராகவும் போகனும்னா, நல்ல வக்கீல் வேண்டாமா, ஆடிட்டர் ஆக வேண்டாமா, காஸ்ட் அக்கவுண்டன்ட், கம்பெனி செக்ரெடரி, இப்படி எல்லாத்துக்கும் மேலே, நிர்வாக இயல் எனப்படும், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், இவை யெல்லாம் பெருமையும் புகழும் தேடித் தராதா? மக்களுக்குத் தொண்டு செய்கிற இந்த பெருமை மிக்க அரசாங்கப் பணியைப் பற்றி யாருமே ஏன் நினைக்கிறதில்லே! இதுவும் போக, ஆசிரியாராகவும் பேராசிரியராகவும் தங்களுடைய வாழ் நாள் முழுவதும் தங்கள் மாணவர்களால் பெருமைப்படரவங்க இல்லியா? எல்லாத்துக்கும் மேலே, நீங்களே ஒரு முதலாளி ஆகலாமே! அது பெட்டிக்கடையிலேர்ந்து பெரிய பாக்டரி வரைக்கும் பொருந்தும் அல்லவா?. ஆனா, இவை எல்லாத்துக்குமே பெற்றோர்தான் காரணம்! படிச்சு பணம் பண்ணப் போற ஒரு எந்திரமா வளர்ற குழந்தைகள் மனசுல பணப்பேய் ஆக வேண்டும் என்ற நஞ்சக் கலக்குறதே பெற்றோர்தான்!, பெற்றோரை மட்டும் குறை சொல்லுறதுக்கு இல்ல! பணமும், பணம் சார்ந்த சொகுசு வாழ்க்கைதான் எல்லைங்ற இந்தப் புரையோடிப் போன சமூகச் சூழலை என்ன செய்ய இயலும்? இறைவா கொஞ்சம் திருத்து!

******

## இட ஒதுக்கீடு! (05-02-2017)

இஃது இன்னும் முழுமையாக பயன் தரவில்லை என்பது வெள்ளிடைமலை. அட்டவணைப் பட்டியலில், தமிழகத்தில், இரண்டு பெரும் பிரிவுகளில் அடங்கும் சமூகத்தில் ஒரு பகுப்பார் மட்டுமே நல்ல முன்னேற்றம் கண்ட நிலையில், மற்றவர் பெரும்பாலும் பின் தங்கிய நிலையே! தஞ்சைப் பகுதியயிலும், சென்னைப் பகுதியிலும் பெரும்பான்மை வாழ்கிறார்கள். அவருள் ஒருசிலர் மட்டுமே, குடிமைப்பணி தேர்வில் வெற்றி கண்டு, நம் நாட்டு ஆட்சித் துறைக்கு வந்தனர். மற்ற பிரிவினர்க்கு பின்புலமாய் நின்றது, பொருளாதாரமே! நெல்லை மாவட்டத்தில் வேளாளர்கள், நாயக்கர்களுக்கு அடுத்த நிலையில், நிலக்கிழார்கள் அவர்களே! மரக்கறி மட்டுமே உண்ணும் வேளாளர்களின் நல்ல முன்னேற்றம், அரசர் காலத்தில், அமைச்சர்களாய் இருந்து, தமிழகத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களில் பின்புலமாய் நின்றதுதான். துளுவ நாட்டு வேளாளர்கள், சோழ நாட்டவரைவிட, முன்னேற்றம் கண்டது, இட ஒதுக்கீடு முதன் முதலில் பெற்றது மட்டுமல்ல, சென்னைப் பகுதியில் வாழ்ந்ததும் தான் காரணம். கொங்கு நாட்டு வேளாளர்கள் தற்போது தான் அரசுப் பணி களைக் காணத் தொடங்கியுள்ளனர். முக்குலத்தோரில், இருபிரிவினரை குற்றப் பரம்பரையாக ஆங்கில அரசை அறிவிக்க வைத்ததும் ஆதிக்கம் கொண்டோரின் இழி செயலே! அதுதான் இன்றைக்கு அவர்களிடம் ஆளுமையைத் தூண்டுகிறது. இட ஒதுக்கீடு இன்னும் பல ஆண்டுகள் தேவை. அது, இரண்டு தலைமுறைக்கு மேலாக, கல்வியறிவு பெற்றவரின் வாரிசுகளை நீக்கி, பிற்படுத்தப் பட்டோர் எனும் தனிப்பிரிவு இல்லாமல், மொத்தமாக 35 சதவீதம் எனும் நிலை வந்தால், அலுவலகத்தில், கல்விக்கூடங்களில், நிகழும், காழ்புணர்ச்சி கொண்ட பார்வை அகலும். சலுகை என்பது ஜாதியுடன் பெற்றோரின் கல்வியையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

**05-02-2017**



**வ**ள்ளல் பெருமான் எனப்படும் இராமலிங்க சுவாமிகள் தனது ஒன்பதாவது வயதிலேயே சென்னை லிங்கிச்செட்டித் தெருவிலிக்கும் மல்லீஸ்வரன் கோவில் அருகில் உள்ள ஒரு கட்டிடத்தில் (தற்போது அங்கு மறைமலை அடிகள் நூலகம் என்னும் பெயரில் ஒரு நூலகம் இயங்குகிறது. அனைத்துத் தமிழ் நூல்களையும், அங்குக் காணலாம். பழையன, பெருமை வாய்ந்தன வாகிய நூல்களைக் கொண்டிலங்கும் ஒரு நூலகமாக அது, இயங்குகிறது) சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அதன் நினைவாக பதிப்பிக்கப் பட்ட கல்வெட்டு ஒன்று இன்றும் அங்கு உண்டு. சொற்பொழிவு ஆற்ற வேண்டிய தனது தமையனாருக்கு உடல் நலிவுற்ற போது, அவ்வாறு நிகழ்த்தினார் என்பது செய்தி. அடுத்து, அவர் வாழ்ந்த காலத்தில், சென்னை கந்த கோட்டம் எனப்படும் முத்துக்குமரசாமி கோவிலிலிருந்து தினந்தோறும் காசிமேடு பகுதியில் இருக்கும் (இன்றும் கடல் உள்வாங்கி சிதிலமடைந்துள்ளது) பட்டினத்தாரின் சமாதிக்குச் செல்வதுண்டாம். அவ்வமயம், கிளைவ் பேட்டரி (கிழக்திந்திய கம்பெனியில் இருந்த ராபர்ட் கிளைவ் தான் அது) அருகில் வாழ்ந்திருந்த ஒரு சன்னியாசி, கடந்து செல்லும் ஒவ்வொரு மனிதரையும் விலங்குகளின் பெயரால் அழைத்த போது, இவரை மட்டும் "மனிதன் போகிறான்" எனச் சொல்வாராம். இது செவி வழிச் செய்தி மட்டுமே! (மேற்சொன்ன அந்த நூலகம் தற்போது, இடம் மாறிவிட்டதாகத் தகவல்) —0—



**ந**ம்முடைய பாரத மாதாவைப் பற்றிய ஒரு செய்தி. 22 மொழிகள் தேசிய மொழிகளாகவும், ஆங்கிலத் தோடு இந்தி அலுவல் மொழியாக உலாவந்தாலும், பல்வேறு கலாச்சாரப் பண்பாடுகளை உள்ளடக்கிய நம் பாரத துணைக் கண்டத்தில், அன்னை பாரத தேவி சேலை உடுத்தி இருப்பது ஒரு தமிழச்சியைப் போல் தான். —0—

**எ**ன்று நமது நாட்டில் நிலவும் வரி ஏய்ப்பும், அதனால் விளையும் கறுப்பு பணமும் ஒழிக்கப் படுகிறதோ அன்று தான், நாம் நல்ல பல முன்னேற்றங் களைக் காண முடியும்.



## வலைத் தமிழ்!

வேண்டியது வேண்டாத வியனுகம் தேடாத,
மாண்பிலாச் செய்திகளை மயக்குறு மொழியாலே;
தீண்டாமல் அடுத்தவர்க்குத் தருவதே பணியாக,
வேண்டுதலாய் வாழுகின்ற விந்தை மாந்தர்களே!

உட்பொருள் பார்த்தீரோ! உருப்பொருள் அடைந்தீரோ?
தட்டி அனுப்பிவிட்டு தகைவுடனே வாழுகின்றீர்!
தட்டாமல் செய்திகளைப் படிக்கின்ற மக்கள்தாம்,
தட்டமாலைச் சுற்றாமல் தடுக்கி விழுகின்றார்!

கொட்டிய மணலிடையேச் சர்க்கரைத் தேடுவதாய்,
முட்டியதும் அழுந்திடவே முகுதும் வளைந்திடவே,
தட்டாமல் பார்க்கையிலே அழுதிடுமே கண்கள்தாம்!
திட்டமாய்த் தொடாமல், தள்ளியே வைத்தாலும்;

நோக்கும் விழியதுவும் நாடிவிடச் செய்கிறதே!
தாக்கும் விரல்வலியும் தலைவலியும் சேர்கிறதே!
காக்கும் கடவுளெலாம் கரங்கோத்து சிரிக்கின்றார்!
சீக்காய் அறிவியல்சீர் சீழ்பிடித்துப் போனதுவே!
**கவிவளவன்**, **21-04-2020**

**தமிழில் பேசுவதை** தரக்குறைவாகவும், தமிழை ஒரு மிலேச்ச மொழியாகவும் கருதினால் அவன் தமிழனாகத்தான் இருப்பான். தமிழ் எனச் சொல்ல மாட்டான், " 'டெமில்' ஒரு நல்ல லாங்க்வேஜ் இல்லே. ஜ, ஷ, க்ஷ ங்கற எழுத்தெல்லாம் இல்லே. இந்தி படிச்ச பாம்பே போலாம்" என்று பேசும் இனிய டமிளர்களுக்கு, டமில்லே மட்டும் தான் 'ழ' இருக்கு, தமிழ் செறிவார்ந்த இலக்கண மரபுடைய, தனித்தியங்கவல்ல செம்மொழி என்பதெல்லம் தெரியாது. இந்திய மொழிகள் யாவற்றுக்கும் சொற்றொடர் (வாக்கியம்) அமைப்பை நல்கியது தமிழ் என்பதும் எப்படித் தெரியப் போகிறது.

# கம்பனும் பாரதியும்!

**கம்பனைப் போல், வள்ளுவனைப் இளங்கோ போல் பூமிதனில் யாங்கனுமே பிறக்கவில்லை, உண்மையிது கண்டீர்** எனும் பாரதியின் வாக்கு பொய்யன்று. அது கண்ணதாசனை **வள்ளுவன், இளங்கோ, பாரதி என்றோர் வரிசை** என **கம்பன் ஏமாந்தான்** எனும் பாடலில் பாடவைத்தது. "கம்பனுக்குச் சடையப்ப வள்ளல், வள்ளுவனுக்குச் சங்கப் பலகை, இளங்கோ இளவரசன், எனக்கு கைதட்டலோடு காசும் கிடைக்கிறது. ஆனால், எதிர்காலத்தை மட்டுமே மனதில் கொண்டு, கேட்பவர் இருக்கிறாரோ இல்லையோ என எண்ணாதுப் பாடியவன் பாரதி" என்கிறான் கண்ணதாசன். வால்மிகீயின் இராமகாதையைத் தவிர்த்து வேறு ஒன்றைப் புனைந்திருந்தால் இன்னும் உயரச் சென்றிருப்பான் கம்பன். உவமான உவமேயங்களில் கம்பனுக்கு நிகர் உலகில் எக்கவிஞனும் இல்லை என்பார் **நாமக்கல் கவிஞர் வே. ராமலிங்கம் பிள்ளை** (கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது எனவும், தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா எனப் பாடியவர் இவர்தான்) கம்பன் ஓரிடத்தில், சூரிய அஸ்தமனத்தை உவமையாக்கினால், அடுத்து உதயத்தைத் தான் சொல்வான், அப்பாடல், 100, 500 பாடல்களுக்கு அப்பால் இருந்தாலும் என்கிறார் இவர். விருத்தப் பாக்களை விருப்ப மாக்கியவன் கம்பன். ஐஞ்சீர் விருத்தம் கம்பன் மட்டுமே கையாண்டுள்ளான். குகப் படலத்திலே இருநூறு பாடல்கள், குகன் கூற்றாகப் புனைந்திருப்பான், அதில் ஓரிடத்தில் கூட, இராமன் என்னும் நாயகன் பெயரைச் சொல்லாது பாடல் புனைந்திருப்பார். **அஞ்சல வண்ணன்** என்றவகையில் தான் இராமனைச் சுட்டியிருப்பார். இராமனை பெரும் அவதாரப் புருஷனாக்கியது கம்பனில் வரிகளே!. இவனுக்குப் பின்னால் பலரும் கைகொண்டனர் விருத்தப் பாக்களை. அடியேன் கூட அடிக்கடி அறுசீர் விருத்தம் போல் எழுதுவதுண்டு. 32 சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் வரைப் பாடியவர் **வள்ளலார்** எனும் இராமலிங்க சுவாமிகள். 19-10-2019



**கவிஞர் வாலி:-** பொதுவாகப் படைப் பாளிகள் அனைவரிடத்தும், ஒரு தனித் தன்மையைக் காட்டும் விதமாக ஒரு விதச் செருக்கு அமையும். அதிலும் சிறப்பாக, கவிஞர்கள் எனும்போது, அந்தத் தனித் தன்மையில் ஒரு மிடுக்கும் உண்டு. பொதுவாக அனைத்துக் கவிஞர்களுமே வெள்ளந்தி யானர்வர்கள். குழந்தை மனம் உண்டு. ஆயினும் அந்த மிடுக்கு, யாவரையும் அனுகிச்செல்லும் போது அச்சம் கொள்ளவேச் செய்யும். ஆனால் கவிஞர் வாலி, அதனினும் மிக எளிமையானவர் என்பர். கவிஞர் கண்ணதாசனின், "**மயக்கமா, கலக்கமா**" எனும் பாடலே தன்னை ஊக்கப்படுத்தி, திரையுலகில் நிலைபெறச் செய்தது என்பதை நெஞ்சுருக பல இடங்களில் நினைவு கூர்ந்தவர். இராமானுஜ காவியம், கிருஷ்ணர், இராமர் ஆகியோரைப் பற்றிய காப்பியங்களை தனக்கே உரிய நடையில் பதித்து தனக்கென நிலைத்த புகழை ஏற்படுத்திக் கொண்டவர். எல்லோருக்காகவும் எல்லா நிலையிலும் பாடல் எழுதி நான்கு தலைமுறைகள் திரையுலகில் கோலோச்சியவர். தன்னோடு வாழ்ந்தவர்களை, தன்னை வளர்த்தவர்களை, உடன் வளர்ந்தவர் களை அவ்வபோது, எழுத்தில் நினைவு கொண்டு போற்றுபவர். கண்ணதாசன் கவிஞராகப் பிறந்தவர், தான் கவிஞராக வளர்ந்தவன் என பெருந்தன்மையோடு கூறிக் கொள்பவர். தனிநடை கொண்டு அவர் நல்கியக் காப்பியங்கள், அவருடைய திரையிசைப் பாடல்களுக்குப் பின்னாலும், காலம் கடந்து அவர் பெயர் சொல்லும் என்பதில் ஐயமில்லை. அரை நூற்றாண்டு காலம், திரையிசையில் பாடல்கள் புனைந்து, அதிகமான பாடல்கள் இயற்றியவர் எனும் பெருமை யுடையப் பேற்றினையும் அடைந்தவர்.

**அ**லங்காரமாய் **ஆ**க்கிய
**இ**னிமையை **ஈ**ன்ற
**உ**ன்னத **ஊ**ருணியாய்
**எ**ளிய **ஏ**னைய **ஐ**யமில்லா
**ஒ**ற்றுமையுடன் **ஓ**ங்குபுகழ்
**ஔ**வையே! - (சும்மாச்சும்
அ முதல் ஔ வரை)

**ஆமையும் அமீனாவும்!** ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் விளங்காது எனும் மொழி ஓரிரு நூறாண்டுகளாய் நம்மிடம் வழங்கி வருதல் காண்கிறோம். அமீனா எனும் சொல் பாரசீக மொழினின்று வந்ததாகவும், ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின் நம்மிடம் வந்ததாகவும் அறிகிறேன். பொதுவாக, அமீனா என்பவர், உரிமையியல் நீதி மன்றங்களிலிருந்து, வழக்கு தொடர்ந்தவர், எதிராளியின் வீட்டைக் கையகப் படுத்தும் அறிவிப்பை கொண்டுவருபவர். அதன் பின் அவ்வீட்டின் வீட்டில் உள்ளோர் நிலை என்னாகும் எனச் சொல்லத் தேவை யில்லை. இங்கே ஆமை என்பது, உயிருள்ள படைப்பு அல்ல. மனிதனிடம் புரையோடிப் போயுள்ள, அறியாமை, இயலாமை, பொறாமை, விளங்காமை, இல்லாமை, ஆற்றாமை, கல்லாமை ஆகிய ஆமைகள்தாம். அதாவது, இத்தகைய ஆமைகள் வீட்டினுள் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதாம்.

இதுபோல், பண்டு ஒரு திரைப்படத்தில் தவறாகச் சுட்டப் பட்ட ஒரு பழம் பாடலும் உண்டு. அ∴து, "கொண்டு வந்தால் தந்தை, கொண்டு வந்தாலும் வரவிட்டாலும் தாய், சீர் கொள்வாள் சகோதரி, கொலையும் செய்வாள் பத்தினி" என்பதாம். அது, நற்பெயரைக் கொண்டு வந்தால்தான் தந்தை மகிழ்வார், தவறுகளை உடனே மன்னிக்கும் குணம் தாயுடையது. சிறந்த குணங்களைக் கொண்ட சகோடதரனிடம் தான் சீரை பெற்றுக் கொள்வாள் உடன் பிறந்தவள், அத்தகைய நல்ல குணம் கொண்ட தன்னுடைய கணவன் பெயருக்கு தீங்கு நேரும் போது, கணவனுக்காக கொலையும் செய்வாள் மனைவி என்பதாம். வறுமையோ வளமையோ, அன்பு என்பதும் மகிழ்ச்சி என்பதும் நல்ல உள்ளத்தில் விளைவது!

***************

**கவிஞரும் கலைஞரும்** தன்னுடைய தி.மு.க. அரசியல் வாழ்வைக்கொண்டே தனது சுயசரிதைக்கு "வனவாசம்" எனப் பெயரிட்டதாக எழுதிய கண்ணதாசனே, தனது திரையிசைப் பாடல்கள் இரண்டாவது தொகுதியில், ஐந்தே பாடல்கள் எழுதியிருந்த என்னை கவிஞர் என அறிமுகம் செய்த என் இனிய நண்பர் கருணாநிதி அவர்களுக்கும் நன்றி என்கிறார். மேலும் கவிஞர் மறைந்த போது, கலைஞர், தனதுப் பேட்டியில் கூறியது. நேற்று என்னுடைய பேரன் எனது மார்பில் படுத்திருந்தான், என்னைக் காலால் உதைத்தான், கண்ணத்தில் அடித்தான், அதுபோலத்தான் கவிஞர் எனக்கு என்றார். *************

## சிலப்பதிகாரம் பற்றி ---- !

யான் இப்பகுதியில் எழுதுவனவற்றை எத்துனைப் பேர் மனமுவந்துப் படிக்கிறீர்கள் என்பதை அறிகிலேன். ஆயினும் யாரேனும் ஒருவர் படித்தாலும் இறும்பூது எய்துவேன். செய்திகளை மறுப்பதாக யாரும் எண்ண வேண்டா. கொஞ்சமேனும் நற்றமிழ் அறிவு கொண்டவன் என்னும் வகையில் அறிந்தனவற்றை பகிர்ந்து கொள்ளும் கடப்பாடுடையவன். நிற்க, தேவதாசிகள் என்போர் இறைபணிக்காக தங்களை அற்பணித்துக் கொண்டோர். கோயில்களில் ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதே இவர்கள் வேலை. மன்னர் மன்னனாகிய இராஜ இராஜன் காலத்தில் இன்றைய ஆந்திர மாநிலப் பகுதியிலிருந்து, தஞ்சை மாநகருக்கு வந்தவர்கள் என்பர். அங்கு, சோழ மண்ணில், சிறப்பாக இன்றைய தஞ்சைப் பகுதியில் வாழ்ந்த பெருநிலக்கிழார்களாலும், அப்பெண்டிரது விழைவுகளோடும், ஏற்பட்ட மாற்றமே, நிலைப்பாடே, தேவதாசி என்பது வெறு பொருளுடன் வழக்குடைத்தாயிற்று. சங்க இலக்கியத்திலும், சிலப்பதிகாரத்திலும் கூறப்படுபவர் 'பரத்தையர்' எனப்படுவர். அவ்வினவாயினவளே மாதவி. அவள் 64 வகை ஆடற்கலைகளில் சிறந்தவளாக இருந்திருக்கிறாள். 'கற்பு' என்பது, மேடைப்பேச்சுக்களிலும், சினிமாவிலும் கருப்பொருளாகி விட்டது. .

## நற்றமிழ் வளர விழைவோர்க்கு ஒரு குறுஞ்செய்தி:

பாவேந்தர் பாரதிதாசனின் அன்பு மாணாக்கராகவும், அனுக்கத் தொண்டராகவும், விளங்கிய கவிஞர் பொன்னடி **(திறந்தவெளி கவியரங்களின் தாயாகிய கடற்கரைக் கவியரங்கத்தைத் தோற்றுவித்து இன்றும் நடத்தி வருபவர்; பாவேந்தர் தோற்றுவித்த தமிழ்க்கவிஞர் மன்றத்தை இன்றும் தொடர்ந்து நடத்தி வருபவர்; தாயெனும் கோயிலைக் காக்க மறந்திட்டப் பாவியடிக் கிளியே எனும் திரைப் பாடலை எழுதியவர்)** ஒருநாள் பாவெந்தருடன் அளவளாவும் போது, ' ஐயா குற்றியலுகரப் புணர்ச்சி விதியின்படி, "தமமிழுக்கமுதென்றுபேர்" என்றாகிவிடும் என்றா 'ம்' என்ற ஒற்று சேர்த்தீர்கள்' என்று கேட்ட போது, அவர், அவ்வாரில்லை; தமிழுக்கும் அமுதென்றுபேர் இன்ன பிறவற்றுக்கும் அமுதென்றுபேர் என்றுதான் எழுதினேன் என்றாராம். அதாவது, மற்றவையும், மற்ற மொழிகளும் அவ்வாறே ஆகும் என்பதாம். ===#===

**NEET தேர்வு** குறித்து, எண்ணற்ற விவாதங்கள் இங்கே உலாவின. தேவையா, இல்லையா, கல்வித்தகுதி, தரம் முதலான நிலை குறித்தும் இடையே குற்றச் சாட்டும் உண்டு, மாநிலங்களுக்கு இடையே, சீரான கல்வி முறை ஆகிய பலப் பல விவாதங்கள். இங்கே நான் பதிப்பிக்க விழைவது ஒரே கேள்வி.12 ம் வகுப்பு தேர்ச்சி யுற்றபின் ஒரு தகுதித் தேர்வு எதற்கு? அப்போது, 12 வகுப்பு என்பது என்ன? முன்பு Interview எனப்படும் நேர்காணல் மட்டுமே இருந்தது. அது, தகுதிக்கான தேர்ச்சி நிலை அன்று. மாணவரது, பின்னணி முதலாவற்றை அறிந்து, பின்பு சேர்த்துக் கொள்ளல் என்பதாம்!

ஈண்டு, யான் கேள்வியுற்ற சம்பவத்தை பதிவிட விழைகிறேன். அரசு அலுவலகத்தில், பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி யுறாத நிலையில், கடைநிலை ஊழியராக் சேர்ந்த ஒருவர் பின்னாளில் பள்ளிக் கல்வியைப் படித்து முடித்து, மாலை நேரக் கல்லூரியில், புகுமுக வகுப்பில் தேர்ச்சியுற்றுப் பின் பட்டமும் பெற்று, அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக, பதவி உயர்வும் பெற்ற நிலையில், அவருக்கு, சட்டம் பயில ஆவல் பிறக்க, மாலை நேரக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கிறார். நேர்காணலில், சட்ட கல்லூரி இயக்குனர் என்னவாக பணி செய்கிறீர்கள் என்ற போது, இளநிலை உதவியாளர் எனும் பதிலைக் கேட்டவுடன், உங்களுடைய வயது, அதிகமாக உள்ளதே என்ற கேள்விக்கு, கடைநிலை ஊழியாரகச் சேர்ந்தது, பின்பு பட்டம் பெற்றது யாவையும் கேள்வியுற்றவுடன், " தங்களுக்கு இடம் தருகிறேன், படியுங்கள்" என்றாராம் இதுதான், நேர் காணலின் பலன்.

நுழைவுத் தேர்வு என்பது, பயிற்சி வகுப்பு களில் சேர்ந்து 'மனனம்' கலாச்சாரத்தில்,வெற்றி யடைதல் எனும் நிலையை மட்டுமே உண்டு பண்ணும். இது, நகர்ப்புர, வசதி படைத்தோருக்கு மட்டுமே செயல் படுத்தக் கூடியதாக அமையும்,. பனிரெண்டாம் வகுப்புத் தேரிய பின்பு, இன்னோரு தேர்வு எதற்காக?! அனிதாவின் மதிப் பெண் கடந்த ஆண்டுகளில், மருத்துவ வாய்ப்பைக் கொடுத்த போது, இவ்வாண்டு, இல்லாது போதல் எவ்வகையில் சரி?

மாண்புமிகு ம.கோ.ரா தான், தமிழகத்தில் நுழைவுத் தேர்வு முறையைக் கொணர்ந்தார். புகுமுக வகுப்பை ஒழித்து, மேல்நிலைக் கல்வி யென பள்ளிகளில் செயல் படுத்தினார். நுழைவுக் தேர்வு என்பது, படித்து முன்னேறிய நகர்ப்புர மக்களுக்கு மட்டுமே பயன் தரவல்லது. அதிலும் சிறப்பாக, பொருளாதாரத்தில் மேம்பட்ட சமூகத்துக்கே நன்மை பயக்கும்!

காமராஜர் கொண்டு வந்த, இலவசக் கல்வியை தமிழ் நாட்டில் அடுத்த இருபது ஆண்டுகளில் வியாபாரப் பொருளாக்கியவர் மாண்புமிகு ம.கோ.ரா.

**பொள்ளாச்சி** இயற்கையின் அழகும், எழிலும், வளமும் ஒருங்கே அமையப்பெற்ற ஊர். சில ஆண்டுகளுக்கு முன், கவிஞர் வைரமுத்து, பொழில் சூழ் ஆட்சி என்பதே பொள்ளாச்சி ஆகிவிட்டது என்றார். ஆனால், கவிஞர் பொன்னடியான், புள் (பறவை) ஆட்சி என்பதே பொள்ளாட்சி ஆக மருவியது என்கிறார். பொழிலும், புள்ளாகிய பறவையும் இயற்கையின் வண்ணங்கள். அழகின் வெளிப்பாடுகள். கொங்கு நாடு எனப்பட்டாலும், கொங்குவெளி என்றாலும், நம்முடைய சேர நாட்டின் சுவடுகளாய் இன்னும் நம்முடன் இருப்பவை, பொள்ளாச்சி, கோவைப் பகுதிகள் தான்.

சென்னையில் பேச்சு வழக்கில் பல பெயர்கள் மருவியுள்ளன, சென்னையில் மட்டுமல்ல, தமிழகமெங்கும் உண்டு. அதுபோல், கொலைகாரன் பேட்டை ஆகி இருக்கலாம், சிறுதறிப்பேட்டை, சிந்தாதரிப்பேட்டை ஆனது. மூதூர் மதுரையானது. இதனை மருதை எனப் பேச்சுவழக்கில் கூறப்படுவதன் காரணம், மருத மரங்கள் நிறைந்த பகுதி எனும் செய்தியும் உண்டு. திருவரங்கம், வடமொழியாய் ஸ்ரீரங்கம் ஆனதோ, ஸ்ரீரங்கம் தான் தமிழில் திருவரங்கம் ஆனதோ. தமிழில், திரு வுடைய பெயர்கள் ஏராளம், திருப்பூர், திருவாரூர், திருநெல்வேலி, திருப்போரூர், திருச்செந்தூர், திருநெல்லிக்காவல், திருவண்ணாமலை, திருநீர்மலை, திருவிடைமருதூர், திருப்பதி, திருத்தனி, இப்படியாக, எனவே, தமிழ்தான், ஸ்ரீரங்கமாக திரிந்திருக்க வேண்டும். சென்னையில், Hamilton Bridge, அம்பட்டன் பிரிட்ஜ் ஆகி, பின்பு அம்பட்டன் வாரவதியாகி பின்பு Barbers Bridge ஆனதுதான் மிகச் சிறப்பு.

## விநாயகர் சதுர்த்தி!

விருந்தோம்பல் இல்லாது;
வீடுதேடி வருகின்ற நாயகனை,
தெருவெங்கும் நிறைந்தானை;
தென்னகத்து மாப்பிள்ளையை,
மராத்திப் பெருமன்றில்;
மாண்புகள் கொள்வானை,
விரட்டாது வேண்டிடலாம்;
வேண்டியதைத் தந்திடுவான்!



**13-09-2018**

**இந்தி எதிர்ப்பு!** இந்தி எதிர்ப்பு என்பது மொழி ஆளுமை, அதன் மூலம், ஏனையோர் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படும் வாய்ப்பு என்பதாகத்தான் வளர்ந்தது. அது பின்னாளில் அரசியல் முக்காடிட்டுக் கொண்ட போது, முகம் தேய்ந்துக் கோரமாகிவிட்டது. எம்மொழியும் தாய் மொழியாய் கொண்டோர்கன்றி மற்றையோர்க்கு அன்னிய மொழிதான். எவராலும் தாய் மொழியில் தான் தன் கருத்துக்களை செவ்வனே சிந்திக்கவும், கருத்துக்களைப் பதிவு செய்ய முடியும் என்பது இயன் நிலை.

நம்மூர் கறிகாய் கடையிலிருந்து, டீ கடை வரை இந்தி பேச முற்பட்டுள்ளனர். யாவும் வணிக உத்திதான். தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலை அனைத்திலும் கட்டணம் வசூலிப்போர் இந்தியில் தான் பேசுவர். அனைத்து ஒட்டுனர்களும், வாழ்வாதாரத்திற்காக, இந்தியர்களாய் வாழ இந்தி கற்றுக்கொள்ள வேண்டிய நிலை.

கல்வியறிவு இல்லாத நிலையில் பிறமொழி தெரியாத நிலையில், எல்லா மாநிலத்தினின்றும் சிலர் சென்று தலைநகர் நிஜாமுதீன் தொடர்வண்டி நிலையத்தில் நிற்கும் போது, தாய் மொழி இந்தியாக கொண்டவரை விடுத்து ஏனையோர், பரிதாபமாக அடுத்தவர் உதவியை எதிர் நோக்கும் நிலை. ஏனெனில் அறிவிப்பு ஆங்கிலம் இந்தியில் மட்டுமே இருக்கும். தாய் மொழியாக இந்தியைக் கொண்டோர் இந்தியாவில் எங்கு சென்றாலும் கவலையில்லை, அவரது தாய் மொழியே கோலோச்சும். மற்றவர்கள் ஆங்கிலமோ இந்தியோ (இரண்டும் அன்னிய மொழிதான்) அறிந்திடல் வேண்டும் எனும் நிலை. அதோடு மட்டுமல்ல தாய் மொழியறிவு மட்டுமே கொண்டு ஹிந்தி பேசுவோர், நடுவண் அரசுப் பணிகளைப் பெறும் வாய்ப்பும் உள்ளது. இந்நிலைக்காகத்தான் இந்தி எதிர்ப்பு உண்டானது.

அடுத்து, இந்தியிலும், ஆங்கிலத்தில் மட்டுமே, பணிநியமன தேர்வுகளில், கேள்வித்தாள் என்பது, இந்தியை தாய் மொழியாக கொள்ளாத ஏனைய இந்தியரை (வங்காளி, குஜராத்தி, மராட்டி உள்ளிட்ட வட இந்திய மாநிலத்தவரும்) இரண்டாம் நிலை குடிமக்களாக்கப் படுதல் வெள்ளிடை மலை. ===#===



## பாவேந்தர் பாரதி தாசன்

அகவையில் பத்து ஆண்டுகள் பாரதியைவிட இவர் இளையவர். ஒரு திருமண அரங்கில் பாரதியின் பாடலைப் பாடிய போது, இவருக்கு அவருடைய அறிமுகம் கிடைத்தது.'" எங்கெங்கு காணினும் சக்தியடா" எனும் பாரதிதாசன் பாடல், பாரதி அடியெடுத்துக் கொடுக்க, அரங்கேற்றம் கண்டது என்பர். பாரதியுடையது, சமூகம் சார்ந்த பொதுச் சிந்தனை. பாரதிதாசனுடையது, தனிமனிதம் சார்ந்த சமூகச் சிந்தனை. கண்ணதாசன், ஒவ்வொரு தனிமனித உணர்வுகளையும் பிரதிபலித்தவர்."

கத்தியின்றி இரத்தமின்றி.. எனும் பாடலை எழுதிய, நாமக்கல் கவிஞராகட்டும், மருமக்கள் வழி மான்மியம் என்று, கேரளம் சார்ந்த சிந்தையோடு எழுதிய கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையாகட்டும், "வேப்பமர உச்சியில் நின்று... எனப் பாடிய பட்டுக் கோட்டை கலியாண சுந்தரமாகட்டும், அனைவரிடத்தும் சமூகச் சிந்தையே இருந்தது. விடுதலை இயக்கம், பாரதியையும், திராவிட இயக்கம் பாரதிதாசனையும், திரைத்துறை கண்ணதாசனையும் மிக்கு வெளிப்படுத்தியது. பாரதிதாசன் மரபும் புகழும் இன்றளவும் காத்து வரும் கவிஞர் பொன்னடி, "போடா போடா புண்ணாக்கு.. " எனும் பாடலை எழுதிய திரைக்கவிஞரும் ஆவார்.

## கலைஞருக்கு வாழ்த்து!

தொன்னூற்று ஓர் அகவை தெள்ளு தமிழ் மண்ணில்,
கண்ணூற்று நீர் துடைக்கும் கரமெனவாய்;
பண்ணூற்று பாவலர்தம் பக்கத்தில் துணை நின்று,
மண்ணூற்று தளமாக்கி மறந்த தமிழமுதை,
எண்ணூற்று ஆண்டுகளாய் இழந்த நிலை நீக்கி,
விண்ணூற்று வித்தகமாம் செம்மொழியைக் காத்த,
நன்னூற்று தமிழரிஞர் என்னாளும் வாழியவே!

-- கவிஞர் கவிவளவன்.

# கலைஞர் எனும் மாமனிதர் கருணாநிதி...!

திருக்குவளைப் பிறந்து திருவாரூர் வளர்ந்து, திராவிடர் கழகத்தில் இணைந்து, கலை இலக்கியப் பணியோடு, அரசியலிலும் நுழைந்து, கலையுலக வாழ்வே, அரசியலில் அடித்தளமாக அமைய, அண்ணாவின் பின் அரியனை ஏறி, ஐந்து முறை முதல்வராகவும், ஒருமுறை எதிர்கட்சித் தலைவராகவும் கிட்டதட்ட 60 ஆண்டு காலம் அரசியலில் கோலோச்சியவர்; எம்.ஜி.ஆர் துணையுடன் முதல்வரானவர், எம்.ஜி.ஆர் கணக்குக் கேட்டு, வெளியேற்றப் பட்டபின், தனிகட்சி தொடங்கியதும், பழைய தி.மு.க தலைவர்கள் பலர் எம்.ஜி.ஆர் வுடன் இணைந்த பின் 13 ஆண்டுகாலம், வெளியே இருந்தவர் பின்பு முதல்வராகி, இரண்டாண்டுகளில் ஆட்சிகலைக்கப் பட்ட பின் மீண்டும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் முதல்வராகிறார். அன்னை இந்திராவோடு 1971 தேர்தல் களம் கண்டவர், 1975ல் அன்னை இந்திராவை, அவசர கால பிரகடனத்தை எதிர்த்ததால் ஆட்சி கலைக்கப் பட்டவர். 1977ல் ஜனதா கட்சி மலரக் காரணமாக இருந்தவர். தோய்வில்லாமலும், ஓய்வில்லாமலும் கட்சியை நடத்தி வந்துள்ளார். அண்ணா இன்னும் பலகாலம் இருந்திருந்தால், இந்த நிலைப்பாடு கட்சிக்கு இருந்திருக்குமா எனக் கூற இயலாது.

இந்தி எதிர்ப்பு என்பது, திராவிட இயக்கக் கொள்கையாக அமைந்ததால், இங்கே ஆங்கிலம் செழித்து வளர்ந்தது. அதனால் மிகவும் பயனுற்றவர்கள், அமெரிக்கா வரை சென்று வாழ வாய்ப்பு பெற்றவர்கள், தமிழகத்தில் இன்றும் என்றும் அவரை விமரிசனம் செய்யும் முன்னேறியச் சமூகத்தார்களே!

தனியார் பொறியியல் கல்லூரிகளில், அரசாங்க ஒதுக்கீடு வேண்டும் எனப் பெற்று, நடுத்தர ஏழை மக்களும் சமமாக கல்வி பெற்று பயனுறச் செய்தவர். அங்கீகாரம் இல்லாமல் வீட்டுமனை விற்பனையை தடை செய்தவர். பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்து, அனைத்து பாலங்களையும் அகலப் படுத்திக் கட்டியவர். மனிதனை மனிதன் இழுக்கும் கை ரிக்ஷாவை ஒழித்தவர். பள்ளிக் கல்வி காமராஜரால் தரப் பட்டபோது, கல்லூரிக் கல்வி இவரால் செம்மை செய்யப்பட்டது.

இவரால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப் பட்ட போது, 50 பைசா ஒரு ரூபாயிலிருந்த வண்டிச் சத்தத்தை (மூட்டைக்கு) 10 ரூபாய் என வழங்கி அனைத்து மக்களையும் பயன் பெறச் செய்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் பஞ்சாயத்து தேர்தல் அவர் காலத்தில்தான் நடைபெற்றது. முதல் நான்காண்டு கால ஆட்சியில் அவர் இலவசங்கள் வழங்கவில்லை. பின்னாளில் அவரும் கற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

காமராஜரைப் போல் மக்கள் நலம் கருதிய தலைவருள் இவரும் ஒருவர். சிவாஜிகணேசனை, எம்.ஜி.ஆரை தூக்கி நிறுத்தியது இவருடைய வசனம். கண்ணாம்பாளின் வாழ்மொழியில் கண்ணகியை நமக்குக் காட்டியவர். கவியரசர் கண்ணதாசன், இவரை பலவாறு விமரிசித்த போதும், 'வனவாசத்தில்', மாநகராட்சித் தேர்தலில் அண்ணாவிடம் மோதிரம் வாங்கிக் கொடுத்து அணிவிக்கச் சொன்னதை எழுதிய போதும், கவிஞர் மறைவுற்றச் சமயம், இவர் அழகாகச் சொன்னார், இன்று காலை என்னுடைய பெயரன் எனது மார்பில் அமர்ந்து, காலால் நெஞ்சில், முகத்தில் உதைத்தான், அதுபோலத்தான் கவிஞர் எனக்கும் என்றார். அவ்வாறு பழகியவரிடத்து மிகுந்த அன்பு பாராட்டி நிறைந்தவர்.

அரசியலிலும் தன்னை தூற்றியவர்களை யெல்லாம் அரவணைத்து வாழ்ந்துள்ளார். பாகுபாடின்றி பழகியவருக்கு நன்மை செய்துள்ளார்.

இவர் மீதான குற்றச் சாட்டுகள்; 1. குடும்ப அரசியல், இது அன்றும் இன்றும் இந்தியா முழுமைக்கு காணப் படுவது. 2. அண்ணா பொதுச் செயலாளராக இருந்தார்; தலைவர் பதவியை ஏற்படுத்திக் கொண்டார்; என்பதே! வழிநடத்த ஒரு தலைவன் வேண்டும்.இவர் இல்லாதிருந்தால் இவ்வளவுகாலம் அக்கட்சி நிலை பெற்றிருக்குமா என்பது ஐயமே!

கல்வியிலும் பொருளாதாரத்திலும் வலுவில்லாத ஒரு சாதாரணக் குடும்பச் சூழலில் பிறந்து, முன்னேறி இவர் கண்ட வெற்றியை பலராலும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும் கல்வியிலும் பின் தங்கி யிருந்த மக்கள் முன்னேற வேண்டும் என்ற இவரது செயல் திட்டமே, முன்னேறிய சமூகத்தாருக்கு இவர் மீது ஒரு காழ்ப்புணர்ச்சியை தூண்டியது. ஆதலால் இவர் அவர்களின் விமரிசனத்துக்கு ஆளானார்.

இந்திய அரசியலிலும் இவரது பங்களிப்பு அவ்வபோது நிகழ்ந்துள்ளது. அடல்ஜியுடன் இவருக்கு தனிப்பட்ட நட்பு இருந்தது. 60 ஆண்டுகால அரசியல் வாழ்வில் பலரையும் சந்தித்த பெருமை இவருக்கு உண்டு. தமிழை செம்மொழி எனும் நிலைபாட்டை உறுதி படுத்திய இவர், ஒரு சிறந்த படைப்பிலக்கிய வாதி. திரு 'சோ' இவரை பலவாறு அரசியல் ரீதியாக விமரிசித்து வந்தபோதும், அவர் மீது நடவடிக்கை வந்தபோது, பத்திரிக்கை யுலகம் மக்களின் காவலன்எனக் கூறியவர். தமிழுலகம் ஒரு நிறைவான சமூக சிந்தையுள்ள ஒருவரை இழந்து விட்டது. ###

---

## சிலம்புச் செல்வம்!

கண்ணகி சிறந்தவள், உண்மைக்காகப் பாடுபட்டு வழக்குரைத்தவள். முதல் காதையில் ஒரு சொல் பேசியவள்; இரண்டாவது காதையில் இரண்டு சொற்களை உதிர்த்தவள்; மூன்றாவது காதையில் தான் "தேரா மன்னா..." எனத் தொடங்கி வழக்குரைக்கிறாள். மாதவியும் இன்னொரு வகையில், சிறந்தவள் உயர்ந்தவள். "அரைசியல் பிழைத்தோர்க்கு... எனும் தனது 52 வது பாடலிலே, தனது காப்பியக் கருத்தை விளம்பி விடுகிறார்; இளங்கோ வடிகள். உலக காப்பியங்கள் எல்லாம் அரசர்களைப் பாட்டுடைத் தலைவனாக்கிய போது, சேர இளவரசாகிய இளங்கோவடிகள் ஆக்கிய இச் சிலப்பதிகாரம், ஒரு பெண்ணை குடும்பத் தலைவியை, பாட்டுடைத் தலைவி யாக்கி, சோழ நாட்டில் தொடங்கி பாண்டி நாட்டில் நிறைவுற்று, சேர நாட்டில், சேர இளவரசன், காவியம் பாடி கண்ணகிக்குக் கோயிலும் கண்டுச் சிறப்புச் செய்யப்பட்டுள்ளாள். சிருங்காரம் எனப்படும் வடமொழி (சமஸ்கிருதம்) கண்ட புனைவுகள் சிலப்பதிகாரத்தில் இல்லை. முத்தமிழும் விரவி வருவது. பாட்டுடை செய்யுள் என இயற்றமிழும், கானல் வரி பாடல்கள் மூலம் இசைத் தமிழும், மாதவியில் ஆடல் கூறுகளால் நாட்டியத் தமிழும் ஒருங்கே அமைவுற்றது. சிலப்பதிகாரத்தை நற்றமிழ் காப்பியமாகப் பாருங்கள். பெண்மை எல்லா வகையிலும் போற்றப் படுவதைக் காணுங்கள். கவுந்தி அடிகள் எனப்பட்ட சமனத்துறவியின் பாத்திரப் படைப்பைக் காணுங்கள். கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்பது பாரதியின் கோட்பாடு அன்றே சிறப்புற இளங்கோவடிகளால் கைக்கொள்ளப் பட்டுள்ளது. நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். முழுவதும் படித்தோர்க்கும், படிக்க முயன்றோர்க்கும் எனது மனமார்ந்த நன்றி! *********

எதிர்வரும் **<u>தமிழகச் சட்டப் பேரவைத்தேர்தல்,</u>** மிகுதியான




எதிர்பார்ப்புகளை உள்ளடக்கியதாக வுள்ளது. 1967க்குப் பின் ஏற்பட்ட திராவிட இயக்க ஆட்சி, உயரிய எதனையும் செய்ததா என்றால் இல்லை என்றே சொல்லலாம். தமிழும் தமிழ் மாண்பும் இங்கு அரசியல் சூதாட்டத்தின் கருப் பொருளாகவே நிலவி வருகிறது. திமுக தொடங்கியதை அதிமுக மாற்றுவது, பெயர் மாற்றம் செய்வது, என்ற விளையாட்டே மாண்புமிகு ம.கோ.ரா காலந்தொட்டே நிகழ்ந்து வந்துள்ளது. வீராணம் திட்டம் கிடப்பில்போடப் பட்டது முதல், நூலகம் மருத்துவமனை யாக்கப்பட்டது வரை இப்படித்தான். இன்னும் கொஞ்சம் பின்னோக்கினாலும் இத்தகைய நிகழ்வுகளே! அவற்றில் மக்கள் நலனும் விரவி வந்துள்ளது. சத்திய மூர்த்தி, இராஜாஜி ஆகிய இருவருடைய கருத்து மோதல், காமராஜரை முன்னிறுத்தியது. ‘சர்தார்’ வேதரத்தினம் பிள்ளை போன்ற தியாகிகளெல்லாம் அரசியலை விட்டு வெளியேறினார்கள். மொரார்ஜி தேசாயை வெளியேற்ற கொண்டுவரப் பட்ட “K” பிளான், பக்தவஸ்தலத்தை முதல்வராக்கியது. நே.து. சுந்தரவடிவேலுவின் அணுகு முறையோடு, காமராஜரால் கொண்டுவரப் பட்ட, கட்டண மில்லாக் கல்வியை, அடுத்த இருபது ஆண்டுகளில், வியாபார மாக்கியப் பெருந்தகை, மாண்புமிகு **ம.கோ.ரா.** மக்களாட்சி மாண்புகளைத் தகர்த்து, தன்னிச்சையாக செயல்பட்டப் பெருந்தகை, ம.கோ.ரா. விவசாயம் வீழ்த்தப் பட்டது முதல், ஆட்டோ கட்டணங்கள் சீர்குலைந்தது வரை அவரது காலத்தில் தான். காரணமின்றி கலைக்கப்பட்ட மேலவை, தகர்க்கப் பட்ட கிராம நிர்வாகம், அளவுக் கதிகமாக கொண்டுவரப் பட்ட மெட்றிக்குலேஷன் பள்ளிகள்; புகுமுக வகுப்பு கல்லூரியினின்றும் நீக்கப் பட்டு, மேல்நிலைக் கல்வியாக பள்ளியில் திணிக்கப் பட்டதுவரை யாவும், ம.கோ.ரா.வின் மாண்புகளே! தொழில்முறைக் கல்விக்கு, நுழைவுத்தேர்வு வைத்து, நேர்காணலில், தன்னிலை விளக்கி, வாய்ப்புப் பெறும் கிராமப்புற மாணவர்களின் வாய்ப்பைத் தகர்த்தார். நேர்காணலின் தவறுகளைக் களையாமல், நுழைவுத்தேர்வைப் புகுத்தி நகர்ப்புற மாணவர்க்கே நன்மை செய்தார். பஞ்சாயத்து தேர்தலை அவர் நிகழ்த்தவே இல்லை!

1952 லேயே இந்தியா முழுமைக்கும், காங்கிரஸ் வாகை சூடவில்லை. இரண்டு ஜாதிக்கட்சிகளைக்கொண்டே, இராஜாஜி, முதல்வராகி, காங்கிரஸை நிலை நிறுத்தியுள்ளார், தமிழகத்தில். அப்போது, அது சென்னை மாகானம்.

தமிழைஆட்சி மொழியாக்கியது காங்கிரஸ் அரசு. ஜாதிய உணர்வுகளில், காமராஜரின் பங்கும் உண்டு, கலைஞரின் பங்கும் உண்டு! காமராஜர் ஆட்சியில்தான் திண்டுக்கல்லில் நேருவுக்கு கருப்புக் கொடி காட்டப்பட்டது. காங்கிரஸ் மாநாட்டில் ஏற்பட்ட, வருத்தமே, பெரியாரை, நீதிக்கட்சிக்குள் புக வைத்தது. மக்கள் உரிமைக்காக தொடங்கப் பட்ட கட்சி, பெரியாரின், தீர்மானத்தால், சுதந்திரத்திற்கு, எதிரானதாகப் பெயர் பெற்று விட்டது. வகுப்புவாரி இட ஒதுக்கீடு என்பது, நீதிக்க்கட்சியின் கோட்பாடே, அதனை பெரியார் கையிலெடுத்துக் கொண்டார். பெண்விடுதலையில் பெரியாரின் பங்கு அளப்பரியது. மகாத்மா காந்தியுடையதும்.

நாராயணகுரு,அம்பேத்கர் ஆகியோரைப் போலவே மனித நேயம் மிக்கவராயினும், சில நிலைபாட்டில் தெளிவுடைய வராக பெரியார் இல்லை. அரசியலுக்கு, கடவுள் மறுப்பை கலனாக்கொண்டார், அதுவும், தொழில் வழியில் இனங்களாய் வாழ்ந்த தமிழரிடத்து, ஏற்றதாழ்வாக ஜாதீயம் நிலை கொண்டமைக்கு ஒருவகையில் காரணமாகியப் பிராமணர்களைச் சாட வேண்டும் என்பதற்காக. இறைக் கொள்கையும், வழிபாடும் தமிழருடையது என்பதை ஒருபோதும் பெரியார் உணரவே யில்லை. எந்தக் கோயிலும் இன்றளவும் பிராமணச் சமூகத்தின் பிடியில் இல்லை. சிறப்பான ஒன்றை பற்றிக் கொள்ளும் மனம் பிராமணரிடத்தில் என்றும் உண்டு. அதனால்தான், அடிப்படையில் நிலவுடைமைச் சமூகமாக இல்லாததால், வாழ்வியல் தேடலுக்காக அரசுப்பணியை பிராமணர்கள் நாடினர். அங்கு அவர் தொடங்கிய ஆளுமைதான் , நீதிக்கட்சியால், வகுப்புவாரி இட ஒதுக்கிட்டைக் கொணரச் செய்தது.

இராஜாரம்மோகன்ராய், ஜோதிராவ் பூலே பொன்றவர்கள் எல்லாம் மக்கள் நலனுக்காக போராடியுள்ளார்கள்.

தமிழ் நாட்டில், பிராமணர்களைக் காட்டிலும் சிறப்பித்த நிலையில் சைவ வேளான் சமூகத்தவர்கள், முன்னேறிய நில-வுடைமைச் சமூகமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்ததால், நீதிக்—கட்சியில் அவர்களும் அதிகம் அங்கம்வகித்ததால், 1915-ல் தொடங்கப் பட்ட தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், நீதிக்கட்சியாக அரசியல் களம் கண்டு, ஆட்சியில் அமர்ந்து, வகுப்புவாரி இட ஒதுக்-கீட்டைக் கொண்டுவந்து, 1925-ல் அனைவருக்கும் சமத்துவம் கண்டது. அதுகாறும் பிராமணர்களே மிகுதிக்கண், அரசாங்கப் பதவிகளை வகித்து வந்தனர். பின்னாளில் பெரியார் தனது சுய மரியாதை இயக்கத்தை, நீதிக்கட்சியில் இணைத்து, திராவிடர்க் கழகமாக அதனை மாற்றிக் கொண்டார். திராவிட இயக்க அரசியலிலே, தமிழும் ஒரு, கருப்பொருளாக அமைந்ததால், அதற்கு

கூட்டம் கூடியது. அண்ணாவுக்கு ஏற்பட்ட அரசியல் தாகம், சம்பத்தை முன்னிறுத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டது. சென்னை மாகானம், தமிழ்நாடு என ஆனது முதல், ஓட்டு, வாக்கு ஆனது, அபேட்சகர் வேட்பாளர் ஆனது வரை அண்ணாவின் நிகழ்வுகளே! செம்மொழியாக்கிய பெருமை கலைஞரைச் சாரும். கலைஞர் முதல்வராவதற்கு, முதல் காரணமாக இருந்த, ம.கோ.ரா, வே, தி.மு.க வை உடைப்பவராகவும் ஆனார். திரையில் அவரை தெய்வமாகக் கண்ட பாமர மக்கள்தான், அவரது, இரட்டை இலையை இன்றளவும், நேசித்து, அவரது ஆட்சி நிலவுவதாக நினத்தும் வருகிறார்கள்.

விஜயகாந்தின் அரசியல் பேச்சு, அவரைகேலிச் சித்திரமாக ஆக்கியுள்ளது. அவரும், தனிமனிதராகச் சிலநன்மைகளை மக்களுக்குச் செய்தவராகத்தான் காணப்படுகிறார்.

மக்கள், சிந்திக்க வேண்டியது, ஒன்றே ஒன்றுதான், இது, நம்முடைய நாடு, நமக்காக வரப் போகும் ஆட்சி, வாக்கு என்பது, உங்களது, உரிமை, உங்களது கடமை, உங்களது அன்னையின் அன்பை போல விலை மதிப்பில்லாதது, அதனை ஐந்நூறுக்கும் ஆயிரத்திற்கும் விற்காதீர்கள். அஃது, உங்களுடைய அன்னையின் முகத்தில் காரி உமிழ்ந்தது போலாகும். அவர்கள் கொடுக்கும் பணம் உங்களுடையதே! சிந்தித்து, செயல் பட்டு வாக்களியுங்கள், மக்களாட்சி மாண்பை தவறாது உணர்ந்து, கடமையை, வாக்களிக்கும் கடமையை செயல் படுத்துங்கள்!

**எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - குறள்**

**வாழ்க தமிழ்! வளர்க பாரதம்!! 13-05-2016**

# தியாகிகள் தினம்!(காந்தி)



தேசத்தைத் தன்மடியில் சுமந்தவன்,
நேசத்தைத் தன் செஞ்சில் சுமந்தவன்,
பாசம், பரிவு, பகைமை யாவும் கண்டவன்,
ஆசைகளைக் கூறு போட்டவன்,அன்பை அளந்தவன்,
வேசந்தெரியாத விகல்பமில்லா பேச்சு,
பாசத்தை மறந்த கண்கள்; பரிதாபம் செய்ய,
வேசம் கலந்தவராய் விண்ணில் ஏகினார்!
மனிதருள் வாழ்ந்த மாமனிதன்! ==0==

**<u>ஆணாதிக்கம்</u>** எனும் **<u>பெண்ணடிமைத்தனம்</u>** இவ் வுலகம் உய்ய இயற்கையோ, இயக்குகின்ற இறைவனோ எழுதிய விதியே இந்த ஆணாதிக்கம். அனைத்து உயிர்களிடத்தும் இதனைக் காண முடியும். மனிதரிடத்து இது மிக்கு காணப்பட்டது; பெண்களுக்கு ஆணைச் சார்ந்து வாழும் ஒரு சமூகச் சூழல் முற்றிலுமாக இருந்த காலத்தில், மிக வெளிப்படையாகக் காணப் பட்டது. பிறந்து, வளர்ந்த சூழல், அன்னை தந்தையிடம் கற்றுக் கொண்ட வாழ்வியல் ஆகியவையே ஒவ்வொரு ஆண் மகனையும் தெளிவாக சிந்திக்கச் செய்யும். பொதுவாக அன்னையிடம் அன்பு கொள்ளும் யாவரும் ஆணாதிக்கம் செய்வதில்லை. இன்னும் ஒன்று, மனிதன் இனக்குழுக்களாக வாழத்தலைப் பட்ட நிலையில், ஈன்று புறந்தள்ளும் பெருமையே பெண்ணை, ஆதிக்கம் கொண்ட சக்தியாகவும், தலைமை உடையதாகவும் செய்துள்ளது; என்பது ஆராய்சியாளர் பலரது கருத்து. அந்தக் காலச் சூழலில், மனதில் ஒரு நிலையே பின்னாளில் ஆணாதிக்கம் ஏற்படுத்தி யிருக்கலாம். அப்படியும் தமிழ்ச் சமூகத்தில் இப்படியொரு நிலை இருந்ததாய் பதிவுகள் இல்லை. பெண்பாற்புலவர்கள் சமமாக நடத்தப் பட்டுள்ளனர். தன் மகனைத்தேடி வந்த பெண்ணை காதலி என அறிந்து, "தோன்றுவான் மகனே போர்க்களந்தானே" எனக் கூறிய தாய். "ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே" எனப் பாடிய காக்கை பாடினியார். நவதான்யங்களைத் உண்ண வந்த கோழியை, காது குழையை கழற்றி வீசி விரட்டிய பெண். எல்லாவற்றுக்கும் மேலாக, உலக அரங்கில், பாட்டுடைத்தலைவனாக, அரசன் இருந்த போது, ஒரு குடும்பத்தலைவியை, காப்பிய நாயகியாக்கி, ஓர் இளவரசன் 'சிலப்பதிகாரம்' காணவில்லையா? ********

## சினிமா மோகம்!

சினிமா காரர்களை வைத்து கூட்டம் கூட்டுவது என்பது, தமிழ் நாட்டில் ஊறிப் போன விஷயம் தான். காங்கிரஸ் ஆட்சியிலேயே இது நடந்துள்ளது. என்.எஸ். கிருஷ்ணன் போன்றோரை கூட்டம் கூட்டி நேரு போன்ற செல்வாக்கு பெற்ற தலவருக்கே செய்துள்ளனர். சினிமா மாயையும் மோகமும் இன்னும் அற்றுப் போகவில்லை என்பது வெள்ளிடைமலை. நால்வர் முதல்வரானது இம் மானிலத்தில் மட்டுமே! திராவிட மாயையும், சினிமா மோகமுமே அன்றும் இன்றும் என்றும் அரசியல் வாதிகளின் கைத்தடி. சென்னை ராஜதானி, சென்னை மாகானம், தமிழ் நாடு மாநிலம் யாவற்றிலும் இதுனே நிலை.





**சனிப் பெயர்ச்சி** வானுயர்ந்த அதிகாரம் பெற்றதுவாய், இந்த மீடியாக்கள், எழுதியதையோ, தன்னிஷ்டப்படியோ, கலவரப் படுத்தும் வகையில் எழுதிக் குவிக்கின்றன. இரண்டரை ஆண்டுக் கொருமுறை இடம் பெயர்வதாய் கணக்கிடுகிறோம். எப்போதாவது வரும் விருந்தாடிக்குரிய ஆர்ப்பரிப்பு அவ்வளவே! தினந்தோறும் நம் தாயைப் போல் சுற்றிவரும் சந்திரனையோ, அனைத்துக்கும் காரணமாகி, ஆள்கின்ற, தந்தையைப் போல் அமைதியான சூரியனையோ நாம் கருதுவதில்லை. பார்வை என்ற ஒன்று உண்டு. 1,7 அனைத்துக்கும் பொது. சனிக்கு 3,10 குருவுக்கு 5,9 செவ்வாய்க்கு 8 ஆகியவை தனித்த சிறப்புடையவை. பார்வையால் அனைத்தும் சிறப்பே செய்யும். குரு மட்டுமே ஸ்தான நாஸ்தி செய்யும். இருக்கும் இடம் விளங்காது. 10 ல் குரு இருந்தால், நல்ல வருமானம் இருக்கும், தொழில் நிரந்தரமாயிராது. சனிக்கு வருவோம். இந்த சுழற்சி முறையைக் கோச்சார பலன் என்பர். மகரத்துக்கு குடும்ப மாகிய 2 ஐயும், பாக்கியமாகிய 9 ஐ பார்க்கிற போதும், ஆறு ருண ரோகம் பார்க்கும் போதும், பண்ணிரெண்டாகிய விரயத்தை மட்டுமே கணக்கிடு கிறார்கள். கன்னிக்கும் மிதுனத்துக்கும் சனியின் பார்வை யுள்ளது. ரிஷபத்தின் பூர்வபுண்ணியத்தையும், குடும்பத்தையும் பார்க்கிறார். தனுசுக்கு ஜென்மத்தில் இருந்து, களத்திரத்தையும் தொழிலையும் காண்கிறார். எனவே, நல்லதும் கெட்டதும் யாவருக்கும் கலந்தே இருக்கும். எல்லாம் வல்ல இறைவனை நினைந்து வேண்டி இன்புற்று இருங்கள். அவனன்றி ஓரணுவும் அசையாது. யாவும் ஈசன் செயல். சர்வம் கிருஷ்ணார்ப்பணம்!

பள்ளமேடு பராந்தக சுவாமிகள் **20-12-2017**

---



இஃது, ஒரு தேவையற்ற கருத்து ப்போல தென்படலாம், மல்லாக்கப் படுத்து யோசித்தால் உண்மைகள் புலப்படும். தன்னுடைய 14, 15 வயது மகனுடன் வெளியில் செல்லும் போது, அந்த தாயின் முகத்தில் காணப்படும் மகிழ்ச்சியும் பெருமிதமும், தன்னுடைய அதே வயதுடைய மகளுடன் செல்லும் போது, தந்தையரிடத்தில் ஏன் காணப்படுவதில்லை? சிந்தியுங்கள்! ==#==





**ஜோதிடம்..!** ஜோதிடம் என்பது ஒரு மிகப் பழமையான கலை. ஜோதிடத்தை விடக் கூறுபவர்கள் செய்யும் சிறுமையே இங்கு மேற் கொள்ளப் பட்டு ஒளிக் காட்சியாக காண நேர்ந்தது.! மிகவும் முழுமையாக நம்பி நடப்பவர்களுக்கு, அந்த ஒளிக்காட்சி ஒரு தெளிவை ஏற்படுத்தலாம். ஜொதிடத்தை தொழிலாகக் கொள்ளாமல், பொழுது போக்காக சொல்பவர்களும் உள்ளார்கள். தொழில் வியாபாரம் என்னும் போது, ஒருவகையில் பொருளீட்டலே முதலில் நிற்கும். பொதுவாக, கெடுதல் எதையும் எடுத்துக் கூறினால் கேட்போர் நம்புவதில்லை. வண்டியிலே சில காலம் செல்லாதீர்கள்; விபத்து நேரலாம் என்றால், விரும்புவதில்லை. உங்களுக்கு வாகன யோகம் நிரம்ப இருக்கிறது, ஜாக்கிரதை யாக இருங்கள் என்றால் மகிழ்வர்.

ஜோதிடம், மருத்துவம் இவற்றுடன் கணினி யியல் யாவுமே மக்களுக்கு புரியாத புதிர்தான்!. அட்ச ரேகை தீர்க்க ரேகை கூடும் புள்ளியைக் கொண்டே கணிக்க வேண்டும். பூப்பந்தில் ஒவ்வொரு புள்ளியிலும், ஈர்ப்பு விசை மாறும் என்பது, அறிவியல் உண்மை. வானியலிலிருந்தே இந்த ஜோதிடம் பிறந்தது. தமிழர்தம் அறிவு மிகவும் போற்றுதற் குரியது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதப் (கூறப்) பட்டது இன்றளவும் சரியாகத்தானே உள்ளது. முறையாகப் பயிலாமல், பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு சொல்பவரை வைத்து கலையைக் குறை கூறுவது முட்டாள் தனம். செம்மைக்குச் செவ்வாய் என பெயரிட்டவன் தமிழன்; பூமியை மையமிட்டாலும் சூரியனின் சுழற்சி கொண்டே ஜோதிடம் கணிக்கப்படுகிறது; ஜோதிடக் கலையில். பூமி உருண்டை என்றும் சூரியனைச் சுற்றுகிறது என்பதை அறியாமலா இவற்றையெல்லாம் கண்டு விளம்பி யிருக்க முடியும்?

நீர் ஆவியாகி சென்று பின் மழையாகப் பொழிகிறது என்பதை பல நூறாண்டுகளுக்கு முன்பே ஆண்டாள் கூறவில்லையா? தமிழன் அறிவை இனம் கண்டு போற்றுங்கள்; தவறு செய்பவனை திருத்துங்கள்; கலையையே தவறென்று கூறாதீர்கள். உலகின் உயிர் நிலையிலிருந்து, சக்தியைப் பெற்றுக் கொண்டவன்; தேவைக்கேற்ப கடவுளைப் படைத்துக் கொண்டவன் தமிழன்; கூர்ந்து ஆய்ந்துப் பார்த்து உண்மை அறியுங்கள். கரிகாலன் கல்லணையும் இராச இராசனின் பெரிய கோயிலும் பெருஞ்சான்றல்லவா? 14-12-2014

**<u>கேள்வி:-</u> குளிகை தொட்டதை துலங்க செய்யுமா?அல்லது மீண்டும் வளரச் செய்யுமா?**



planet set

**<u>பதில்-:</u>** குளிகையை, நம்மவர் முதியவர் குலுசம் என்பர். இங்கே Repeat என்பது, அத்தகைய நிகழ்வுகள், தொடரும் எனக் கொள்ளலாம். ஐயம் என்றானபின் விவாதம் ஏன்? நிற்க, ஒரு முகூர்த்தம் என்பது **3 3/4** நாழிகை - **90** நிமிடங்கள். ஒரு நாழிகைக்கு **24** நிமிடங்கள். **2 1/2** நாழிகை கொண்டது ஒரு மணி. ஒருநாள் சூரிய உதயத்திலிருந்து, மறுநாள் உதயம் வரை **60** நாழிகை. உதயம், மணியைப் பொருத்து நாளுக்கு நாள் மாறும். இங்கே எனது ஐயம் என்னவெனில், ராகு காலம், எமகண்டம், குளிகை, முகூர்த்தம் யாவும் மணியின் அடிப்படையில், எவ்வாறு **6-7.30, 7.30-9, 10.30-12** எனும் அடிப்படையில் அமைய முடியும்?

***நண்பர்கள் தினம் - 06-08-2017***


*அகமது தேங்கும் அன்பில்,*
*அவனி சூழ் பெருமை காக்கும்!*
*முகமது வாடும் போழ்தில்,*
*முன்னின்று கணைகள் சூட்டும்!*
*இகமதில் வாழ்வு காட்டும்*
*இன்னலை களைய நிற்கும்!*
*ஜெகமிதில் நட்பு ஒன்றே*
*நெடிது நாள் நிலைத்து வாழும்!*



அகத்தூய்மை அறிவு தரும்!
புறத்தூய்மை பெருமை தரும்!
தூய்மையின் அழகு எழுச்சிதரும்!

**இன்றையநிலை!** எல்லோருக்கும் ஒரு பாடம். உறவுகளைத் தவிர்த்து, உரிமைகளை மழுக்கி திருமணம் செய்யத் தொடங்கினோம். வளமே வனப்பு என்றோம். மனிதம் தகர்த்தோம். கல்வியிலும் குழப்பம். ஆங்கில வழிச் சரிதான். ஆனால் தமிழைப் புறந்தள்ளிவிட்டு ஹிந்தி, பிரஞ்ச்சு முதலான வற்றைப் பிள்ளைகளைப் படிக்கச் செய்தோம். அறம் செய்ய சொன்ன அவ்வையையும், பிறப்பொக்கும் என்ற வள்ளுவனையும் குழந்தைகள் அறியவில்லை! சிகப்பாய் இருப்பவன் பொய் சொல்ல மாட்டான், ஆங்கிலத்தில் பேசுபவன் அறிவாளி என நம்பினோம். ஹிந்தி அறிவென நினைத்தோம். **26-02-2020**

**தேசப்பிதா** எனவும் மகாத்மா எனவும் போற்றப்பட்ட மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கு, காந்திஜிக்கு இன்று பிறந்தநாள். நாடு முழுவது இன்று, முழுமையான பொது விடுமுறை(Closed Holiday). விடுதலை நாள், குடியரசு நாள் இவற்றுடன் காந்தி ஜெயந்திக்கும் சேர்த்து, இவை மூன்றுக்கு மட்டுமே முழுமையான பொது விடுமுறை. இந்திய மக்களின் வாழ்வியல் உரிமைக்காக, ஆங்கிலேயராகிய A.O. ஹ்யூம் தொடங்கிய காங்கிரஸ் கட்சி, காந்திஜியின் தலைமையில், சுதந்திரப் போராட்ட இயக்கமாக வளர்ச்சி கண்டது. திலகர் போன்ற தலைவர்களின், வழிகாட்டுதலும் ஊக்கமும் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டாலும், காந்திஜியின் தலைமையே, மக்கள் மன்றத்தில் செல்வாக்கு பெற்றது. தன்னைப் பின்பற்றிய நேரு போன்றவர்களை மட்டுமே காந்தி முன்னிருத்தினார், சுபாஸ் சந்திர போஸ் முதலானவர்களை அவர் ஒதுக்கினார் என்பது போன்ற சில குற்றச் சாட்டுகள் அவர் மீது உண்டு. விடுதலைக்குப் பின் காங்கிரஸ் கட்சியை காந்தி கலைக்கச் சொன்னார்; நேரு அதனை செயல் படுத்த வில்லை. இட ஒதுக்கீட்டு கொள்கையை காந்தி முழுமையாக ஏற்கவில்லை; அரசியல் காரணங்களால் அது திரும்பப் பெறப் படமாட்டாது என்ற காந்தியின் கருத்து, அவரிடம் வெறுப்பைப் பெற்றுத்தந்தது. இன்னும் கல்வியறிவு பெற வேண்டியோர், முன்னேற வேண்டியோர் இன்னும் இருக்கிறார் என்பது வெள்ளிடை மலை. சலுகை பெரும்பாலும், அடைந்தவர்களுக்கே கிடைத்துக் கொண்டுள்ளது என்பதும் வெளிப்படை. பிற்படுத்தப் பட்டோர் என்னும் புதிய அணியும் ஏற்பட்டுள்ளது. இங்கும் முன்னேறிய சமூகம் தான் பயன் பெறுகிறது. இந்திய விடுதலை நாளில், அனைவரும் கொண்டாட்டத்தில் இருக்க, காந்தி, மக்களோடு மக்களாக, துன்பப் பட்டோருடன், இனப் போராட்டங்களுக்கிடையே நின்றார். ஏழ்மையைக்கண்டு, தனது உடுப்பை மாற்றிக் கொண்டார். My Experiments with Truth (சத்திய சோதனை) - இது காந்தியைப் பற்றிய முழு வெளிப்பாடு. ஒரு தனி மனிதனின், புடம் போட்ட ஒழுக்க நெறிப் போராட்டம். இந்த உயரிய நிலைகளுக்காக, நாம் காந்திஜியை மகாத்மாக இல்லாவிட்டாலும் ஒரு மாமனிதராகப் பாராட்டித்தான் ஆக வேண்டும். தமிழர்களின் மொழிப் போராட்டத்தைக் கண்டு, தமிழ் மொழி மீது, அவர் பொழிந்துள்ள கருத்து, இந்திய விடுதலைக்கு முன் வெளியானது, இங்கே இணைப்பாகியுள்ளது. உண்மைக்குப் போராடிய அந்த மாமனிதரை நெஞ்சார நினைவு கொள்வோம்! **02-10-2013**



சத்தியனாய் வாழ முடியும் எனச் சாதித்துக் காட்டிய மாமனிதன். ஏற்ற இறக்கமாய் ஆயிரம் கருத்துரைகள். விளம்பரம் தேடும் வெறியர் கூட்டம் இருபுறமும். பதவியைத் தேடா பான்மை. ஏழைகளையும் மனிதராய் அணைத்தது. இப்படி எத்தனையோ நல்லன. அம்மாமனிதன் மண்ணில் தோன்றி 150 ஆண்டுகள். துடைப்பத்தை வைத்து சாலையோரம் நின்று, காட்சியளித்தல் அல்ல **காந்தீயம்**. கல்வியறிவால் அறியாமை நீங்க வேண்டும். சுத்தம் தன்னால் அரங்கம் ஏறும். தீண்டாமை துடைத்தல் வேண்டும்!. வணிகமய கல்வி நீங்கி, பணக்கார நகர்புர மக்கள் மட்டுமே பயன் பெறும் தேர்வு வழி தேர்ச்சிநிலை நீக்க வேண்டும். பெண்மைப் முழுமையாய்ப் பேணப்படல் வேண்டும். கல்வி, மருத்துவம் யாவருக்கும் சமமாதல் வேண்டும். கிராமங்களில்தான் இந்தியா வாழ்கிறது என்றார். அவை எங்கேயோ எனத் தேடும் நிலையில் நமது சூழல் இன்று. மனிதம் போற்றி மனிதனாய் வாழ்வோம்!

மோ. க. காந்தி

**MAHATMA GANDHI SAYS :**

" I hope that the love of Tamil lovers will prove lasting and stand the severest strain. The superficial knowledge that I have of Tamil has enabled me to appreciate the beauty and the richness of the language. To neglect it would appear to me to be criminal "

" No other Indians can equal the performance of the Tamils in this fight. It therefore occured to me that I should read Tamil with close attention, if for no other reason than to tender sincere thanks to them at least mentally. Accordingly, the last one month was devoted mostly to the study of Tamil. The more I learn it, the better I appreciate the beauties of this language. It is a very fine and sweet language, and from its structure and from what I have read in it, I find that the Tamils have produced, and still produce, a large number of intelligent thoughtful and wise men. Moreover, since India is going to be one country, some Indians outside Madras should also learn Tamil."

*Collected works of Mahatma Gandhi*
*Vol. LVI (P. 386) &*
*Vol. IX (P. 242)*

# கல்வி வளர்த்த காமராசர்!



அறிவைத் தருவது கல்வியே என்போம்!
ஆற்றலை வளர்ப்பதும் கல்வி என்போம்!
இன்பம் தருவதும் கல்வி என்போம்!
ஈன்றார் ஒருவர் அந்நாள் இலவசமாக!

உள்ளம் மகிந்தது, உவகைப் பிறந்தது!
ஊரும் செழித்தது கல்வியால் வளர்ந்தது!
எங்களின் ஆட்சி எங்களின் மாட்சி!
ஏங்கிய உள்ளங்கள் தேடியக் காட்சி!



ஐயன் பெருமகன் அளித்தவர் யாரோ?
ஒருவர் அவரே காமராசர் மக்கள் தலைவர்!
ஓங்கி வளர்ந்து உயர்வைக் கண்டோம்!
ஔவை அளித்த ஆத்திச்சூடியும் கற்றோமே!
**(என்னுடைய இளைய மகனுக்காக எழுதியது)**

## ஏப்பிரல் ஒன்று (முட்டாள்கள் தினம்?)

**முட்டாள்கள் தினமென்று ஓர்முகப்புரையைச் செய்யாதீர்!;**
**விட்டில் பூச்சியாய் வீழ்கின்ற மனிதரெல்லாம் முட்டாளில்லை!**
**பட்டால் வருகின்ற பட்டறிவு பெற்றவரும்இங்கே பலருண்டு!**
**தொட்டால் இதழ்மூடும் செடியுடனே விளையாண்ட கதையுண்டு!**

**எண்ணத்தில்  துயரிருந்தால் இயக்கத்தில் காட்டாமல்,**
**கண்ணில் ஒளியெழும்பிக் காண்பவரை வணங்கியேசீர்;**
**பண்ணில் நல் இசையாக பாங்குடனே அமுதளிக்கும்!**
**மண்ணில் மனங்கலெலாம் மரியாதையில் தான் தெரியும்!**

**நன்னிய மரபுகளால், வாழ்ந்ததோ நம் இனமே!**
**பின்னிய உறவுகளால் பிதற்றத் தொடங்கி விட்டோம்!**
**இன்னிய நாளென்று யாவற்றையும் சொல்லி வைப்போம்!**
**மன்னிய பெருமையோடு, "முட்டாள் தின" மொழித்து,**
**வாழ்த்திடுவோம்! வாழ்ந்திடுவோம்!!**



**கவிவளவன் (31.03.2018)**

## மதிப்பெண்கள்!

அதிக மதிப்பெண்களே வாழ்வின் வெற்றிக்கு வழி என்னும் தவறான அனுகுமுறை பெற்றோர் ஊட்டுவது. யாவருக்கும், மருத்துவராகவோ, பொறியாளராகவோ, வரவேண்டும் என்னும் நினைவு பெற்றோரால் திணிக்கப்படுதலே இந்த நிலைக்கு காரணம். இல்லையே பல் மருத்துவர். ஊருக்கு ஒருவரே தேடுவது கடினமான நிலையிலிருந்த பல் மருத்துவர், தற்போது தெருவுக்கு நால்வர். பல்மருத்துவம் தற்போது அழகுக் கலையில் சேர்ந்து விட்டது. எல்லா மருத்துவரிடத்தும் கூட்டம் நிரம்பித்தான் வழிகிறது. தனக்கு கல்வி போதித்த ஆசிரியராக வரலாம் என்னும் மனோ பாவம் கூட மாணவரிடத்துக் காணப்படுவதில்லை. பள்ளிக்கு செல்ல முடியாத காமராஜர் கொண்டுவந்த, கட்டணமில்லா கல்வி காணாமல் போய்விட்டது. தமிழ் வழிக்கல்வியில் பள்ளியில் படித்த அப்துல் கலாம் தான் விஞ்ஞானியாகி, குடியரசு தலைவரானார். இந்தியாவின் கேம்ப்ரிட்ஜ் எனப்பட்ட **University of Madras** உள்ள மாநிலத்தில் தான், மனனம் செய்யும் கல்விமுறை போதிக்கப் படுகிறது. **CBSE** கல்விமுறையில் ஆய்ந்தறியும் நிலை உள்ளதால், இந்தியிலேயே, தாய் மொழியில் படிப்பதாலும், வட நாட்டு இளைஞரின் அறிவுக்கூர்மை சிறப்பாகத்தான் உள்ளது. “பிறப்ப்போக்கும் ..” எனும் வள்ளுவன் குறளை நினைவு கூறுங்கள். எல்லா தொழிலும், பணியும் தனித்தன்மை உடையன என்னும் சிந்தனையை தூவ வேண்டும். மருத்துவமும், பொறியியலும் படித்துவிட்டு ஐயாயிரம் சம்பளத்துக்கு அல்லாடும் இளைஞர் கூட்டமும் இங்கு உள்ளது.


## ஆசிரியர்

ஆசிரியப் பணி மட்டுமே ஓர் உன்னதமான அறப்பணி. அனுதினமும், சின்னச் சின்ன பிஞ்சு உள்ளங்களிலிருந்து, கள்ளங்கபடமற்ற உள்ளங்களோடு உள்ளங்களாய் உலா வர முடியும். நாளைய உலகை நடத்தப் போகிற தலைமுறைக்கு வழிகாட்டும் பணி. ஆசு இரியர்—குற்றம் களைபவர் அல்லவா?

## கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!



அன்பின் வழியது உயிர் நிலை!
ஆன்ற பண்பின் வழியது வாழ்க்கை!
இன்பம் செய்வது மனமே - நல்ல
ஈகை குணமே காட்டும் இறைமை!
உண்மை அறிவே கடவுளின் நிலையாம்!
ஊஞ்சல் போலே மனத்தை ஆளுங்கள்!
எங்கும் நிறைந்து அன்பைத் தூவுங்கள்!
ஏசுவின் வழியில் மானுடம் பேணுங்கள்!
ஐயம் நீங்கி என்றும் வாழுங்கள்!
ஒப்பிலா இறைமை உள்மனம் காணும்!
ஓங்குயர் நிறைவே கடவுளைக் காட்டும்!
அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!




மேதகு **ABJ அப்துல் கலாம்! -** மகாத்மா மரணித்த போது, நாடே திகிலடைந்து குழப்பதிலாழ்ந்ததாம். நேருவின் மரணம் ஒரு நெருக்கடியில் நிறைந்தது. அண்ணாவின் மரணம் ஆராவாரத்தில் நின்றது. காமராஜரின் மரணம் அமைதியில் ஆழ்த்தியது. எம்.ஜி.ஆர் மரணம் கலவரத்தைக் காட்டியது. ஆனால் அப்துல் கலாமின் மரணம், அனைவரையும் துயரில் ஆழ்த்தியது. ஆர்ப்பாட்டம் இல்லை; ஆராவாரம் இல்லை; அவர் எண்ணியதைப் போல, பணிகள் நடந்தன. ஒட்டுமொத்த இந்திய இளைஞர் சமுதாமமே அவருக்காக அஞ்சலி செலுத்துகிறது. அரசியல் பலமோ ஆள்பலமோ இல்லாத ஒரு தனிமனிதன் தலைசிறந்த மனிதனாக வாழ்ந்து நிறைவுற்ற தாலேயே, அனைவரது நினைவுகளிலும் அவர் நின்று நிலைகொள்கிறார். காந்தி உட்பட அரசியல் தலைவர்கள் அனைவருக்கும் ஒரு பின்னடைவோ எதிர்ப்போ இருந்திருக்கிறது, இருந்து கொண்டும் இருக்கிறது. ஆனால், எவ்வகையிலும் குறைகாண இயலாத மனிதராக வாழ்ந்தவர் அப்துல் கலாம். இருபது அல்ல அறுபது வயதுடையோரும் அவரது நினைவைப் போற்றுகின்றனர். அவர் மானுடம் பேணிய மா மனிதர். 28-07-2015

**எழும் ஒலி!** உதடு அழுந்த மூடியிருக்க வாயை ஓசையுடன் திறக்கும் போது எழுவது அம்மா. அம்மாவை அழைப்பதும் எழுதுவதும் 'அம்மா' வென்று தமிழில் மட்டுமே காணும் மரபு. மொழியின் தொண்மைக்குச் சான்று. அநேகமாக உலகின் அனைத்து மொழிகளிலும் அம்மாவை அழைப்பது அம்மாவென்றேதான். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் உச்சரிக்கும்போது, உதடுகள் ஒட்டும். 'ப' 'ம' ஆகிய இரு எழுத்துக்கள் மட்டுமே உதடுகளை ஒட்டச் செய்யும். அந்நாளில், அன்றைய நெல்லை மாவட்டத்தில், உதட்டில் சாயம் பூசிகொண்டு, உதடுகள் ஒட்டி அவை கலையாத வண்ணம் கவிதை பாடுமாறு கவியரங்கம் நடக்குமாம். இச் செய்தியை பகர்ந்தவர் கவிஞர் முகவை இராஜமாணிக்கனார். ஒரிரு ஆண்டுகள் முன்னோ பின்னோ அவருடைய நூற்றாண்டு வரலாம். **B.A.** பட்டம் வாங்கிய அப்பெருமகனார், படமும் தயாரித்து, பாடல்களும் புனைந்திருக்கிறார். "ஏரு பூட்டி போவாயே அண்ணே சின்ன அண்ணே" பாடல் அவருடையதுதான்.

## குரோனா?!

ஒளியைப் போலே வேகமாய் போகுது!
தானாய் வந்து சத்தமின்றிச்சேருது!
வீணாய்ப் போன மீடியாக்கள் நூற்றுக் கணக்கில்,
கதையைத் தானே சொல்லுது!
அய்யோ பாவம் மக்களுந்தான்,
குழம்பிப் போயி நிக்குது!
கொஞ்சிப்பேசும் குழந்தைகளும்;
தூரமாகிப் போகுது!
சாதியில்லே! மதமுமில்லே!
யாவும் சமத்துவமாய் ஆச்சுது!
ஓடிப் போவாய் ***குரோனா*** என்று
உள்ளந்தானே பதைக்குது! **23-03-2020**



**ஏழைக்கு** எனச் சொல்லி நாம், பலவற்றை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். அ்ஃது எந்த ஏழைக்கும் பயனில்லாது தான் போகிறது. சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னால், அஞ்சல் அட்டை 15 பைசாவிற்கு விற்கப்பட்டது, மறுநாளே கடிதம் உரியவருக்கு சென்று அடைந்து விடும். அப்போதே இழப்பு இரண்டு ரூபாய், ஏழைகளின் பயன் பாட்டுக்காக உயர்த்தவில்ல எனக் கூறி வந்தது அரசு. அடுத்த ஓரிரு ஆண்டுகளில், தனியார் கையில் துரித அஞ்சல் என கொடுக்கப்பட்ட போது, அது பத்து ரூபாயாக நின்றது. அவசரத்தேவைக்கு மட்டுமல்ல அடிப்படைதேவைக்கும் ஏழைகளும் அதனைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயமாயிற்று. அதே நேரத்தில், அஞ்சல் அட்டை ஐந்து ரூபாய்க்கு என இருந்தால், அஞ்சல் துறையும் நிறைந்திருக்கும் மக்களுக்கும் பயன் பட்டிருக்கும், சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் சென்னை மின்சார ரயிலில் முதல் வகுப்பு மாதாந்திரக் பயணச்சீட்டு எட்டாக் கனியாக இருந்தது. இன்று அது, மிகவும் குறைவே. அரிசி விலையைக்குறைக்கும் அபாய சிந்தனையால், அது கட்டுபடியாகாத தொழிலாகி, அவர்கள் நகர்புறத்தில் குடியேற்றம் பெற்று, அவை மஞ்சள் குளித்த கற்களோடு, மனை களாகிவிட்டன. தற்போது, பருப்பு வகைகள் மட்டுமே இறக்குமதியாகின்றன. அடுத்த ஓரிரு ஆண்டுகளில் அரிசியும் இறக்குமதியாகும். அதன் பின் சமைத்து பக்குவப்படுத்தப் பட்ட உணவை இறக்குமதி செய்து, அவர்களது நிர்ணயித்த விலையை தரவேண்டிய வர்களாவோம்.

ஏழைகளிடம், அன்பும் இருக்கும் பண்பும் இருக்கும், சொற்களைச் அடுக்கிச் சொல்லும் திறண் இருக்காது. ஆனால், பணக்காரர்களிடம் பணம் மட்டும் தான் இருக்கும். மனித நேயத்தையே மறக்கச் செய்யும் மனம் கொண்டது பணம். ===0==




**<u>சைவ சமயம்!</u>** சைவர்கள், சைவ உணவு (மரக்கறி) உண்டவர்கள் (உண்பவர்கள்) போற்றி வளர்த்ததால் அது, சைவ சமயமாயிற்று என்பது பொதுவான கருத்து. ஒரு தொலைகாட்சி பேட்டியில் மறைந்த குன்றக்குடி அடிகளாரும் எடுத்துக் காட்டுகளுடன் விவரித்து இருக்கிறார். சைவ சமயம் தன்னுள்ளே கடவுளைத் தேடுவது. உள்ளங்கடந்து நிற்பதால் அவன் கடவுளானான். உலகின் அனைத்திலும், அனைத்து உயிரனனங்களிலும் கடவுளைப் பார்ப்பது, வைணவ சித்தாந்தம். இறைந்து கிடப்பதனால் அவன் இறைவன் ஆனான். முற்றிலுமே அறிவு சார்ந்தது, புத்த சமயம் ஆனால் அஃது அவரை, புத்தரை கடவுளாக்கிய பின் தான் மிக்கு வளர்ந்தது. இசுலாமியமும் சைவமும் ஒத்த போக்குடையவை. முருகனைக் கொண்டு கௌமாரம் எனும் ஒரு வழிபாட்டு முறையும் இருந்துள்ளது. சித்தர் நிலை வேறாயினும், ஆசீவகம் எனும் ஒரு வழிபாட்டு நிலை பற்றியக் கருத்துக்கள் உண்டு. அவற்றின் வேர்கள் கலந்தே இருக்கும் என்பதில் ஐயமில்லை துறவு சார்ந்தது, சமன சமயம். பவுத்தம், சமனம், வைணவம், சைவம் அனைத்தும் கலந்ததே இந்திய கலாச்சார பண்பாட்டு வாழ்க்கை முறை. . அனைத்திற்கும் திறவுகோல், தமிழர்தம் வாழ்வியல் நெறியே. தமிழர்களில், அறிவு வழிகொண்டவர்கள் சைவத்தையும், அன்பு வழி கொண்டவர்கள் வைணவத்தையும் பின்பற்றினார்கள். ஆளுமைக்காககவும், ஆட்சிக்காகவும் அனைத்தையும் ஆங்கிலேயர் 'இந்து' வாக்கினர். ஐரோப்பிய கூட்டமைப்பைப் போல் இருக்க வேண்டிய இந்தியாவை, ஹிந்தியாவாக்கி, ஏனையோரை இரண்டாந்தர குடிகளாக்கும் முயற்சி நடக்கிறது.

********* **<u>வாக்களிக்குமுன்.....</u>**

'கை'மைகரையும் முன்னே பொய்மையைப்
புலப்படுத்தும் அரசியல் கூட்டம்;
பெண்மையைப் போற்றும் பெருவாக்கு வரும் வரையில்,
'கண்'மை கூட்டும் காரிகையர் துணை தேடும்;
உண்மையின் உரைகலனாய் உலா வந்தோர்,
நன்மையைத் தருவரோ நானிலத்தில்?
திண்மையாய் தேர்தல் களம் தெளிவாக்கும்;
உண்மைக்கே உறவு சொல்வீர் உரிமை காக்க! *******************

## அன்னைக்கு இன்று பிறந்தநாள்! - 27-01-2020

மண்ணில் என்னை மகனாய்ப் பெற்றவள்,
தன்னிலை மறந்து என்னை வளர்த்தவள்!
முன்னிலைப் படுத்த தந்தைக் குதவிட,
நன்னிலை யாக நானும் வளர்ந்து,
தன்னல மில்லா தையலாள் தன்னை,
நன்நாள் தன்னில் கைத்தலம் பற்றப்,
பின்னியக் காதல் பிள்ளைகள் தந்திட,
மன்னிய உறவாய் பெயர்த்தியும் வந்திட,
அன்னையின் மனமோ ஆனந்தக் கூத்தில்,
நன்னிய நாளில், மகிழும் மனமோ,
அன்னையவள் நெடிதுவாழ வேண்டும் இறையையே!



**==0==**

## கல்வி!

முன்பெல்லாம் படிப்பு என்பது அறிவின் தேடலாக மட்டும் இருந்தது. ஆய்ந்தறிதல் என்பதும் அறிவுக்கூர்மை என்பதும் படிப்பால் கிடைப்பது அன்று. உலகலாவிய விஷயங்களை அறிந்து கொள்ளும் நிலையே படிப்பு. படிப்பாளிகளை மிக்கு மதிக்கும் நிலை, ஆங்கில வழிக் கல்விக்குப் பின் நம் நாட்டில் நிலை பெற்று விட்டது. படிப்பாளிகளை அறிவாளிகளாக கருதும் நிலை தவறு என்று திரு அம்பேத்கர் ஓரிடத்தில் சுட்டியுள்ளார்.

முதன் முதலாக பட்டம் வாங்கிய ஒருவனுக்கு பட்டம் வழங்கியவன் பட்டம் பெறாதவனாகத்தானே இருந்திருப்பான் என எந்தையார் கூறுவார். அதிக மதிபெண்கள், கல்லூரியில் தொழில் படிப்பு, நல்ல சம்பளம் நிறைய வேலை என குழந்தை களைத் தயார் படுத்துவது பெற்றோர் தானே? அந்நிலையில் முயன்று, நல்ல மதிப்பெண் எடுத்த மாணவியை பாராட்ட மனமில்லை என்றால் வருந்துமாறு எழுதாமல் இருக்கலாமே!

## வாட்ஸ்ஸப் வேதனை!



வீடியோ எல்லாம் போடாதே!
வேலையத்தான் கெடுக்காதே!
டேட்டா எல்லாம் கரையுது!
போட்டோ மட்டும் என்னவாம்,
பொழைப்பைத் தானே கெடுக்குது!
குடும்பக் கதை பேசுங்க!
பழையகதை பேசுங்க! படமிருந்தா பகிருங்க!
நாளும் குப்பையைத்தான் கொட்டினா,
கொள்ளை போகும் நேரமே!
அழிச்சு அழிச்சு வெரலுந்தான் ஆற்றாமையால் வேகுது!
நல்ல செய்தி சிலவுமே, படிக்காமலே அழியுது!
ஒரு குழுவில் பகிர்ந்தாலே
ஊருக்கெல்லாம் தெரியுமே!
தனியே வேறே அனுப்பி வெச்சா,
தட்டமாலை சுத்துது! எல்லோருமே மாறுங்க!
இதய கருத்தை பகிருங்க!
மேலே மேலே அனுப்பினா மூச்சு முட்டி போகுது!
பாட்டியான பாப்பா கூட காணாமலே போகுது!
சின்ன வயசு கதையெல்லாம் சிந்திச்சு எழுதுங்க!
பங்கெடுத்த மக்களோட,
படிப்பவங்களும் மகிழ்வாங்க!
எழுத்தாளர் யாவரும் உங்க குள்ளேயும் இருக்காங்க!
தேவையில்லா பதிவுகளை,
திருப்பி திருப்பி அனுப்பாம
எழுதித்தானே பாருங்க!
இதயம் சிலிர்த்து போகுங்க!

\- **கவிஞர் கவிவளவன்** ©




## மகாகவி சுப்பிரமணிய பாரதி!



தேனூறும் தமிழ்க்கவியை திகட்டாமல் செய்தவனோ!
பாநூறு வகையறிந்து, பண்கூட்டி இசைத்தவனோ!
ஆத்மாவின் விடுதலைக்காய் ஆயிரம் கவி செய்தவனோ!
சாத்திரத்தின் வேர்பிடித்து, சங்கடங்கள் தீர்த்தவனோ!

# தமிழில் பெயர்

எத்ததுனைப் பெயருக்கு தமிழில் பெயர் சாத்தியம்? மாயோன் மாலன்; விஷ்ணு வாக, மருகன் முருகனோ, சண்முகனான். கடம்பனும் இடும்பனும், காவல் தெய்வமாக, வருத்தம் கிலேசமானது. சொல்லும் மொழியும் பறைதலும், வார்தையாய் வடம்பிடித்தது. அரண் இராணுவமானது. தமிழையே ஒருநாள் விக்குருதி என்றனர். அழகைச் சிருங்காரமாக்கி, வண்ணத்தை வர்ணமாக்கி, வருணமாய் மனிதனைத்தாக்கி, வருள்நன் என்னும் மழையை வருணன் ஆக்கி, இந்திரனைப் படைத்து, அவனோடு இயக்கி விட்டனர். ஒளியாகியப் பகலன் ஏழு வண்ணமுடையவன் என்றதை, ஏழுகுதிரைப் பூட்டியத் தேரில் வலம் வருவதாய் எழுதி வைத்தனர். இப்படி எத்தனையோ? எங்கே தேடுவது தூய தமிழை?



## கைபேசி!

**மணி பத்தரை தாண்டி போச்சுதையா;**
**எத்துனை பேரின் கைகளிலே,**
**கணினி இன்னும் தழுவுது பார்!**
**கைபேசி காணும் விரலசைவில்,**
**காணும் செய்திகள் உருளுது பார்!**
**அக்கம் பக்கம் பேச்சில்லை!**
**அவனியில் எதற்கும் கவலையில்லை!**
**ஐயகோ இறைவா காப்பாற்று!**
**யானுமோர் அடிமையாய் ஆனேனோ!**
**27-09-2015**


என்றோ ஒரு நாள்,
மரித்து போவதற்காய்;
இன்றே அழுதுக்
கொண்டிருக்க மாட்டேன்!

இனி,
வாழ்க்கையை,
வேடிக்கை பார்ப்பதே என்
வாடிக்கை!
55 ஆண்டுகள்;
தொலைந்து விட்ட
பின்னும்,
வாழ்க்கைத் தேடலில்;
இன்னும் தெளிவு
கிடைக்கவில்லை!

==0==

## கணினிக் காலம்


கணினிக் காலம் காலமென்பார்;
காத தூரம் கையிலென்பார்!
பேணிக் கழிக்கப் பெரும் காலம் கிடைக்குமென்பார்!
மானிட வாழ்விலோர்
மகத்தான சாதனை யென்பார்!
மானிடர்காள் உண்மையதே; மறுப்பதற்கேதுமில்லை!
எங்கள் சுங்கத்துறை கண்ட,
தங்கப் பயணமிதில்
தடைகளுண்டு, குறைகளுண்டு;
தடுமாறும் நிலையதுவோ
எந்நாளும் இருந்ததில்லை!
நடைபயிலும் ஆமையதும் வெற்றியுறும்; இருநாளாய்,
வெளியேற்ற உத்திரவு பெறும்;
பட்டியல்கள் வெளியேற!
அரைமணியே குறைவு என்பேன்!
அடுத்த நாளும் வந்துவிட்ட,
அவதியிலே குவியும் முகவர்!
என்னே இடர் மேலாண்மை? **28.06.2018**



## செல்வி ஜெயலலிதா!

தைரியமும் தன்னம்பிக்கையும் கொண்ட ஒருவர், உறுதிப்பாடு மிக்கவர், தனக்கென ஒரு குடும்பச் சூழல் இல்லாத போதும், தெளிவாக வலம் வந்தவர். ஆணாதிக்கம் மிக்க, பெண்களை முற்றிலும் மதிக்காத, திரைத்துறை வாழ்க்கையே அவரை உளவியல் அழுத்தம் கொடுத்து, மந்திரிகளாகவும், மற்றவர்களாகவும் நின்றவர்களின் மீது ஆளுமை செலுத்தவும் செய்திருக்கலாம். அவர் சார்ந்திருந்த அரசியல் சூழலில், என்ன செய்ய இயலுமோ அதனைச் செய்திருக்கிறார் என்றே சொல்லலாம். அவருடைய ஆன்மா எல்லாம் வல்ல இறவனடி சேர விழைகிறேன். **06-12-2016**

# மழை தந்த பாடம்!



**மதமில்லை மொழியில்லை**
**மாற்றான் எனும் சொல் இல்லை;**
**இதம் தேடும் நிலை யில்லை**
**இன்னுயிரைக் காப்பதுவே மதமென்றார்;**

**ஏழையுமில்லை கோழையுமில்லை;**
**பணமுமில்லை பொருளுமில்லை;**
**பல்லு யிரும் தள்ளாடும் தண்ணீரில் தத்தளிக்கும்;**
**கோவிலோ மசூதியோ**
**கொஞ்சம் இடம் கொடுத்தால் நிற்கும் நிலை பெறுவோம்!**

**அவன் ஏசுவோ ஈசனோ;**
**எல்லாமாய் நிறைந்த பரம் பொருளோ,**
**உருவோ அருவோ, அல்லாவோ அருகனோ யாரோ அவன்;**
**கற்பித்தான் மானுடர்க்கு;**
**எல்லா வழியும் இறைவனுக்கே!**

**நீரைப்போல் எங்கும் நிறைவதே பரம் பொருள்;**
**யாவிலு ம் அதுவே நிறை;**
**ஜாதி, மதம் மொழி, ஏழை பணக்காரன், யாவும் நிலையில்லை!**
**மானுடம் வெல்ல,**
**மனிதம் தழைக்க அன்பே ஒன்றெனக் காண்போம்.!(05-12-2015)**8.55 PM

## புத்தாண்டு வாழ்த்து! (2016)

பொன்னெனப் பூத்ததோ! புதுமைகள் நிறைந்ததோ!!
மன்னிய நிகழ்வுகளின் மாறிடும் வடிவங்கள்!
பின்னிய வழிமுறை பேசுமோர் ஆண்டின் சுழற்சி!
நன்னிய நலங்களை நாமெலாம் தேடுவோம்!
அன்னியன் ஆண்டோ ஆண்டவர் ஆண்டோ!
திண்ணமாய் விளைந்த திங்களின் தொடக்கம்!
மண்பதை போற்ற மானுடம் தழைக்க;
எண்ணமாய் கொண்டு எழுவோம் நாமெலாம்!
புண்ணிய நதிகளின் புதுப் புனல் போலே,


வண்ணமாய் நிறைந்து வளங்கள் பெருகவே!
**- கவிவளவன் 31-12.2015**

## முதல்வர் M.S. கோவிந்தசாமி


அவர்கள் காலமானார் எனுஞ்செய்தி, சுங்கத்துறையில் எங்களோடு பணி செய்யும் நண்பர் திரு நடராஜன், மூலம் கிடைதது. திரு நடராஜன், தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் பிறந்து, வளர்ந்தவர். எங்கள் கல்லூரியில், எனக்குப் பத்தாண்டுகளுக்குப்பின், அதே முதல்வரிடத்தில் படித்தவர்.

இன்று பகிர்ந்த தகவல், முதல்வர் நேற்றிரவு காலமாகி விட்டார் என்பதே! முதல்வர்களுக்கே இலக்கணமாகத் திகழ்ந்தவர். அகவை தற்போது, 90 ஐத்தாண்டி யிருக்கும். மாணவர்கள் அத்துனைபெயரையும் குழந்தைகளாகப் பாவித்தவர். மாணவர் எந்த நேரத்திலும் அவரது அறைக்குள் நுழைய முடியும். பேராசிரியர்களுக்கோ மற்றவர்க்கோ அச்சலுகை கிடையாது. அவ்வளவு அரிய மனிதர்.

எனது கல்லூரி வாழ்கை முடிந்து 39 ஆண்டுகள் அவர் நினைவுகளில் இன்றும். 22 ஆண்டுகள் முதல்வராயிருந்தவர். குறுகிய கால இராணுவசேவைக்குப்பின் கல்விப் பணிக்கு வந்தவர். எனக்கும் திரு நடராஜனுக்கும், இலக்கியத்தேடல், தஞ்சை மாவட்டம், சுங்கத்துறைக்கு அப்பால், எங்களை மிகுதிக்கண் இணைத்தது பூண்டி புஷ்பம் கல்லூரிதான். நாங்களிருவம் எந்நிலையில் எவ்விடத்தில் அளவளாவினாலும், எங்களது கருப் பொருளில் ஒன்றனாக எங்கள் முதல்வர் இருப்பார். பதிப்பாக விருக்கும், எனது இலக்கியத்தேடல்களின் நூலுள் என்னுடைய ஆசிரியர்களை நினைவு கூறுமிடத்து அவரைப் பற்றியும் பகிர்ந்துள்ளேன். இப்பதிவை செய்யும்போது கண்களில் நீர் கோக்கிறது. அந்த மாமகனின் நல்லுயிர், சேருமிடம் சேர்ந்து எல்லாம் வல்ல இறையருளால், நன்னிலை எய்தட்டும்!. 08-07-2019



அன்பே வாழ்வின் பெரும் கலனாம்!
**ஆண்டவர்** வழியில் தேடிடுங்கள்!
இன்பம் தானே தினம் சூழ,
ஈடில்லாப் பெருமைகள் வந்தடையும்!
அனைவருக்கும் இனிய
கிறிஸ்த்துமஸ் நல்வாழ்த்துக்கள்! **25-12-2018**



**சென்னையில் மழை!** 01-12-2015 (07-35 AM)

பட்டனத்து வாழ்வைப் பத்தி பலவிதமாச் சொன்னாங்க,
கிட்டவந்து வாழும் போது கெட்டதெல்லாம் புரியுது;
கொட்டும்மழை தேங்கிப் போயி சாலையிலே நிக்குது!
கட்டவிழ்ந்த மாடுபோல வண்டியெல்லாம் ஆடுது!
முட்டும் குழி சாலையெல்லாம் சாக்கடையாய் ஆனது!
மொட்டவிழ்ந்த பூவின் வாசம் மூக்கும் தானே தேடுது!
பட்டனமாம் பட்டனமாம் இது பரிதாபப் பட்டனமாம்!
பட்டிதொட்டி கிராமமெல்லாம் பக்குவமாய் வாழுது!
கொட்டும்மழை நீரோடி நிலத்தடியில் சேருமே!
கட்டாத சாலையதும் குண்டு குழி ஆகுமே!
கெட்டநீர்ச் சாக்கடையாய் சேர்வதங்கே இல்லையே!
எட்டுதிக்கும் மண்வாசம் எங்கள் நாசி சேருமே!

**தெலுங்கு!** - தேனுகு, தேன் போன்ற சுவையை உடையது என்பதாம். அதுவே தெலுகு எனவும், தமிழ் வடிவில் தெலுங்கு என்றானது என்பர். மொழி அடிப்படையில், இதனைத் தென் திராவிட மொழி என்பர். மற்றவை வடதிராவிடம் என்பதாம். தமிழ், திரளமிளம் ஆகிப் பின் திராவிடமானது என்பதும் குறிப்பு. திராவிட சிசு என ஞானசம்பத்தர் குறிக்கப் படுகிறார் என்பர். இராகுல் டிராவிட் அவ்வாறே. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 25%க்கு மேல் தெலுங்கைத் தாய் மொழியாய் கொண்டவர்கள். ஆனால், கிட்டதட்ட பாதி பேருக்கு பாவா, நைனா தவிர தெலுங்கு தெரியாது. இந்தியாவிலேயே தமிழரை, சொல்லாலும் செயலாலும் **தாக்காதவர்** தெலுங்கர்களே. ஆய்வில் தமிழின் தொன்மை 10000 ஆண்டுகள் எனவும், நூல்கள் 3000 ஆண்டுகள் பழைமை யுடையன என்பதால், உலக அளவில் Classical என்றறியப் படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது, தொல் திராவிடம் என்கின்றனர். தொல் திராவிட மொழி எனும் அடிப்படையில், எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்பிரிந்த மொழிகளாயினும், மற்ற தென்னிந்திய மொழிகளும் Classical ஆயின. நாயக்கர்கள் தென் பகுதியை ஆண்டபோது, தெலுங்கு மக்கள் தொகை அதிகமானது என்பர்.

## ஏது புத்தாண்டு?

\# திங்கள் தோறும் சம்பளம் கொடுத்து,
ஆண்டு முதலாய் அவனியோர் போற்ற;
ஜனவரி 1-ல் பிறக்கும் அதுவோ!

\# அரசியல் சட்டம் அமைத்த நாளில்,
ஆட்சிக்கு வந்த சைத்ர மாதமோ!

\# பிறையைக் காணும் பெருமக்கள் கூறும்,
முகரம் மாதமோ!

\# சீக்கியர் ஒன்று; சிந்து நதிக்கரையில் ஒன்று;
ஆந்திரர்; கன்னடர்; அடுத்து துளுவர்;
மராத்திய சிங்கர் மேவிய நாளோ!;
மானுடம் போற்றும் வங்காளியர் மாதமோ!

\# பூமத்திக் கோட்டில், சூரியன் பார்வை;
நேரே வீழும் நாளாம் அதனை,
சித்திரை ஒன்றாய் சிந்தித்த தமிழர் அறிவோ!

\# அரசாங்கக் கணக்கில்,
புதிய வரவுக்கு புறப்படத் தொடங்கும்;
நாளாம் இதுவோ! எது அது?
**- கவிஞர் கவிவளவன்** ***(31.03.2015)***

## நம் பதிவுகள்!

காலச் சுவட்டில்,
எத்துனை வினாக்களுக்கு விடை கிடைக்கிறது?
தோன்றியும் மறைந்தும் மறந்து போனதுமாய்,
எத்துனை பதிவுகள்!
புதிய பாதை, புதிய கோணமுமாய், மாறும்
பரிணாமங்கள்!
ஆரவாரமாய் ஓடிக் கொண்டே இருந்துவிட்டு,
ஒரு நாள் நிறுத்திப்பார்க்கும் போது,
ஏதோ ஒன்றை பெற்றதாகவோ, இழந்ததாகவோ
தோன்றும்;
அதுவே, நம் பதிவு! **26-02-2015**

## தியாகத்திருநாள் வாழ்த்துக்கள்!



எண்ணிலாக் கனவுகள் இதயம் சுமந்திட,
மண்பதை போற்றும் மரபுகள் காத்து,
நன்னிய நட்புகள், நலம்பட வளர,
இன்னிய உலகில் இயைந்து வாழ,
மன்னிய உறவின் பெருமைகள் தேற,
புண்ணிய மாந்தர் புலர்ந்து எழுந்திட,
கண்ணியமாகத் தியாகத்தின் பொருளை,
அழகுடன் உரைத்தார் அன்னல் நபி வழி,
அனைவருக்கும் **தியாகத் திருநாள்** வாழ்த்து!
**கவிவளவன்** -13-09-2016 - 14.20 AM

## <u>இயங்குவது யார்?</u>




ஓர் இயக்கு சக்தி அல்லது இயங்கும் சக்தி! உடலில் உள்ளிருந்து , உயிர்த்தலை மெய்ப்பிப்பதோடு ,மூளையின் நினைவகத்தில் காட்சியை நிலைப்படுத்தி , சிந்தையின் செயல்வடிவமாகிறது. உடலுக்கு அப்பால் நிகழ்வதையும் ,நிலைப்பதையும் உணர்பவன் ,இயன்நிலை அறிகிறான். அதுவே ,இறைமையாகவும் நல்லறிவாகவும் உணரப்படுகிறது. உள்ளொலியால் ,தேடலை மறந்து ,தெளிவாகிறான். இதைத்தான் , ஆசையே துன்பத்திற்கு காரணம் என்றார் புத்தபிரான். அன்பு காட்டச் சொன்னார் ஏசுமகான். கடமையைச் செய் பலனைத் தேடாதே என்றான் கண்ணன். யாவற்றையும் இறைவன் அளித்து விட்டான் ; உன்னையுணர்ந்து நீ வாழ் என்றார் நபிகள் நாயகம். அனைத்துயிரையும் நேசித்த சமனமும் ,யாவிலும் இறைமை கண்ட வைணவமும் ,உள்ளொளி (லி) யாய் நிறைவதே இறைமை என்ற சைவமும் நம் மண்ணில் முன்னோர் தெளிந்துச் சொன்னவை. சித்தம் தெளிந்தவர் சித்தர். மதம் ,மொழி , இனத்துக்கு அப்பாற் பட்டவர். **16-06-2019**

## குடியரசு நாள் வாழ்த்துக்கள்!

மக்களால், மக்களுக்காக;
மாட்சிமை பொருந்திய,
மக்களின் அரசு "மக்களாட்சி" யாய்,
மலர்ந்த நந்நாள்!
வேற்றுமையில் ஒற்றுமையை,
வியனுலகம் காணவைத்த;
நந்நாடு!
மதம், மொழி, இனம் என
எத்துனைக் கூறுகள்!
ஒற்றைக் குடையின் கீழ்,
ஒரு துணைக்கண்டம்!
ஐரோப்பாவை மிஞ்சும்,
ஆயிரம் கூறுகள்!
இயற்கைக் கூட்டும் தட்ப வெப்பம்;
இந்து மாக்கடல் முதல்,
இமயம் வரை வெவ்வேறானவை!
முன்னூறு ஆண்டுகள்,
நம்மைக் கோலோச்சி,
முகவரி திருத்திய,
ஆங்கிலேயரால்,
ஆங்கிலத்தால் ஒன்றானோம்!
அனைவருக்கும்,
இனியக்
**குடியரசு நாள்**
**"வாழ்த்துக்கள்"**
அன்புடன்,

**கவிவளவன் (26-01-2019)**




### தமிழ்

மொழியே அழகோ!
மொழிவதும் அழகோ!
விழிக்கு இமையாய்;
வியப்புறு வாழ்வியல்,
எழுதிவைத்தவன்;
தமிழனே அன்றித்,
தரனியில் எவனோ?
மொழியின் பெருமையில்,
முகிழ்ந்து விடாமல்;
அமிழ்தாம், தமிழையும்;
அடுத்துப் படியுங்கள்.
- கவிவளவன் (21-02-2020)

## புத்தாண்டு 2019

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்;
நமது முகவரி மாற்றிய,
புத்தாண்டு பிறந்தது!

சொல்லும், செயலும்,
வாழ்வும் வனப்பும்,
எழுவதும் நிறைவதும்;
இயந்திர மாகிய,
வாழ்க்கைத் தொடரில்,
அத்துனை குறிப்புக்கும்,



ஆங்கிலத் தேதியே!

இணைந்து கொண்டதால்,
இயைந்து விட்டோம்!
கணினி இயலோடு,
யாவற்றுக்கும் அதுவே,
கணக்குப் பெட்டகம்!

இயலாகவும், இயல்பாகவும்,
நிறைவு கொண்ட,
ஆங்கிலப் புத்தாண்டில்;
அனைவருக்கும் வாழ்த்து!

எந்த உயிரினமும் மற்றவற்றை துன்புறுத்துவதில்லை, மனித இனத்தைத் தவிர. உணவுக்காக கொல்லுதல், இயற்கை நிகழ்வு. அதனால் தான் கொன்றால் பாவம் தின்றால் போயிற்று என்றார்கள்.

## பொங்கல் வாழ்த்து! ( 13-01-2019 )

பொங்கல் என்பது புதுமையும் அல்ல!
புத்தாண்டு என்பது நிலையும் அல்ல!
சங்கம் கண்ட அறிவின் மேலோன்,
சாற்றுமோர் நன்றி நாளிதுவே!

பங்கமில் வாழ்வியல் கண்ட மரபினன்;
படைத்தான் இறையையும் அவனே!
எங்கும் நிறைந்த இயற்கையினூடே,
இயன்நிலை வாழ்வைக் கண்டானே!

தங்கும் பெருமை நிலைத்திடவே,
தரணியில் பெருமை காத்திடவே,
பொங்கல் செய்து கதிரவனை;
பூசித்து தானே மகிழ்ந்திடுவீர்!



தங்கள் வாழ்வியல் செழித்திடவே;
தந்தன ஆவினங்கள் என்றானே!
பொங்கிடும் புராணீகர் சூழ்ச்சிதமை;
புறத்தே தள்ளி வாழ்ந்திவீர்!
அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

**இட ஒதுக்கீட்டில் புதிய பாதை**

# இளமையோடு,
வறுமை கலந்து,
இயன்நிலை மாறாதிருக்க;
ஆதிக்க வெறியரின்;
ஆளுமைத் துளிர்விட,
பொருளாதாரம் எனும்
புதிய வழி பிறக்கட்டும்!

# முதன் முறையாய்,
கல்வியில் கால் வைத்து,
பள்ளிப் படிப்போடு,
அரசுப் பணியில் சேர்ந்தவன் மக்கள்;
வறுமைக் கோட்டின்,
மேலே நின்று,
கல்லூரிப் படிப்பைக்
கனாவாய்க் கொள்ளும்!

# மளிகைக் கடை,
மருந்துக் கடை,
தனி வணிகர்,
தனியார்த்துறை யாவரும்,
வறுமைக் கோட்டுக்குக் கீழேயே
வருமானத்தைப்புதைப்பர்!

# இருதலைமுறைக்
கல்லூரி கண்டு,
பட்டம் பெற்றோருக்கு;
இல்லையென்றுச் சொல்லுங்கள்!
அங்கே,
கொஞ்சம் கொஞ்சமாய்,
சாதீயமும் அழிந்து போகும்!

# குருதிச் சிவப்பென்று;
கொள்கைச் சொன்னாலும்,

இல்லாதவன் வாழ்க்கை;
என்றும்,
ஏற்றம் காணாதுதான்!

#கல்வியே வாழ்வின் விழி!
அரசியல் கொள்ளும்,
ஆடுகளாமாய்,
வாழ்வைச் சிதைக்காதீர்!

# கல்வியை மட்டுமே,
கலனாய் நிறுத்தி;
பெறாதவரையும்
பெறச்செய்யுங்கள்!

அங்கே,
அறிவு சிறக்கும்!
ஆற்றல் வெளிப்படும்!!

சாதீயம் எனும் சங்கடம் கூட,
கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து,

ஒருநாள்;
இல்லாது போகும்!

**- கவிவளவன்**

# தேடிய பணம்!

கோடியில் பணம் செய்த,
கோமாளி யெல்லாம்;
ஏமாளி ஆனாங்க!

தேடிப்புதைத்து வைத்த,
மானிடராய் ஆனாங்க!

மோடி மஸ்தான்
வேலையைத்தான்;
இந்த மோடிதானும் செஞ்சாரு!

காசிருந்தும், பணமிருந்தும்,
காகிதமாய்ப் போனதாலே,
ஏழைகளும் தவிச்சாங்க,
காசிருந்தும் பசியோடு!

கோடியிலே வியாபாரம்,
கொண்டவங்க நிலைச்சாங்க!
சில்லரை வியாபாரி
சிரிக்காமல் அழுதாங்க!

இந்த ஐநூற்றை வெச்சு நான்,
என்ன செய்வேன்னு!

ஐந்நூறாய்க் கூலி வாங்கி,
அடுத்த வேளைக்கஞ்சிக்கு,
அரிசி வாங்க காசின்றி,
ஆலாய்ப் பறந்தாங்க!

அதானி அம்பானி,
அடுத்து நின்ற அதிகாரிங்க,
எம். எல். ஏ., எம்.பி., மந்திரிங்க,
யாருக்குமே கவலையில்லை!

டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு,
ஐ.டி. மக்களெல்லாம்,
அய்யோ ஆனாங்க!

நிலையா வாழ்விதிலே,
நிலையாகப் பணம் தேடும்,
கேடுகெட்ட மாந்தருக்கு;
புத்திதெளிய வெச்சாரு!
எங்க மோடி பிரதமரு!

விடுதலைத் தவறி,
சீர்கெட்டு, பாழ்பட்டு நின்றதாம்;
எங்கள் பாரத தேசந்தன்னை;
வாழ்விக்க வந்த,
"மோடி"மகான் நீ வாழ்க!

**12-11-2016**



## பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு...!

பொருளாதாரம் வரன்முறைப் படுத்த இயலாதது. முறைசாரா தொழில் செய்வோர், வணிகர், வேளாண்மை செய்வோர் ஆகிய யாவரும், எளிதாக நலிந்தவராகி விடுவர். பன்னாட்டு, நிறுவனங்கள் உள்ளிட்ட தொழில் முனைவோர் யாவரும், வருமான வரித்துறை வரம்பில் வராத வகையில், தத்தம் ஊழியர்களுக்குச் சில சலுகைகளைச் செய்கின்றனர். அரசு, அரசு சார்ந்த நிறுவன ஊழியரே பெரும்பாலும், முழுமையாக வரி செலுத்துவோர் ஆகிறார்.

நீண்ட நாட்களாக இட ஒதுக்கீட்டில் வலியுறுத்தி எழுதி வருவது, கல்வியில் மட்டுமே சலுகை. அதுவும், தொடர்ந்து இரண்டு தலைமுறைகள், கல்லூரிக் கல்வி பெற்று விட்டால், அவர்தம் வாரிசுகளுக்குச் சலுகையை நீக்க வேண்டும் . இதனால், புதிய ஒருவருக்கு வாய்ப்புக் கிடைக்கும். அதனால் பிறக்கும் காழ்புணர்ச்சி அடங்கும். அத்துடன், 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 30 அல்லது 35 விழுக்காடாகக் குறைக்கலாம். சாதியின் அடிப்படையில் தரப்படும் சலுகை பெரும்பாலும் அவ்வினத்தில் வசதி யுள்ளோரே பெற்றுள்ளனர். பள்ளர் எனும் தேவேந்திரகுல வேளாளர் சமூகம் அடிப்படையில் நிலவுடைமைச் சமூகம். ஆகையால், இன்றளவும் சலுகை அதிகம் பெற்றோர் அவரே. பறையர் எனப்படும் பிரிவினர் பெற்ற பயன் மிகவும் குறைவே!

நிற்க, சிறப்பாக, அனைத்து சைவ வேளார்களும்; நிலவுடைமைச் சமூகமாக வாழ்ந்தமையால், கல்வியில் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆதலால், அரசுப் பணியில் மிகுதிக்கண் நுழையவில்லை. ஆனால் நிலவுடைமை சமூகமாக வாழாத பிராமணர் கல்வியில் கவனம் செலுத்தி, அரசுப் பணிகளில் அதிகம் சேர்ந்தனர். அவ் வாய்ப்பினால், பிற சமூகத்தார் மீது, ஆளுமையைத் தொடங்கினர். இதனைக் கண்ணுற்ற சைவ வேளாண் சமூகத்தில் பிறந்த ஒருவரே, நீதிக் கட்சி ஆட்சியில், 1925-ல் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டைக் கொணர்ந்தார். விடுதலைக்குப் பின் இந்தியா முழுமைக்கும் பரவி 1950ல் அட்டவணைப் பட்டியல் எனும் அடிப்படையில் வந்தது.

இன்று, சைவ வேளாளர் பெரும் பாலோர் நிலவுடைமையிலிந்து வெளிவந்து விட்டனர். அவருள் தொழில் முனைவோர் வெகுசிலரே. ஆகையால், பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்பதை அனைத்து இனத்தாரிடத்தும் மிகக் குறைவானவரே பெற முடியும். அதுவும் நிலைக்கலன் தவறானதாகவே இருக்கும். துளுவ வெள்ளாளருக்கு முதலில் கிடைக்க, சோழிய வெள்ளாளருக்கு, இட ஒதுக்கீடே தாமதமானது. தஞ்சையளவு அன்று செங்கையில், நிலவுடைமை சமூகமாக இருந்தும், வேளாண்மை செழுமையாக இல்லாததால், பணிகளைத் தேடினர்.

இன்று, முன்னேறிய சமூகத்தார் பின் நுழைவுக்காக, 10% பொருளாதார அடிப்படை கொண்டு வந்துள்ளனர். புரோகிதர், சாஸ்திரி, சிறு தொழில் முனைவோர் ஆகியோர் பயனடைவர். அன்றும், இட ஒதுக்கீட்டுக்கு எதிராக, எளிதாக அரசுப் பபணியில் உள் நுழையவும் பதவி உயர்வு பெறவும் பிராமணர் தொடங்கி முன்னேறிய்ச் சமூகத்தார் கைக்கொண்டது Stenographer பணி. ST யை விட விரைவான பதவி உயர்வு கண்டனர். அதனில் அவரை யடுத்து சைவ வேளாளர் உள்ளிட்ட முன்னேறிய சமூகத்தார் சிலரும் பயன் பெற்றனர். அதுபோல்தான் இதுவும் ஆகும். **எனவே இது யாவருக்கும் எவ்வகையிலும் மிகுதிக்கண் பயன் தராது.மேலும், பொதுப்பிரிவில், தரப்படுவதால், பூர்த்தி செய்யப்படாத நிலியில் அவை வீணாகும்.** அனைவருக்கும் கல்வி தந்தாலே போதும். அதுவே, அறிவைச் செப்பனிட்டு, சமூக சமநிலையை நடைமுறைப் படுத்த வழிகோலும்! ==0==

அறமிலா நெஞ்சத்தின் ஆக்கம் செயலிலை!
உரமிலா உள்ளத்தின் நட்பால் பயனிலை !
வளமிலா அறிவின் கொற்றம் சீரிலை!
இழிவிலாச் செயலின் நோக்கம் அழிவிலை!
- **கவிவளவன்** 30-11-2015,

## விடுதலைநாள் வாழ்த்து!

புண்ணியம் கொண்ட மண்ணில் பிறந்து,
கண்ணியம் மிக்க வழியில் வளர்ந்து;
திண்ணியராக வாழ்வை நகர்த்த,
எண்ணியே நாம் இருந்தோம் இல்லை!

அரசியல் என்னும் ஆணவக் கூத்து,
இரவல் கொண்ட அன்னிய மாண்புகள்!
கரங்கோத்து, வாழ்வியல் சிதைக்க,
தரமும் கெட்டு, தன்மையும் சிதைந்து!

இன்னியோர் வாழ்வில் இனிமை கூட்ட,
நன்னிய நாளாம் இதனில் உவந்தே,
மன்னிய மரபுகள் மருவின்றி காத்து,
நன்னிலைப் பெற்று, நலமுடன் வாழ்வோம்!

**15.08.2017**

## ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்!

மானுடம் தழைந்து மனிதம் வாழ,
இறைவன் அனுப்பியத் தூதராம்
முகமது நபிகள்; அன்பின் வழியை
அழகாய்ச் சொல்லி,
நோன்பின் வழியில் இறைமை காட்டி,
ஈகை என்பதும் இறைவன் வழியென;
யாவர்க்கும் உணர்த்த
**ஈகைத் திருநாள்** கொண்டாட வைத்தார்!
அவ்வருளார் வழியில், இறைமை தேடும்;
அனைத்து உள்ளங்களுக்கும்,
நெஞ்சார்ந்த *ஈகைத் திருநாள்* ***வாழ்த்துக்கள்***
**16.08.2018**

## ஆழ்வார்கள்!

திருமாலை உளம் உருகி நினைந்து நெகிழ்ந்து, ஆழ்ந்து பக்தி செலுத்ததியவர் ஆழ்வார் எனப்பட்டனர். அவர் சென்று, பெருமாளை தரிசித்து பாடிப்புகழ்ந்தமை மங்கள சாசனம் எனப்படும். அத்திருக்கோவில்கள் திவ்விய தேசங்கள் எனப்படும் அவை 108. அவற்றுள் இரண்டனுக்கு பூத உடலுடன் செல்லவியலாது. அவை **திருப்பாற்கடல் பரமபத வாசல்** என்பதாம். அவர் பன்னிருவர். அவருள் மதுரகவியாழ்வார் தன்னுடைய குருவான, சடகோபன், பராங்குசன் என்றறியப்படும், இறைவனாலேயே நம்மாழ்வார், எனப் புகழப்பட்ட நம்மாழ்வாரை மட்டுமே பாடியுள்ளார். பதினோரு ஆழ்வாகளாலும் பாடப்பட்டவர் அரங்கன் மட்டுமே! திருமங்கை மன்னர்தான் பல ஊர்களுக்கும் சென்றவர். மல்லையில் ஸ்தல சயனநாதரையும், நின்றவூரில் பக்தவத்சலத்தையும் இரண்டிரண்டு பாடல்கள் மட்டுமே பாடினார். மற்றவர்க்கெல்லாம் பத்து. காஞ்சி வரதனைப்பாட வில்லை. சைவசமயக்குரவர் நால்வரும் பாடிய ஸ்தலங்கள் பாடல் பெற்றவை என அறியப்டும். அவை 278 எனக்கருதுகிறேன். 30-03-2019

## கள் விகுதி:

**வாழ்த்து**! ஒரு முற்றுச் சொல். “**கள்**” தேவையில்லை! கால ஓட்டத்தில் ஹிந்தி பயில்வது அறிவு என்பதைப் போல், நம் மொழியிலும் ஒவ்வாதன செய்து விட்டோம்!. அவர், அவை, இவை யாவும் பன்மையே. ஆயினும், ஆன்ற அறிவுடையோர் பலரும் அவைகள், இவைகள் என்றுதானே எழுதுகின்றனர். அது, அவை. அவன், அவள், அவர். “**கள்**”ளைச் சேர்க்கும் போது, சொல் ஆடாமல் இருக்க வல்லினம் மிகுதல் “க்” இயல்பு. அடிப்படையே தவறு. இங்ஙனம் “வாழ்த்துகள்” எனத்தான் எழுத வேண்டுமாய் ஒரு கூட்டம். அகர ஈற்று பெயரெச்சத்தின் கண் வல்லினம் மிகாது என்பது இலக்கணம். அதாவது, பெயரைத்தாங்கி, விளக்குவது பெயரெச்சம். **பெரியன** குதிரைகள்.டாக்டர் மு.வ. தனது மொழியியல் வரலாறு தொகுதி மூன்றினுள் “**கள்**” விகுதி குறித்து எழுதியுள்ளார். **(27-02-2020)**

**<u>தமிழ்நாட்டில் வேளாண்மை நிலை குறித்து வந்த பதிவுக்கு..! (புலனம்)</u>**

அருமை என்பதை விட, ஓர் உண்மையான உள்ளக் குமுறல். கல்லூரியில் படித்த காலத்தில், வேளாண்மையே வாழ்வியல் அறமென்றும், சட்டம் பயின்று, அத்தொழிலோடு, வேளாண்மையும் வாழ்வியல் அறனென்று காக்க நினைத்தேன். **1977**ல் கடும் புயல் வீசிய போது, அப்போதைய தமிழ்நாட்டரசு, மக்களின் உயிர்நாடியான வேளாண்மை கையறுநிலை அடைந்த போது, காக்க மறுத்து விட்டது. வெளிமாநிலத்தில் நெல்லை விற்கும் நிலையைச் செய்திருந்தால், கொஞ்சமேனும் இழப்பை ஈடு கட்டியிருப்போம்.

அடுத்து வந்த **3, 4** ஆண்டுகளில், வேளாண்மை இன்னும் கீழே தள்ளப்பட, சிந்தை மாறி, பணி தேடும் படலம் வந்து, சென்னை வாழ்க்கைக் களமானது. ஒரு போக விளைச்சலாக, பெயருக்கு வருகிறது. புஞ்சையில் வளரும் கருவேலம் (காட்டுக் கருவை என்பர்) 1960 களின் தொடக்கத்தில் அப்போதைய அரசு அமெரிக்காவினின்று விதை கொண்டுவந்து தூவியது, விறகுக்காக. காவிரி டெல்டா பகுதியில், நஞ்சையிலும் புஞ்சையிலும் இன்று அவைதான் கோலோச்சு கின்றன. வருவாய் தருகிறது.

**வான் பொய்யினும் தான் பொய்யா** காவிரி பொய்த்துவிட்டமையால், வான்மழை கொண்டு, ஒரு போகம் விளைவிப்பதே பெரும் பாடாகிறது. அன்றைய அரசு **(1977-84)** வாக்கு வங்கியை வளப்படுத்தும் முகத்தான் இலவசங்களில் இறங்கியது. *அடுத்து வந்த அரசுகளும் அப்பணியை செவ்வனே செய்து வருகின்றன* வேளாண்மையின் மீதிருக்கும் ஆவல் குறையவில்லை. இன்றும் ஒருகிலோ நெல் 10 ரூபாய் அளவில் அரசு கொள்முதல் செய்கிறது. ஒரு கிலோ அரிசிக்கு நெல் உட்பட **20** ரூபாய்தான் ஆகும். **ரூ 40/-** க்கு கீழ் அரிசி யுண்டோ?

அன்றைய சூழலில், குடிமைப்பணி முதலான தேர்வெழுத இயலாவண்ணம், வயது வரம்பை அன்றைய நடுவண் அரசு குறைத்துப் பல குளறுபடிகளும் செய்தது. ஆசைதீர சட்டம் பயின்று விட்டேன். அடுத்த சில மாதங்களில் பணிநிறைவு. என்னுள் ஊறும் கவிதை மனத்திண்மையைப் பேணி மகிழ்வுடன் வைத்துள்ளது.**40** ஆண்டுகளாக நெஞ்சில் ஊறியிருந்த உணர்வு, இன்று, கிளர்ந்து விட்டது. ===0=== **18-01-2020**

## மனிதநேயம்

இன்று (11-03-2020) தொடர் வண்டியில் ஏறி அமர்ந்ததும், எதிருக்கை வரிசையில் ஒருவர் படுத்திருந்தார். கண்கள் இறுக மூடியிருந்தன. முதல் வகுப்பு, கூட்டம் அதிகமில்லை யாதலால், எவரும் அவரை எழுப்பவில்லை. குறிப்பிட்ட நேரத்துக்குப் பின் கண்ணயர்ந்துள்ளேன். கடற்கரை நிலையம் வந்துவிட்டது என, எதிரில் படுத்திருந்தவர் எழுப்பினார். அவர் அமர்ந்திருந்தார். கண்கள் இறுக மூடித்தான் இருந்தது. பார்க்க இயலாதவர் என உணர்ந்தேன். எதிரில் இருப்பவர் உறங்குகிறார் என உணர்ந்து எழுப்பியுள்ளார். அவரைக் கேட்டேன் தாங்கள் இறங்கவில்லையா யென. மீண்டும் தொடர்ந்து செல்வதாய்க் கூறினார். வெளியில், கூட்டம் முற்றிலும் வெளியேறி இருந்தது. இது போல் *அன்றொரு நாள்* உறங்கி விட்டேன். பின்னாலிருந்த பெட்டியிலிந்து இறங்கிச் சென்ற அன்பர், எழுப்பி விட்டார். தோற்றமும் உடையும் அவரை இசுலாமியர் என தெற்றென விளங்கச் செய்தது. எந்நெற்றியில் எப்போதும், விபூதியும் செந்தூரமும் விளங்கும்.

**மனம் நிறைந்த மா மனிதர்!** ஒட்டு மொத்த இளைய சமுதாயமே அப்துல் கலாமிற்காக அஞ்சலி செலுத்தியுள்ளது. எங்கும் மௌன ஊர்வலம். வீதி முடுக்குகளில் புகைப்படம் வைத்து அஞ்சலி. வீதி ஊர்வலம். அரசியல் அச்சுறுத்தல் இல்லாமலேயே கடையடைப்பு. எவ்வித கூக்குரலும் இல்லை. கூச்சல் இல்லை. அமைதியாக அஞ்சலி நடைபெற்றது. இஃது எதனைக் காட்டுகிறது? உண்மையாக நாட்டையும் மக்களையும் நேசித்ததுடன், இளைய சமுதாயத்துக்கு எழுச்சி கூட்டியதுமே அவரை அனைவரது மனங்களிலும் நிலைபெறச் செய்து விட்டது. தேடாமலே கிடைத்த பதவிதான், அந்த குடியரசு தலைவர் பதவிதான் அவரை மக்களுக்கு முழுமையாக அறிமுகம் செய்தது. ஒரு முழு மனிதனாக வாழ்ந்த வாழ்க்கைதான், இன்றைக்கு அஞ்சலி பெருங்கூட்டத்தால் நிரப்பி கொண்டது. மக்கள் தெளிவாகத்தான் இருக்கிறார்கள். நல்லவனவற்றை போற்றவும் பேணவும் தயாராகத்தான் இருக்கிறார்கள். இதனை முற்றிலுமாக உணர்வதுடன், அரசியலை திறம்பட நடத்த, இந்த நிகழ்வை முன்மாதிரியாகக் கொண்டு அனைத்து அரசியல் தலைவர்களும் முன் வரவேண்டும். வாழ்க தமிழ்! வளர்க பாரதம்!!
30-07-2015

## மகளீர் தின வாழ்த்து!

இல்லற மென்பதை நல்லற மாக்கும்!
பொல்லாப் பிள்ளையை நல்லவ னாக்கும்!
கல்லில் தேனையும் வடிக்கும் அன்பாய்!
சொல்லிலும் செயலிலும் சுந்தர வடிவாய்,
நல்லவைதானே தருவேன் என்று,
எல்லாச் செயலிலும் முகவரி ஆகும்!
சொல்வர் பாதியாய் அவளே என்று!
இல்லையென்று இயம்பிட ஏலுமோ?
அல்லவை நல்லவை யாவிலும் அவளே!
நல்அன்னையின் வடிவம் அன்பின் சோதரி!
எல்லையில் யாவிலும் பெண்மை யன்றோ!
தொல்லை இல் வாழ்வும் அவளே!
நல்துணையுமவளே! மகளீர்நாள் வாழ்த்து!
-**கவிவளவன்** (08-03-2020)




**சமாதி** என்பது, உயிர் இருந்தும் இல்லாது போலொரு நிலை. ஜிவ சமாதி என்பது, உயிர் பிரியும் காலமறிந்து, மோன நிலையிலேயே, உயிருடன் நிலைப்படுத்தலே ஜீவ சமாதி யாகும். பிரியும் உயிர், அவ்வுடலை சார்ந்தே இருந்து, இறையை வேண்டி அருள் செய்யும் என்பது நம்பிக்கை. சில மடத்து வழக்கங்களில், மூடும் நிலையில், தலையில் தேங்காய் உடைத்து, கபால மோட்சம் தரப்படும் எனவும் கூறுவார்கள். பல பிலபலமான கோயில்களில் சித்தர்கள் வாழ்ந்திருந்து அவர்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்ட திரு உருவங்களே இன்றும் நமக்கு வழிபட கிடைகின்றன. திருவாரூர் கமலமுனி சமாதி, கமலாலயத்துள் நிலவும் கோயில். ஆயினும் முசுகுந்த சக்க்ரவர்த்தி எனும் அரசன் நிர்மானித்தது தான் அக் கோயில். வைதீஸ்வரன் கோயிலில் ஒரு வைத்தியர் இருந்த்திருக்கிறார். அவர் சமாதி பின்புறம் நந்தவனத்தில் உள்ளது. திருப்பதி கொங்கணர், பழனி போகர். அவர் வான்வழியாக மெக்கா மதினா சென்று வந்ததாய் செய்தி உண்டு. பேரரசன் இராஜ இராஜனே ஒரு சித்தர் என்பர். அவருடைய குரு கருவூர் சித்தர். =0=

## யாவும் அந்தப் பரம் பொருளாம்!




திக்கெட்டும் நிறைகின்ற
தேமதுரத் தமிழ்போலே,
திகழ்கின்றாள் அன்னையிவள்!
இவளே சக்தி! இவளே செயல்!
யாவும் இவளே!
காத்தலும் அழித்தலும், கலங்கும் மனத்திடை
நிறைதலும் இவளே! பிணியும் இவளே!
பிணிக்கு மருந்தும் இவளே!
தேடுவார்க்குத் தெளிவானவள்!
வாடுவார்க்கு நலமானவள்!
இருப்பதும் அவளென்றும்
இல்லாததும் அவளென்றும்
நினைப்பார் தமக்கு, நிலையானவள்!
நெறியானவள்! பரம்பொருளின் வடிவானவள்!
பார்த்தவுடன் எழும் இந்த வரிகளின் செயலானவள்!
நற்சிந்தையானவள்! யாதும் அவளே!
எதிலும் அவளே! அவளே சக்தி! அவளே அறிவு!
ஊனும் அவளே! உயிரும் அவளே!
அவளே சக்தி! வாழியவே!! **30-03-2020**



**அன்பு:-** அன்பு என்றுமே விற்கப் படுவதில்லை! அன்னையின் அன்பு நிரந்தரமானது. தந்தையின் அன்பு விசாலமானது; அறிவைத் தருவது. மனைவியின் அன்பு ஐஐந்தில் காதலையும், அடுத்த ஐந்தில், மழலை அமுதையும், ஐம்பதில், தோழமை தாள் கொண்டு அன்னையைப் போல் அணைக்கக் கூடியது. தமக்கையின் அன்பு என்றுமே நெல்மணியின் தாளாகும். தங்கையின் அன்பு தோழமைக்கு நூலாகும். தேவையில்லாத தேடலில் ஈடுபடும் போது, எதையோ இழந்து விட்ட நிலை. அதுவே அன்பு காணாமல் போனதாய் தெரிகிறது. அன்பையும் அறிவையும், நட்பையும், மனித நேயத்தையும் பிள்ளைகளிடம் விதைத்தால், ஆயுள் முழுவதும் அன்பு பூங்காவே நமது வாழ்விடமாகும். ==0==

## மொழிநாள்

தமிழென்றுப் பகர்ந்தநாம்; அதனை நம்,
தாய் மொழியென்றுப், பகிர்தோமில்லை!
இயற்சொல் என்றேநாம் இயம்பியே வந்தோம்!
இயல்பாய் நிறைந்தத் தனிநிலையோடு!
உலகம்தன்னை ஓர்குடை கீழாய்க் கண்டவன்நம்
கணியன் ஆகிய பூங்குன்றநன் தானே!
அமிழ்தாம் நம்தமிழே அவனியோர்ப் போற்றிட
அனைவர்க்கும் இனிதாம், எந்நாளும் தானே! **(21-02-2020)**

## எங்கள் பொன்னடி!




சுற்றியொரு கூட்டமென சொந்தமந்த
தமிழுமென வாழுவான் – எங்கள்,
தங்கக் கவிவாணன் அவன் ‘பொன்னடி’

முற்றியதாம் நெல்மணியை,
மொய்க்கவரும் புள்ளினமாய் – நாளும்
தமிழ் கற்கவரும் மாணவரைக் காணலாம்!

முல்லையையே பாக்களாக்கி,
முடிவில்லாத நெடுஞ்சரமாய் – வளர்
திங்களெலாம் மணம்பரப்ப செய்குவான்!

திங்களெலாம் திரண்டுருண்டு,
ஆண்டுகளாய் அவதரித்து – மலர்
வெள்ளிவிழா வேளையினைக் கண்டதாம்!




எங்கள்கவி அண்ணலுக்கும்
ஏற்றமிகுப் பொன்விழா – அகவை
ஐம்பதினைக் கண்டுவிட்ட தனிவிழா!

திங்களெலாம் தமிழ் வளர,
தென்றலென மணம் பரவ – எங்கள்
தங்கமகன் எந்நாளும் வாழியவே!
**(முல்லைச்சரம் வெள்ளிவிழா மலருக்கு எழுதியது -1990)**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்** என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. தமிழ் நீதி நூல்கள், சிலப்பதிகாரம் யாவும் படைத்தவர் சமணரே. தமிழுக்கு எழுத்துச் சீர் திருத்தம் தந்தவர் வீரமாமுனிவர் எனும் கான்ஸ்டைன் பெஸ்கி. **இசுலாமியரும் இந்தியர் தானே?** பசுமை வெளியைப் பார்த்த இஸ்லாமானவர்கள், **ஹிந்துஸ்தான்** என்பதை ஆங்கிலேயர் இந்தியா எனவும், மக்கட் தொகை கணக்கெடுப்பின் போது, இசுலாமியர் கிறிஸ்தவர் அல்லாதவரை **இந்து** வாக்கினான். 1980 வரை ஆவணங்கள், சிவ **மதம், விஷ்ணு மதம்** என்றுதானே குறித்தன. **கலிமா** வில் நம்பிக்கை வைத்து, வாழ்பவன் இசுலாமியன். முகமதுநபி கடைசியாக வந்த இறைத் தூதர். அவருக்கு முந்தையவர், ஜீஸஸ் எனப் படும் ஏசு கிறிஸ்து.

**ஈ.வே.ரா வின் கருத்தாக வந்த பதிவுக்கு:** - இஃது ஈ.வே.ரா வின் மொழிநடையல்ல. உள்ளுணர்வாக ஒருவர் பகிந்துள்ளார். அவருடையப் பெண் விடுதலைச் சிந்தனையும், தீண்டாமையைத் தகர்த்து, சுய மரியாதையைக் காக்க நின்ற செயலும் போற்றத் தக்கவை. தீண்டாமையை நிலைப்படுத்த உதவும், ஜாதீயத்தை ஒழிக்க, அவர் கடவுள் மறுப்புக் கொள்கையைக் கை கொண்டார். உள்ளுணர்வோடு தமிழர் ஏற்படுத்திய இறைக் கொள்கை சில மாறுதல்களுடன், வேத மரபானது. உலகம் முழுமைக்கும் ஆட்சியாளர்கள், அவர்கள் விழைவுக்கு செய்தி வரலாறு முதலானவற்றைச் செய்வதுண்டு. எளிதாக ஒன்று, ஞாயிற்றின் ஏழு வண்ணங்களை, குதிரைகளாயின. கரவை (மறைத்தல்) கிரஹணம் ஆனது. வேள்வியை ஹோமமாக்கி, குதிரையை வெட்டிப் போடச் செய்து அசுவமேத யாகமாக்கினர். இவ்வுண்மையின் பக்கம், பெரியார் செல்லவில்லை. தமிழர்தம் ஆழ்ந்த அறிவுக்கலன், பெரியாருக்கு அன்று புலப்பட வில்லை. சேயோனும் மாயோனும், வருள்ணனும், திருமகளும் கொற்றவையுமே தமிழர் கடவுள். **இந்து இந்து மதம்** என்பது ஆங்கிலேயர் கணக்கெடுப்பில் நிகழ்ந்த கட்டமைப்பு. கிறிஸ்தவம், இஸ்லாமுக்குள்ள (குர்ஆண், Old testament இரண்டும் ஒன்றே) அடிப்படை ஒற்றுமைக் கூட சைவம் வைணவத்துக்குள் கிடையாது. சைவம், அறிவு வழி (ஞானமார்க்கம்) வைணவம், அன்புவழி (பக்தி மார்க்கம்). ஆசீவகம் எனும் ஒரு முறைமைக்குப் பின்னோ அந்நிலையிலோ, சிந்தித்து, சித்தத்தைக் கட்டுப் படுத்தி, அறிபெற்ற, சித்தர்களாக நிலைபெற்றோர் அறிவில் சித்தமானது, சைவசமயம். உள்நோக்கி உவந்து, அறிதல், ஆகலின் உள்கடந்த கடவுள். இறைந்து கிடப்பவன் எங்கும் நிறைந்தவன் இறைவன், அது வைணவம், அதனால், கண்ணன் கீதையிலே அனைத்தும் நானே என்கிறான்.

## குரோனாவே போ!



வாழ்க்கைப் போச்சு!வழக்குப் போச்சு!
எல்லாமே இங்கு கெட்டுப்போச்சுதே!
குரோனா வந்து எல்லாத்தையும் தள்ளி வைத்து,
தள்ளித் தள்ளி போக வைத்தது!
பக்கத்து வீட்டுமாமா கூட பேச முடியலே!
எதிர்த வீட்டுப் பையனையும் காணமுடியலே!
காலிருந்தும் வெளியே நடக்க முடியலே!
ஓட்டிப் போக பைக் இருந்தும்
ரோட்டிலேதான், போகமுடியலயே!
என்னைக்குத் தான் இந்த நிலைமை மாறிப் போகுமோ!
எதுக்குத் தான் இப்படி எல்லாம் ஆகிப் போகுதோ!
குரோனா குரோனா இங்கேயிருந்து
எப்பதான் நீ போவாயோ!
சொல்லு சொல்லு சீக்கிரமா
நீயே தானா தொலைஞ்சிப் போய்விடு !
**-கவிவளவன் 30-03-2020** :

## OFFICIAL LANGUAGE

As per constitution of India, English and Hindi are alone official languages. It was planed to replace English with Hindi. After agitation from states like Madras, it was amended in 1963 to continue with English until the respective people accepts. Now, we the State of Union of India is under digital system and hence Computer with English can not be avoided. Further, the entire constitution is in English only. Any debate, amendment, discussion can be had only in English. The languages of High Courts, Supreme Court of India are English only. The 22 languages are National languages. Initially it was 14. Then Sindhi made 15th. Then 18. Recently become 22. In 1905 the currency was bearing 5 or 6 languages which includes Tamil also. Panjabi was there. Telugu, Panjabi, Tamil are not regional languages. They are Languages of the People and to represent the culture of the respective State wherein the People are living. The Languages Ahuthi, Maithily, Bojpuri can be accounted as Regional Languages as they are bounded by Hindi even though identified as National Language.

**(27-03-2020)**

## கொரோனாச் சாவுடன், குடியால் உயிரிழப்பை ஒப்புமைப் படுத்திய ஒருவருக்கு, முகநூலில் அளித்த பதில்”--

ஐயா தங்கள், சிந்தை செவ்வியதாய் உள்ளது. மனித நேயம் கொண்டது. ஆயினும், உண்மையை உள்வாங்கிப் பதிவிடுங்கள், தங்கள் தலைவர் கலைஞரைப் போல். மதுப்பழக்கம், புகைப்பழக்கம், பான் பராக் போன்றவை யாவும் மக்கள் தாங்களே ஏற்படுத்திக் கொள்வது. ஆனால், இந்தக் தொற்றுக் கிருமி, எவ்வித முன்னறிவிப்போ, அறிகுறியோ அற்று யாரை வேண்டுமானாலும் அடையலாம். அடுத்து, மதுக்கடைகள், நீக்க வேண்டுமாயின் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளும் சேர்ந்துச் செயல் பட வேண்டும். ஏனெனில், அனைவரிடத்தும் உற்பத்தி ஆலைகள் உள்ளன. திரு இராஜ கோபாலாச்சாரியார் தான், மது விலக்கை முதன் முதலில் அமல் படுத்தி, அதனை ஈடு கட்ட, விற்பனை வரியைக் கொணர்ந்தார். திரு கலைஞர் மது விலக்கை நீக்கினார் என்பது உண்மை யாயினும், கள்ளச் சாராயம் பெருகியதை, நிலைப் படுத்தவும், கள் போன்றவை, அதிகம் ஊறு விளைவிக்காது என்பதும் தான். உள்நாட்டு மதுவகை நீக்கினால், மக்கள் மது அருந்த மாட்டார் என்னும், நிலைப்பாடோடு, மாண்புமிகு ம.கோ.ரா அவர்கள், தான் கொண்டுவந்த கடா மார்க்கையும் நீக்கி, வெளிநாட்டு மது மட்டும் என்றபோது, கலப்பும் கள்ளச் சாராயமும், பெருகத்தானே செய்தது. என்றுமே, அதிகார வர்கத்தின் பின் புலத்தோடு, நாட்டை ஆள்பவர், வணிகர்களே!

**24-03-2020**

## Implementation of Hindi

The Panjabi Language is getting drowned. Some of our new guys joined in Central Civil Service says, “Either belongs to UP or Bihar, we know only Hindi to speak, not knowing Ahuthi, Pojpuri or Mythily, our local languages. One Haryana boy of Panjabi says, my parents only talk Panjabi.” Some guys hailed from Villages can speak their languages. In 1905, the Indian currency was having only 5 Indian Languages including Panjabi. In another decade or two Rajasthani will also disappear. At the end of this century India may have 7 or 8 languages only. Marathi, Bengali, Gujarati, Hindi, Telugu, Kannada and Tamil. Malayalam may got driven out as some people of Kerala feels Hindi is their language.

## மண்ணுரிமை

வாக்குரிமை கொண்டானை,
வழக்குரிமை கொண்டானை,
தாக்குரிமை கொண்டானை,
தனியுரிமை கொள்வானை,
முந்திப்பிறந்தானை, மண்ணில்
மொழியுரிமை கொண்டானை,
பிந்தி நுழைந்தே மனையுரிமைப்
பெற்றேகி, சொந்த மண்வாழ்ரைச்
சுற்றம் இலதாக்கி, சொந்தம் பிரித்து,
மற்றாங்கேச் செயல் செய்தால்,
கூற்றுவன் தான் வாரானோ,
சாற்றிய உரிமைக் காப்பதற்கே!

- **கவிவளவன் (22-12-2019)**




**குறிப்பு:** இப்பதிவினில் காணும் சொல்லாடல் அத்துனைக்கும் உரிமை யானவர் கவிஞர் கண்ணதாசன் .சொற்களை வைத்து எனது கருத்தைத் திணித்துள்ளேன். அவர் தனக்குத் தானே எழுதிய இரங்கற்பாவின் வரிகள் அவை.

**யாயும் ஞாயும் யாரா கியரோ,**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்,**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்,**
**செம்புலப் பெயனீர் போல,**
**அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.**

**-செம்புலப் பெயனீரார் (குறுந்தொகை - 40)**

கவிஞரின் பெயர், நிலை பெறாமல், அவர் காட்டிய உவமை, **செம்புலப் பெயல் நீரார்** என்றானது. இதற்கு இணையாக காதலைச் சொல்லும் கவிதை எம் மொழியிலும் உண்டோ? காலம் கடந்து நிற்பது. தமிழன், மதத்தாலும், ஜாதியாலும் பிளவுபடாத காலத்தைச் சொல்லும் சரிதம். **எந்தையும் தாயும் மகிழ்ந்து** குலாவி எனப்பாரதியையும், **நேற்றுவரை நீயாரோ நான் யாரோ** எனக் கண்ணதாசனையும், **செம்மண்ணிலே தண்ணிரைப்** உண்டான **பந்தமிது** என இன்னொரு கவிஞனையும் எழுத வைத்தச் செய்யுள். 21-01-2020


# எங்கே தேடுவோம்?



கீழை வானில் காலைச் சுடரொளி!
மழைதேடும் வெம்மை!
கூவிடும் புள்ளினங்கள்!
கரையும் காகம்!
ஒலியெழுப்பும் ஆவின் கன்று!
காற்றும் அசைந்து முகம் வருடிற்று!

இனம் புரியாத இறுக்கம்!
சாலைகள் வெறிச்சோடின!
மூடிய சன்னல்களுக்குப் பின்னால்,
சில முகங்கள் எதையோத் தேடின!
அடுக்களையில் பிறக்கும் உணவு;
நாசிகளில் குறுகுறுப்பு இல்லை!

தொலைத்த ஒன்றைத்
தொலைக்காத இடத்தில் தேடுகிறோம்!
அது எது? அமைதியும் அன்பும்
இயந்திரக் கதியாய் இயங்கிய பின்னே,
தேடுதல் வேட்டை தொடரும் வரையில்,
எங்கே கிடைக்கும் அன்பும் அமைதியும்?



உருத்தெரியாத கிருமியொன்று,
உருவங்களைக் கட்டிப் போட்டது!
வீட்டுக்குள்ளேயே பழங்கதைகளும்,
பல்லாங்குழியுமாய், பிள்ளைகளோடு!
நல்லனத் தேடி நல்லன செய்வோம்!
யாவரும் சமமென இறுதியாய் நம்புவோம்!

**கவிவளவன்(09-04-2020)**

அரசாண்ட மன்னர் களெல்லாம், கோட்டைகொத்தளங்கள் அமைத்து வாழ்ந்த போது, மக்களின் வாழ்வாதாரமான விவசாயத்திற்காக நீரைத் தேக்கி, அணை கட்டும் அறிவியலும் செய்தான் **“திருமாவளவன்”** எனப்பட்ட **கரிகால் பெருவளத்தான்.** ஆனால்... மக்களாட்சியில், ...ஏரிகள் வீடுகளாக மிதந்தோம் வெள்ளக் காட்டில்.!

## அன்னையர் தினம்!

ஐயிரு திங்களாய்
அங்கமெலாம் நொந்து பெற்ற,
அன்னையை மறந்துவிட,
அன்னையர் தினமா இன்று!

நெஞ்சமெலாம் நிறைந்த அன்பை,
வஞ்சமில்லாது வழங்கும் அன்னையர்கா தினம் இது!

நம்முள்ளும் நமக்காகவும்;
மண்ணில் இருக்கும் வரை,
நெஞ்சில் இடங்கொடுப்பதும்,
இடம்பிடிப்பதும் அன்னையர் மட்டும் தானே!

தனியே ஓர் தினம் ஏன்?
ஆண்டுக்கு ஒருநாள் மட்டும் நினைவு கூர்ந்து,
மறந்து போகவா?

**திருமண விருந்து!** == அகவையில் முதியவர்கள், அவர்களது வரிசையைச் சரிபார்த்துக் கொண்டு, உண்ணலாம் எனக் கட்டளையிட்ட பின் உண்ணத் தொடங்குவதும், இளையர் அதுவும் ஐந்து வயது பாலகராயினும் அவர் உண்ணும் வரையில் அப்பெரியவர்கள் காத்திருக்கும் ஒரு மரபும் இருந்தது. விரைவாக உண்ணுபருக்கும் தாமதமாக உண்ணுபவருக்கும் உண்டான இடைவெளியை நீக்கவும், உணவு முறையாகப் இலையில் இடப்படுவதற்கும் ஆன காரணமாக இருந்தது. அப்போதெல்லாம் அமர்ந்த பின்னேதான் உணவு பரிமாறப்படும். காற்றில் உலர்ந்த பின் உண்ணும் நிலை இல்லை. ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடும் அன்று இல்லை. எல்லோரும் உறவினராய் நினைக்கப் பட்டனர்.
0=====0

## அடல்ஜியே!

நாட்டைப் பேணிய,
நல்ல தலைவன் நீ!
வெளியுறவு அமைச்சனாய்;
வியப்பூட்டிய நீ,

தலைமை அமைச்சனானபின்,
கோட்டை அழித்து,
பகை நாட்டுக்கும்;
பயணம் போனவன்!

ஏகாதிபத்தியத்தின்
இறுமாப்புகளை,
"பொக்ரானில்" ;
பொடி பொடியாக்கினாய்!

இந்த தேசம் கண்ட,
தன்னிகரில்லா தலைவன் நீ!
அன்னை இந்திராவோடு,
உன்னை எனக்கு,
அதிகம் பிடிக்கும்!

ஏகாதிபத்தியத்தின்,
எதிர் முனைக்கு அப்பால்,
காலம் கடந்த,
மானுடக் கவிஞன் நீ!

மக்கள் நலனை,
மண்ணில் நிரப்பிய,
மாமனிதன் நீ!

கலைஞர் என்னும்
கருணாநிதியோடு,
நீ காட்டிய உறவில்,
மரணம் கூட,
இடைவெளியின்றி,
இறுகத் தழுவியதோ!

அடல்ஜியே!
இன்னும் ஒரு பிறவி
இருக்குமாயின்,
எங்கள் மண்ணில்
மீண்டும் பிறந்துவிடு,

நானிலம் போற்றும்,
நல்ல தலைவன்;
மீண்டும் வேண்டும்!

**- கவிவளவன் 16-08-2018**



# நினைவில் நின்ற வரிகள்!

தண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா; இப்பயிரை
கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ !

- **மகாகவி சுப்பிரமணிய பாரதி.**

வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்,
நிலையாம்; எனும் நினைவா?
அலைமாகடல் நிலம் வானிலுன்,
அணி மாளிகை ரதமே!
அவையேறிடும் விதமே, யுன
ததிகாரம் நிறுவுவாய்! – **பாவேந்தர் பாரதிதாசன்**.

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்;
இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்!
வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை!

-**கவியரசர் கண்ணதாசன்.**

தரைமேல் பிறக்கவைதான், எங்களை
தண்ணீரில் மிதக்கவைதான்,
முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும்
இதுதான் எங்கள் வாழ்வு - **கவிஞர் வாலி.**

ஒரு புல் முனையளவு தீப்பொறி கிடைத்தலும்,
உலகுக்கு ஒளி யூட்டுவேன்,
ஒரு நெல்மணி கிடைத்தாலும் விளைவித்து,
நில மக்கள் பசி போக்குவேன்

- **கவிஞர் பொன்னடியான்.**

ஒரு பட்டாடைக்கான கானாவிலிருந்த போது,
கட்டியிருந்த கோவணமும் பறிபோன நாள்

– **கவிஞர் வைரமுத்து.**

மனிதம் கொன்றால் மனித வாழ்வின் மாட்சி போகுமே!
மரணம் தின்றால் வாழ்வில் ஏதும் மிச்சம் இல்லையே!

–**கவிஞர் கவிவளவன்.**

அன்பு கெழுமிய **இந்தி விரும்பியே**, சில உண்மைகளை நீங்கள் உணர வேண்டும். இந்தியைத் தவிர்த்ததால்தான் இங்கே ஆங்கிலம் வாழ்ந்தது, அது பல மேல்தட்டு சமூகத்தாரை அமரிக்க வாசியாக்கியது. ஆங்கிலஆட்சிதான் 56 சிறுநாடுகளை சேர்த்து இந்தியாவாக்கியது. ஆங்கிலமோ இந்தியோ கற்றுக் கொண்டா ஜப்பானியர்கள் வெற்றி காண்கிறார்கள்? இந்தியின் ஆளுமைதான் தவிர்க்கப்பட்ட வேண்டியது, கற்றுக் கொள்வது அல்ல! தாய்மொழியில்தான் ஒருகருத்தை செம்மையாக வெளிப்படுத்த முடியும். அப்போது இந்திக்காரர்கள் முதன்மை குடிகளாக செயல்படும் நிலை உண்டாகும். சிறந்த ஆங்கிலப் புலமை கொண்ட கவியரசர் இரவீந்தரநாத் தாகூர் தன் செவ்விய கருத்துக்களை யெல்லாம் தாய் மொழியில் தான் வெளிப்படுத்தினார். அவர் எழுதிய நம்முடைய தேசியகீதம் வங்காள மொழியில் தானேயுள்ளது. ஆட்சி மொழி இந்தி என்னும் போது, அவர்களுடைய தாய் மொழி உங்களுக்கு ஆங்கிலம் போல் வேற்று மொழிதானே! நீங்கள் இரண்டாம் நிலை குடிமகனாக வேண்டுமா? நாம் இந்தி கற்கலாம், கற்கவேண்டும் என கட்டாயப் படுத்தக் கூடாது. சிந்தியுங்கள்!

**M.G.R.** the **LEGEND.** 1978 வரை, மேல் நிலைக் கல்வி கிடையாது. புகுமுக வகுப்பாகத்தான் கல்லூரிக் கல்வி தொடங்கும். கல்வியை வியாபார மாக்கிய எம்.ஜி.யார் காலத்தில் தான் மேல்நிலைக் கல்வி வந்தது. தமிழகத்துக்கு எம்ஜியார் ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்கா அதில் இதுவும் ஒன்று. மேல் சபையை கலைத்து நீக்கினார். பஞ்சாயத்து தேர்தல் என்ற ஒன்றையே மக்களை மறக்கச் செய்தார். செவ்வனே இருந்த கிராம நிர்வாகத்தை கலைத்தார். ஆட்டோ கட்டணச் சீரமைப்பை செய்யாமல் விட்டார். இலவசத்தை தொடங்கி மக்களை பிச்சைக்காரர்களாக்கினார். காமராஜர் கொண்டுவந்த இலவசக் கல்வியை விலைமதிப்புள்ளதாக்கி, மெட்ரிகுலெஷன் பள்ளிகளை அதிகம் தொடங்கி, சுயநிதிக்கல்லூரிகளை ஏற்படுத்தினார். நுழைவுத் தேர்வை ஏற்படுத்தி, கிராமப்புற மக்கள் தொழிற்கல்வி பெறமுடியாமல் பார்த்துக் கொண்டார். மின்வெட்டு கால அளவை மக்களையே ஊகிக்க வைத்தார். வெள்ளத்தை ஏற்படுத்தி வேட்டி சேலை வழங்கினார். நெல்விலை ஏறாமல் பார்த்துக் கொண்டார். வேளாண்மை என்ற ஒன்றை முற்றிலும் அழிக்க வழி கோலினார்.ஆதலால் மறக்க முடியாத மாமனிதர் ஆனார் எம்ஜியார்.

**கோத்திறம்** என்பது ஆணின் வழிபட்டது; தலைமையின் பெருமையைக் கூறும். சிறப்பாக தமிழர்தம் வாழ்வில் பெரும் பங்களிப்பது. தமிழ்ச்சாதியில் பெரும்பான்மையினர், கோத்திறம் எனவும், சிலர் பட்டம் எனவும் இதனை கூறிக்கொள்கின்றனர். பிள்ளைமார் முதலியார்கள் இதனை கோத்திறம் எனும் போது, முக்குலத்தோரும் மற்றவர்களும் 'பட்டம்' என்கின்றனர். 'கோ' என்றால் தலைமை, திறம் என்பது, திறமை என்பதாகும். இதுவே திரிந்து கோத்திரமாகி விட்டது. சேக்கிழார் என்பதும் சாண்டில்ய (ன்) என்பதும் கோத்திறமே. ரிஷிகள் வழி என்பது பிராமணர்கள் கடைபிடிப்பது. பிராமணர்களின் மற்ற உட்பிரிவுகளில் அதே கோத்தி(ற)ரம் காணப் படுவதும் உண்டு. ஆனால், மற்றைய தமிழர்களுக்கு அவ்வாறு இல்லை. மற்ற தமிழர்களிடத்து, வகுப்பு என்பதுதான் தனித்து நின்று, கோத்தி(ற)ரத்தைக் காட்டியுள்ளது. வைணவம், சைவம் ஆகிய மதக் கோட்பாடுகள் இவற்றைக் கட்டுப் படுத்தாது. **13** தலைமுறைகளுக் குத்தான் என்பது, ஆய்வு செய்யப் படாத கருத்து. குலத்தெய்வம் என்பது, இறந்த முனோர்கள் என்பதும், எல்லா சமூகரிடத்தும் இல்லை. பிராமணர்களுக்கு, மாரி காளி ஆகிய கிராமதேவதைகளும் குலதெய்வம் ஆவதுண்டு. ஏன் முருகனும் கூட. ==0==

**வள்ளுவர் கோட்டம்!** குப்பைமேடாக இருந்த இந்த இடத்தில் ஒரு கோட்டம் அமைக்கும் எண்ணம் உருவானபோது, அதனை செயல் படுத்தும் நிலையில், திரு கருணாநிதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசால், திருவாரூர் ஆழித்தேரை முன் மாதிரியாகக் கொண்டு வள்ளுவர் கோட்டம் கட்டுவிக்கப் பட்டது. அத்துனை குறட்பாக்களையும் அங்கு கண்டு படிக்கலாம். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்னும் பாரதியின் வாக்கு பொய்யன்று. புலவர் கீரன் சொல்லுவார், இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை; மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்; மனிதன் மனிதனுக்குச் சொன்னது குறள்.

# கண்ணதாசன்!



வள்ளுவனின் வாழ்வியல் நுட்பத்தையும், கம்பனின் சொல்லாட்சியையும், இளங்கோ வடிகளின் தமிழ் மரபு காத்த பெருமையையும், பாரதியின் சமூகப் பார்வையும், கண்ணதாசனின் சொற்சிலம் பங்களோடு பல பாடல்களில் காணமுடியும். இருபதாம் நூற்றாண்டில், இளைய தலைமுறையினருக்கு, கவிஞர் குழாத்துக்கு, பாரதி தலைவன் எனில் கண்ணதாசன் தோழன்.

சங்கம் தொடங்கி, சிற்றிலக்கிய காலம் வரையிலான பல படைப்புகளின், உட்பொருளை, சாற்றை, தன்னுடைய எளிய தமிழில் கொண்டுவந்து கொடுத்த பெருந்தகை கண்ணதாசன். ஒவ்வொரு நாட்டிலும், எழுந்த இலக்கிய வளர்ச்சியே கால வெள்ளத்தில் பல புதுமைச் சிந்தனைகளைப் புகுத்தியுள்ளது.

ஆட்டன் அத்தி ஆதி மந்தி, மாங்கனி, ஏசு காவியம் தவிர மற்றவையாவும் தனிப்பாடல் தொகுப்பும், திரை இசைப் பாடல்களும் ஆகும். தைப்பாவை தைமகளைப் போற்றியதும், பொன்மழை கனக தாரா சோஸ்திரத்தை மொழிபெயர்த்ததும் ஆகும். தமிழர்தம் வாழ்வியல் கோட்பாடுகளை இணைத்து, மரபு வழி நம்பிக்கைகளை வெளிக்கொணர்ந்து, அவர் படைத்த 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்னும் கட்டுரைத் தொகுதி அவருடைய வாழ்நாளில் அவருக்கு மிக்கப் பெருமையை ஈட்டித் தந்தது. இன்னும் பல நூல்களும் அவரால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. திரையிசைப் பாடல்கள், சங்கப் பலகையை எட்டிப் பிடித்தது இவரால் தான். ——-0———

————————————————————————————————-

பொதுவில், **பதவி** என்பது ஒரு சுகமான சுமை. பொதுவாழ்வில் பேரும் புகழும் கிட்டும் போது, நன்மை தீமைகளை அனுசரித்து சில இடங்களில் விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படும். விரும்பியோ விரும்பாமலோ சிலவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக்கும். இந்நிலை பலசமயம் ஆட்சியாளர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும். ==0==

# அன்னையெனும் அன்பு!




அன்னை மண்ணில் மறக்கமுடியாத உறவு. சன்யாசிக் கூட தாய்க்கு ஈமக் கிரியை செய்ய வேண்டும் எனும் நியதி யுண்டு. பட்டினத்தடிகள், சந்நியாசம் பூண்டபின்பு, தன்னுடையத் தாயின் அன்பு வேண்டுகோளுக் கினங்க, காவிரிப்புகும் பட்டினத்திலேயே காத்திருந்து, அன்னைக்கு ஈமைக் கிரியை செய்த பின்பு அவ்வூரை விட்டு அகன்றாராம். அப்போது, பாடிய பாடல்; "முன்னையிட்ட தீ முப்புரத்திலே..." உலகப் பிரசித்தம். எந்தாய்க்கு எப்படி நான் எரியூடுவேன் எனச் சொல்லி, வாழை மட்டையில் உடலைக் கிடத்தி, மேற்கண்டப் பாடலைப் பாடியதும் தீ முண்டதாம். சங்கராச்சாரியார், ஜெயேந்திரர் கூட தாய்க்கு சன்யாசம் பூண்ட பின்பு கிரியை செய்ததாய் செய்தி உண்டு. அவ்வளவு உயர்ந்தது அன்னை எனும் உறவு, எல்லா உயிர்களுக்கும் தான்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஒருத்தி மகனாய் அந்தக் கண்ணனைப் போல் தானும் வளர்ந்தேன் எனும் கண்ணதாசனின் பாடல் பிரசித்தம். "தாயெனும் கோயிலைக் காக்க மறந்திட்ட பாவியடி கிளியே.." என்னும் பாடலை பலரும் கேட்டிருக்கலாம். அப்பாடலை எழுதிய கவிஞர் பொன்னடியுடன் அளவளாவிய போது, தன் தம்பியுடன் வாழ்ந்த தாயை அவ்வபோது சென்றுப் பார்த்து வந்த போதும், உடனிருந்து பணிவிடை செய்ய முடியவில்லையே என்ற மனத்தாங்கலின் வெளிப்பாடுதான் அப்பாடல் என்றார்.

பட்டினத்தாரின், "ஐயிரு திங்களாய்.." எனத்தொடங்கும் பாடலுக்கு அடுத்து, ஓர் அற்புதமான பாடல் திரு பொன்னடியின் அப்பாடல். சிலருக்கு கடை நாளில் அன்னை தந்தையருடன் இருக்க இயலாமற் போய் விடுகிறது. இன்றைய வாழ்வியல் சூழல் தான் அதற்கு காரணம். -----

**புலம் பெயர்ந்து** வாழவந்தோரின், நலனுக்காக ஏற்பட்ட மொழிகள், இங்கிருந்த மொழியின் வேர்களைந்து வெளிவரத்தலைப்பட்டன. உலகளாவிய பெருமை கொள்ளும், சமஸ்கிருதம், மொகலாயர்களால் உருவான உருது ஆகியவை இந்தியாவில் ஆட்சி செய்யத் தலைப் பட்டன. ஆங்கிலம் என்பது



ஆங்கிலேய ஆட்சியால் உலா வந்தாலும், பொதுவில், தமிழுக்கு ஒட்டு மொத்த ஐரோப்பியரே பெருமை சேர்த்துள்ளனர். மதம் பரப்ப வந்த வீரமாமுனிவராகிய கான்ஸ்டைன் பெஸ்கி, கார்ல்டு வெல், ஜி.யு.போப், தரங்கம் பாடியில் தமிழில் அச்சுக் கூடம் நிறுவிய சீகன் பால்க் ஆகிய பலரது, கூட்டு முயற்சியே, உலக அரங்கில், தமிழ் மொழியின் பெருமையை வெளிக்கொணர்ந்தது. கார்ல்டு வெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதியிராவிட்டால், தமிழ் சமஸ்கிருதத்தின் விக்கிருதியாகவே நின்றிருக்கும். ஆங்கிலேயர்கள் முன்னூறு ஆண்டுகள் நம்மை ஆளாதிருந்தால், நாம் ஆங்கிலம் பேசியிருக்க மாட்டோம், கிரிக்கெட் ஆடியிருக்க மாட்டோம். அவ்வளவே. ஏனைய மாற்றங்கள் கால வளர்ச்சியில் தானே



வந்திருக்கும். சீன தேசம் அசுர கதியில் முன்னேற்றம் காண்பது, தனித்த தன்மையை நிலைநிறுத்துவதால் தானே!. இந்துஸ்தான், இந்தியா, இந்து என்பது, மொகலாயர்களாலும் ஆங்கிலேயராலும் நமக்கு அளிக்கப் பட்டவை. முகமதியர், கிறிஸ்துவர் அல்லாத அனைவரும் 'இந்து' வாயினர். செவ்வாய் என பெயரிட்ட தமிழன் அறிவு, கல்லணை கட்டிய சோழன் அறிவு ஆகியவை எங்கே மடை மாற்றம் கொண்டன?

---

**வாழ்வாங்கு வாழ்ந்தவன்** தமிழன் என்பதற்கு, நம்மிடம் எத்துனையோ தரவுகள் உள்ளன. தெற்றென விளங்கும் படியாக, பலவும் நிலவுகின்றன. சித்தர் எனப்பட்டோர் அறிவின் துணைகொண்டு வாழ்ந்தவர். வானியல், கட்டிடக்கலை, மருத்துவம் எனப் பலவற்றிலும் நிறைந்து வாழ்ந்துள்ளனர். தஞ்சை கோயில் இன்றுவரை புதிர்தானே!. உணவே மருந்தென ஆக்கியவர்கள். சொல்லிக் கொடுக்கவோ, சொல்லிக் கொடுத்தாலும் கேட்டுக் கொள்ளவோ அடுத்த அடுத்த தலைமுறைகள் முனைப்புடன் இல்லாது போயின என்பதே வெள்ளிடைமலை! ==@==

இன்று சென்னையில், கட்டுமான தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் பெரும்பாலும், பிகார் ஒரிசா மாநிலத்தவரே. மிகக்குறைந்த ஊதியம் கொடுத்தால் போதும் எனும் நிலையிலேயே அவர்கள் பயன் படுத்தப் படுகிறார்கள். அவர்தம் சோகம் தாங்கிய முக வடிவே அதனை வெளிப்படுத்தும். அம்மாநில உயர் அரசுப் பணியை விடுத்து, நடுவண் அரசில் பணிசெய்ய வந்த நண்பர், சில ஆண்டுகளுக்கு முன் வழங்கிய தகவல், முறையாக மாதம் தோறும் ஊதியம் வழங்கப் படாமையே வெளியே வந்தமைக்கு முதல் காரணம் என்பதாகும். முறையாக கல்வியறிவு பெறாத நிலையில், உடல் உழைப்பை நம்பி வெளி மாநிலத்துக்கோ, வெளி நாடுகளுக்கோ செல்வோர் அனைவரின் நிலையும் இதுதான். நம்முடைய நான்கு பெரு நகரங்களில், வாழ்வதற்கு சிறப்பாகவும், (மொழியறியா இடர்பாடு இருந்த போதிலும்) பாதுகாப்பாகவும் இருப்பது சென்னை மட்டுமே என, தில்லி, மும்பை, கொல்கத்தா நகரில் பிறந்து வளர்ந்த நண்பர்கள், கூறியுள்ளனர், கூறிக்கொண்டும் உள்ளனர். உலகம் வளர்ந்த வேகத்தில், நாமும் வளரமுடியாது போனது, அறியாமையோ, பழமை வாதமோ, எதோ ஒன்று. உலகில் அன்றும் இன்றும் என்றும், இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் உள்ள போராட்டமே, மத, இன, மொழிக்கலவரங்களாக வெளிப்படுகின்றன. வசதியும் வாய்ப்பும் உள்ளவனாலேயே, அறிவையும் திறனையும் வெளிப்படுத்த முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை. வசதி உள்ளவனாலேயே வாய்ப்பை முதலில் பெறமுடியும் என்பதும் வெள்ளிடைமலை. தன்னுடைய உரிமையை அறியாமலும், உணர்ந்து கொள்ள முடியாமலும், நம் நாட்டில் எத்துனையோ மக்கள் வாழ்ந்து கொண்டுதான் உள்ளார்கள். ===0===

## சிந்தித்து வாக்களிப்பீர்......

அரசியல் என்றுமே சாக்கடைதான்;
மூழ்காமலிருக்க எத்துனை பேருக்குத்தான் ஆசை?
சட்டத்தை செய்யும் வல்லுனராய்; அரங்கம் ஏற்னோர்,
ஓட்டைகளைக் களைந்து, ஒய்யார வரம்காண்பர்;
ஏழை ஏழையாய்; பணக்காரன் மேலும் ஏக,
அரசியல் மந்தை;
தேடி வாக்களிப்பீர்; தீயோரை இனங்களைந்து,
நாடும் நாளும் நமதென்று அறிவீர்;
நல்லன பிறக்க வழி காண்போம்!



## ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஆண்டொன்று பிறக்குதென்றால்; ஆயிரம் கனவுக் கோலம்,
மூண்டநல் அறிவின் கீர்த்தி; முகிழ்ந்தெழும் நாளைத் தேடும்!
ஆண்டவர் கொடுத்த ஆண்டே, ஆகிய வழக்காய் நிற்க;
நீண்டநல் உறவினாலே நெடிதுநாள் பழகிவிட்டோம்!

ஆன்றநம் முன்னோர் வழக்கின் ஆண்டுகள் பல ஆயினும்;
ஈன்றநம் குடியரசு தானும் ஏற்றதோர் ஆண்டு வழக்கம்;
ஆங்கதும் கொண்டோம் அல்லோம்; அவரவர் வழக்கில்,
ஓங்குமோர் முறையும் மறந்தோம்; எண்ணுவீர் மனத்திலேனும்;

கனவிலும் நினைவிலும் கழித்திடும் நாளிலும்;
கணக்கிலும் வழக்கிலும் கண்டிடும் அனைத்திலும்;
இணக்கமாய் நம்முடன் இணைந்து விட்டதால்,
வணக்கமாய் அனைவர்க்கும் வழங்கினேன் வாழ்த்து!
கவிஞர் கவிவளவன் 31.12.2013 - 23.59

---


**சத்தியத்தின் திறவுகோல்!** ஒளிமயமானவன், ஒளிபொருந்தியன், உள்ளொளியாய் நிறைபவன், இறைந்து கிடப்பவன், எல்லாமுமாய் நிறைபவன், அன்பின் வடிவானவன், அருளாளன், இப்படி, எண்ணும் வகையிலெல்லாம், நமக்கு காட்சியில் நிறைபவன், கருனையில் உறைபவன், அனைத்திலும் நிலையானவன், அனைத்திற்கும் உரையானவன். அவனை அன்பின் துணை கொண்டோ, அறிவின் வழி நின்றோ அடைய முயலுங்கள். அவனே சிவம், சிவத்துள் உரையும் சக்தி, ஐங்கரன், ஆனைமுகன், அருகன், முருகன், அல்லா, ஏசுவின் தந்தை, வேலவன், மாயவன், மாலன், கண்ணன், கடம்பன், இடும்பன், ஈசன், திருமால், அம்பிகை, செல்வி, அறிவின் தலைவி, கொற்றவை, வீரபத்திரன், கேசவன், மாதவன், அச்சுதன். யாவுமே அன்பின் வழியோ, அறிவின் துணையோ, எது கலனோ, அதுவே துணை, சத்தியத்தின் திறவுகோல்! **17-02-2017**

# பொங்கல் வாழ்த்து!

வண்ணமாய் வாழ்ந்த தமிழர்;
வகையெனச் செய்த பேறில்,
எண்ணமாய் குழைந்த நன்றி;
இயைந்திடும் நாளாம் பொங்கல்!
அன்னமாம் சோற்றைப் பொங்கி,
ஆக்களை அணைந்து ஏகி,
திண்ணமாய்க் கண்ட விழாவே
தீஞ்சுவைப் பொங்கல் நாளாம்!

நன்னிய அறிவின் பெருக்கால்,
நவின்றநல் கதிரின் மாற்றம்;
நுண்ணிய கணக்காய் செய்து,
பொங்கலைத் துணைக்கழைத்தார்!
மன்னிய வடதிசை மாற்றம்;
மகர சங்கராந்தி என்போர்,
எண்ணுவர் தமிழன் அறிவை?
ஏற்றத்தை நினைவராமோ!

திங்களென்று பெயரிட்டு அழைத்தாலும்,
தீஞ்சுவைத் தமிழர் வாழ்வில்;
அங்கமாய் நிற்பதுவோ அந்தக்
கதிரவன் சுழற்சி தானே!
பங்கமிலாத் தமிழர் அறிவே
பாரினில் நிறைந்ததென்போம்!
இங்கவர் அறிவை நாமும்
இயல்புடன் காத்து வாழ்வோம்!



அன்மையில் ஓர் இல்லத்தில் கேட்ட சம்பாஷணை. புதுசா ஒரு offer வந்தது, அதுனால இங்க paper போட்டுட்டேன். யான் ஒரு கனம் யோசித்தேன், படித்து முடித்த தினசரித் தாளை விற்பதற்கு கூடவா Offer தேடுவார்கள் என்று. அப்புறம் தயங்கிபடி அந்த நண்பரிடம் கேட்டபோது, பகிர்ந்த தகவல், அந்த இளைஞனுக்கு, ஒரு புதிய இடத்தில், நல்ல பணி கிடைத்துள்ளதாம், ஆதலால், இருக்கும் பணியை ராஜினாமா செய்ய, கடிதம் கொடுத்துள்ளார் என்பதே அது. விலகல் சமர்ப்பித்தல் என்பதற்கு நிகரான, ஆங்கிலச் சொல்லாட்சி.

=======0=======

## கண்ணான கண்ணனே!

கார்முகிலின் வண்ணனே!
பெண்ணாக்கி உயிர்களைத்தான்
பிரியமுடன் அணைப்பவனே!
தென்னாட்டு நாயகனே!

தேமதுரத் தமிழ்போலே
திசையெங்கும் ஒலிப்பவனே!
காண்பவர் கண்களைக்
கவர்ந்து அணைப்பவனே!

மண்ணகத்துக் காடுகளின்
மறையான முதல்வோனே!
தென்னகத்தில் தான் பிறந்து,
வடவோர் நாட்டுக்கும்
வாய்த்தப் பரம் பொருளே!

கண்களால் உனைக்காண
காதலால் மனம் ஏங்கும்!
எண்திசையும் நிறைந்தானை,
தென்னாட்டுக் கண்ணனாய்,
எந்நாளும் போற்றுவேன் நிறைந்து!
26-06-2020

**இ**சுலாமியர்களில் சீதனம் வாங்கும் பழக்கம் இல்லை. 'மெகர்' என்னும் சீதனம், பெண்ணுக்கு மணம் முடிக்கும் போது, மணமகன் வழங்குவார். ஒருக்கால், மணமுறிவு ஏற்பட்டால், அதனை வைத்துக் கொண்டுதான் அப்பெண் வாழ வேண்டும். இது, ஷரியத் எனப்படும் அவரது வாழ்வியல் கோட்பாட்டுள் அடங்கும். திரு இராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது, ஷாபானு என்பவருக்கு, இந்திய உரிமையியல் சட்டப்படி, வழங்கப்பட்ட ஜீவனாம்சம் கூடாது என இசுலாமியர் முறையிட, சட்டத்திருத்தம் கொண்டுவரப் பட்டது.

-----0———

## குடியரசு!

மக்களின் ஆட்சி என்றோர்;
மாட்சிமை மண்ணில் உண்டு!
தங்களைத் தாங்களே நின்று,
தகைவுடன் செய்யும் ஆட்சி!

கூடுதல் குறைகள் எல்லாம்,
கொடுமணல் வெயிலைப் போலே;
மாலை யில்நிறை வடைந்து,
மகிழ்வுடன் மாற்றிக் கொள்ளும்!

எல்லோரும் மன்னர் என்று,
எழுதாத சட்டம் நமக்குள்!
மகத்துவம் நிறைந்து மண்ணில்;
மக்களின் ஆட்சி கண்டோம்!

கூவிய குறைகள் யாவும்;
கூடியே களைந்து விடலாம்!
மக்களின் ஆட்சி போலே,
மாண்புடை ஆட்சி ஏது?!

**ஒரு சுதந்திரக் காலம்!**

கல்லூரி காலம் தொடங்கி,
பணியில் சேர்ந்தமர்ந்த ஓரிரண்டு ஆண்டுகள் மட்டுமே;
ஓர் ஆண்மகன் வாழ்வில் உன்னதமானவை!;
அஃது,
அன்னையின் பிடியிலிருந்து தப்பி,
மனைவியின் வலையுள் வீழ்வதற்கு முந்தைய காலம்!
சர்வ சுதந்திர மகோன்னத நிலை!
ஆனால்,
சில இளஞர்களோ,
காதல் எனும் மாயையுள் விழுந்து,
அந்த உன்னத காலத்தை,
உணராமல் போகிறார்கள்!
பாவமாய் பரிதவிக்கிறார்கள் பின் என்னாளும்!

**கல்வி!** சட்டப்பேரவையில் இலவசக் கல்வியைப் போராடி பெற்றுத்தந்த அடுத்த 20 ஆண்டுகளுக்குள், கல்வியை வியாபாரமாக்கும் நிலை ஏற்படக் காரணம் பெற்றோர்தான். ஆங்கில வழிக் கல்வியில் ஏற்பட்ட அபரிதமான மோகம், இட ஒதுகீட்டுப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள அரசியலார் செயல்படுத்திய திட்டமே, அதுவும் வசதி படைத்ததோர் விருப்பம்போல், வாழவே தனியார் கையில் கல்வி ஒப்படைக்கப் பட்டது. இன்னொருபக்கம், இட ஒதுகீடு எனும் சலுகையில் நாம் படித்து முன்னேற முடியும் என்னும் உண்மை அறியாது, அப்பாவிகளாய் இம்மண்ணில் நம் மக்கள் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டம் மட்டும் தான் அனைவரும் சமம் என்கிறது. உண்மை நிலை அப்படி இல்லை. அந்த ஒருசாரரில் இன்னும் பலர் தாழ்வுற்ற நிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரத்தில் மேம்பட்டர்வர்கள் தாம் நம் நாட்டில் நலமாய் வாழ முடியும். அடிப்படையில் இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையிலான போராட்டம் தான், சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. முதலில் நாம் அனைவரும், மனித இனத்தின் இன்னொரு பாதியான பெண்மையை மதிக்கப் பழக வேண்டும்; அனைத்து உயிர்களையும் மதிக்கப் பழகுமுன், சக மனிதர்களையும், மனிதர்களாக எண்ணிப் போற்றி வாழ வேண்டும்!.

## "சின்னத் தம்பி" யாகிய சித்தப்பா!



பிள்ளையாய் மண்ணில் யான் பிறந்த போது,
பிரியமாய்ப் பெயரிட்டு அசோகனாக்கி,
கிள்ளையாய் யானும் வளருங்காலை;
செல்லமாய் நிலைத்த உறவே 'சின்னத்தம்பி'

எந்தைக்கும் ஏனையோர்க்கும் இளையராகி
பிறந்த தனால் வீட்டில் அவர் 'சின்னத் தம்பி'
அதனால், எங்கள் ஏட்டிலும்; பாட்டிலும்;
எங்களுக்கும் அவர்தான் 'சின்னத் தம்பி'!

அண்ணன் மார் பிள்ளைகள் தாம்;
தோள் மீது இருபுறமாய் அமர்ந்தே,
ஆடித் தலை கோதி விளையாட,
அன்புடனே புன்சிரிப்பாய் மகிழ்ந்திடுவார்!

வன்மமாய் மீசையதை இழுக்கும் போதும்,
வலிதாங்கா நிலையதிலும், தவழும் சிரிப்பே!
கன்னத்தில் தாளமிட்டு கடித்த மிட்டாய்;
அவர் வாயிலிட்டு, பின் கிண்ணென,

அவர்தம் வாயினுள்; விரல் கூட்டி,
எடுத்தே நாங்கள் சுவைக்க மகிழ்வார்!
பள்ளிக்கு முதல் நாளாம் எங்களுக்கு,
தன்காசில் புதுச்சட்டை தைத்து மகிழ்ந்தார்!
-வேறு-
காலம் பல கடந்தும்; கரங்கரமாய் மனம்பிரிந்தும்;
ஆலம் விழுதினைப் போல், ஆன்ற அன்புடையார்!
நாளும் கிழமையதில் நலம் கேட்டு வாழ்த்துரைப்பார்!
ஞாயிற்றுக் கிழமை தன்னில் நலம் கேட்கும் அழைப்பிருக்கும்!

வெடிச்சிரிப்பு வேந்தரவர்; மறுப்போலித்து கதை சொல்வார்;
மறுபடியும் கதை கேட்பார்; பழங்கதைகள் தொகுத்திடுவார்;
மனம்ததும்ப இளமை கூட்டி மகிழ்ந்திருப்பார் அன்நிலையில்!
மனம் தன்னில் நிலைகொண்ட மருவிலா "சின்னத் தம்பி"

காலன் அவர் கரந்தொட்டான்; கனிவான அன்பொன்றை,
நானிலத்தில் நாமிழந்தோம்! எங்கு காண்போம் இனி?

**கு.ப. அசோகன்,** 25.12.2014



## நூலாசிரியர் குறிப்பு!

இந்நூலாசிரியர், இன்றைய திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண்அரசில், சென்னையில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து பணி நிறைவு கண்டுள்ளார். அடிப்படையில், கணித மாணவர்; முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினிப் பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் முதுகலைப் பட்டத்தோடு, இளநிலைச் சட்டவியலும் பயின்று, தேர்ச்சிப் பெற்றுள்ளார். 'கல்வியில் கரை இல' என்பதாக விளங்குகிறார்.

எழுத்தும் எனக்கொருப் பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இவருக்கு, இதுவும் ஒரு வல்லமையாக விளங்குகிறது, எழுத்தாற்றலோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையோடு, கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, **"கனவின் ஓசைகள்"** எனும் பெயரில் தற்போது, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர்.

யாதவக் கண்ணன் போலே,
    யான் கண்ட தெய்வம் இல்லை!
மாதவன் போல்வான் ஈசன்,
    மரியவள் குழந்தை ஏசு;
சோதரர் சொல்லும் அல்லா;
    சொல்லத்தான் வேறு அன்றி,
யாதுமே ஒன்றாம் அந்த,
    ஈசனின் வடிவம் தானே!

**- கவிவளவன் (1990)**

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்,
செம்பாக்கம், சென்னை - 73
www.ezhuththukkalam.co.in
www.epublish.co.in
அலைபேசி:- 9940061280